கல்கி

KALKI 3-3-91 ரூ. 2.50



காப்பகத்தில் குழந்தை அம்மாவுக்கு ஏங்குமா...?

தாய்மை அடையும்
பருவத்திலே
உங்கள் இருவருக்காக
‘உண்ண’
வேண்டுமே!




உங்களுக்குத் தேவை அதிக ஊட்டச்சத்துள்ள

புதிய காம்ப்ளான்®

விட்டாமில்க்®

உங்களுக்குள் இன்னொரு புதிய உயிர், உங்கள குழந்தை வளர்ந்து கொண்டிருக்கிறது. இந்த முக்கிய நேரத்தில் உங்கள் ஆரோக்கியத்திற்கும், சிசுவின் வளர்ச்சிக்கும் போதுமான கூடுதல் ஊட்டச்சத்துக்கள் தேவை.

காம்ப்ளான்—விட்டாமில்க் உங்களுக்கும், பிறக்கப்போகும் உங்கள் குழந்தைக்கும், தேவையான ஊட்டச்சத்துக்களையும் மற்றும் காம்ப்ளானின் எல்லா நற்பயன்களையும் கொண்டது. இதில் ஃபோலிக் ஆஸிடு, பால் புரதம் (22.2 கிராம்), வைட்டமின்கள் A, B_6 மற்றும் C, இரும்புச் சத்து, அயோடின், கால்ஷியம், ஸிங்க் மற்றும் மக்னீஷியம், தேவையான அளவில் அடங்கியுள்ளது.



ரெகுலர் * சாக்லேட்

தினமும்
2 கப்புகள்

உடல் நலத்தின் உறைவிடம் க்ளாக்ஸோ

GL/V/P/91/R-TAM

கேபிள் டி.வி. என்ற பெயரில் கொள்ளையா?

'கேபிள் டி. வி. ஏரியா ஏஜென்டுகள் தேவை' என்று சில நிறுவனங்கள் நாளிதழ்களில் விளம்பரங்கள் வெளியிட, இந்த விளம்பரங்கள் குறித்துப் பொதுமக்களை எச்சரித்துத் திரைப்பட வர்த்தக சபை அறிக்கைகள் கொடுக்க, இருசாராரும் போட்டி போட்டுக் கொண்டு மக்களைக் குழப்பும் வேளையில் இரு தரப்பினர் கருத்தையும் அறியச் சம்பந்தப்பட்டவர்களைப் பேட்டி கண்டோம்...


"யுனைடெட் கேபிள் ஸிஸ்டம் ஆஃப் இந்தியா" நிறுவனத்தின் மானேஜிங் பார்ட்னர் வி. ராமு:

கேள்வி: கேபிள் டி. வி. என்பது என்ன?

பதில்: ஒரு ஏரியாவில், எங்கள் அங்கீகாரம் பெற்ற ஏஜெண்ட் ஒருவர் தன்வசம் ஒரு வி. சி. பி. அல்லது வி. சி. ஆர். வைத்துக் கொண்டு, கேபிள் ஒயர்கள் வழியாக அந்தப் பகுதியில் உள்ள எல்லா இல்லங்களிலும் உள்ள டி.வி.களுக்கு இணைப்புக் கொடுத்து, பல்வேறு நிகழ்ச்சிகளை ஒளிபரப்பலாம். இவ்வாறு ஒளிபரப்ப எங்கள் நிறுவனம் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சி தயாரிப்பாளர்களிடம் காப்பி ரைட் உரிமை பெற வேண்டும். முன்னேறியுள்ள உலக நாடுகளில் இந்த கேபிள் டி. வி. முறை பிரபலமாகியுள்ளது. தற்போது இந்தியாவிலும் பிரசித்தி பெற்று வருகிறது. இந்த விஞ்ஞான வளர்ச்சியைப் பொது மக்கள் வெகுவாக வரவேற்கின்றனர். எங்கள் நிறுவனம், படித்த, வேலையில்லாத பட்டதாரிகளால் சென்ற மாதம் ஆரம்பிக்கப்பட்டது. இதன் மூலம் 50,000 இளைஞர்கள் வேலை வாய்ப்புப் பெற முடியும். இது ஒரு சுய வேலை வாய்ப்புத் திட்டம் என்றே சொல்லலாம்.

கேள்வி: திரைப்படங்களை கேபிள் டி.வி. யில் காண்பிக்க உரிமை கிடைத்துள்ளதா?

பதில்: பல திரைப்படத் தயாரிப்பாளர்கள் காப்பிரைட் கொடுத்துள்ளனர். ஏறக்குறைய நூறு படங்களுக்கு நாங்கள் காப்பிரைட் வாங்கி வைத்துள்ளோம்.


• ராமு

கேள்வி: கேபிள் டி. வி., யில் திரைப்படங்களைத் திரையிட அனுமதிப்பதில்லை என்று திரைப்படத் துறை முடிவு செய்த பிறகு உங்களுக்கு எப்படி காப்பிரைட் கிடைத்தது?

பதில்: இதோ! தயாரிப்பாளர்கள் எங்களுடன் செய்து கொண்ட ஒப்பந்தப் பத்திரம் உள்ளது. அதனால்தான் துணிந்து நாங்கள் விளம்பரம் தருகிறோம்.

கேள்வி: பம்பாய் உயர்நீதிமன்றம் கேபிள் டி.வி. மூலம் திரைப்படங்களை வெளியிடுவது சட்ட விரோதம் என்று சொல்லியிருப்பது பற்றி...

பதில்: நவம்பர் 15ந் தேதி 'India Today' பத்திரிகையில் 'Business feature' பகுதியில் "காப்பிரைட் உரிமையாளர்களிடமிருந்து அங்கீகாரம் பெற்றபின் திரைப்படங்களை வெளியிட முடியும்" என்று பம்பாய் நீதிமன்றம் கூறுவதாகப் பிரசுரமாகியுள்ளது. மேலும் 1885ம் வருட Indian Telegraph Act ஐ வைத்துக் கொண்டு 21 ஆம் நூற்றாண்டு டெக்னாலஜியைக் கட்டுப்படுத்த வேண்டியுள்ள விநோதமும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கேள்வி: தங்கள் நிறுவனம் நடிகர் கமலஹாஸனுக்கு நன்றி சொல்லி விளம்பரப்படுத்தியதை அவர் மறுத்து அறிக்கையளித்திருப்பது பற்றி...

பதில்: ஒரு பிரபல மாத இதழில் நடிகர் கமலஹாஸன் அவர்கள் கூறியிருந்த வாக்கியங்கள் அவருக்கு நாங்கள் நன்றி தெரிவிக்கும் வகையில் அமைந்திருந்தன. "கேபிள் டி. வி. தற்காலிகமாகத் தங்க வந்திருக்கும் விருந்தாளியல்ல. வியாபார வீட்டில் கேபிள் டி. வி.க்கு ஓர் அறையை ஒதுக்கியே ஆக வேண்டும். கேபிள் டி. வி.க்காரர்கள் சினிமாவுக்குக் கப்பம் கட்டும் சிற்றரசர்களாக இருப்பதே ஆரோக்யம். இது நிகழும்" என்று கமலஹாஸன் சொன்னதற்கு நாங்கள் நன்றி சொல்ல

வேண்டியவர்களானோம்.

கேள்வி: பின் அவர் மறுப்பு கூற வேண்டிய காரணம் என்ன?

பதில்: அவர் நாங்கள் வியாபாரத்திற்காக அவர் பெயரை உபயோகப்படுத்தியதாகத் தவறாக நினைத்ததே காரணம். எல்லோரும் எல்லாமும் "பெற வேண்டும் என்ற சமுதாய சிந்தனையே எங்கள் குறிக்கோள்.

கேள்வி: திரைப்படங்கள் தவிர வேறு என்ன நிகழ்ச்சிகளைக் காட்ட முடியும்?

பதில்: குழந்தைகளுக்கான கல்வி, கார்ட்டூன், விஞ்ஞானம், விளையாட்டு, பள்ளிக் குழந்தைகளின் ரைம்ஸ், குடும்பத் தலைவிகளுக்கான குறிப்புகள், ஆரோக்யம், விவசாயம், சிறுதொழில், சாகசப் படங்கள் போன்ற பல நிகழ்ச்சிகள் அறிவு வளர்ச்சிக்கும், பொழுதுபோக்குக்கும் உதவும். எங்கள் நிறுவனமே பிரத்தியேகமாகப் பல நிகழ்ச்சிகளைத் தயாரிக்கும் திட்டமும் இருக்கிறது.

கேள்வி: கேபிள் டீ. வி.யினால் திரைப்படத் துறை நலிவடையுமென்று திட்டவட்டமாகக் கூறுபவர்களுக்கு நீங்கள் என்ன சொல்லப் போகிறீர்கள்?

பதில்: பெங்களூரில் கூட முதலில் திரைப்படங்கள் நிறையப் போட ஆரம்பித்து பிறகு பொது மக்களே போரடித்துப் போய் வேறு நிகழ்ச்சிகள் போடும்படி கேட்டுக் கொண்டுள்ளதாகத் தகவல் வந்துள்ளது. எங்கள் நிறுவனத்தால் சினிமாத் துறை வளருமே தவிர நிச்சயம் பாதிக்கப்படாது. மேலை நாடுகளில் டீ.வி., கேபிள் டீ.வி., சினிமா, வீடியோ போன்றவை ஆரோக்யமான போட்டியுடன் பல சானல்களில் பல நிகழ்ச்சிகளை அளிக்கின்றன.

ஜி. வெங்கடேஸ்வரன். (ஜி.வி) துணைத் தலைவர், திரைப்பட வர்த்தக சபை:

கேள்வி: கேபிள் டீ. வி. எந்த வகையில் திரைப்படத் தொழிலைப் பாதிக்கும் என்று நினைக்கிறீர்கள்?

பதில்: கேபிள் டீ.வி.யில் திரைப்படங்களைக் காண்பிப்பதால் சேலம், தருமபுரி மாவட்டம், திருச்சி, தஞ்சாவூர், புதுக்கோட்டை போன்ற இடங்களில் எந்தப் படங்களையும் வாங்க மாட்டோம் என்று ஏற்கெனவே வர்த்தகர்கள் நிராகரித்துள்ளனர். இதனால் திரை அரங்குகளைக் காலவரம்பின்றி மூடும் அபாய நிலை உருவாகியுள்ளது.



ஜி.வி.

கேள்வி: சினிமாக்களைக் கேபிள் டீ.வி.யில் காண்பிக்க உரிமைகளை விலை கொடுத்து வாங்கியவர்கள் அவ்வாறு போடுவதில் தவறென்ன?

பதில்: கேபிள் டீ.வி. ரைட்ஸ் வாங்கியிருந்தால் போடலாம்தான். ஆனால் இன்று வரை அது போன்ற ரைட்ஸ் கொடுக்கப்படவில்லை.

கேள்வி: ரைட்ஸ் கொடுக்காமல் பேப்பரில் எப்படி விளம்பரம் வருகின்றது?

பதில்: பொது மக்களை ஏமாற்றத்தான். ஏற்கெனவே 'வீடியோ ரைட்ஸ்' வைத்துள்ளவர்கள் நலிந்து போன, விவரம் புரியாத சில பழைய புரொட்யூசர்களை ஏமாற்றி எழுதி வாங்கியிருக்கலாம். நாங்கள் **'Madras High Court'**இல் வழக்குத் தொடுத்திருப்பதால் அவர்கள் **'Stay'** வாங்கியுள்ளனர். வழக்கின் முடிவு தெரிவதற்குள் பொது மக்களின் பணத்தைக் கொள்ளையடிக்க அவசரக் கோலத்தில் நுழைந்துள்ளனர். கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைப்பது போல யாருடைய படங்களை எடுத்து யார் போடுவது? பணம் சம்பாதிப்பது?!

கேள்வி: திரைப்படங்கள் மட்டுமின்றி, விஞ்ஞானம், விளையாட்டு, கார்ட்டூன்ஸ் போன்ற பல்கலை நிகழ்ச்சிகள் கேபிள் டீ.வி. மூலம் போட்டால் நல்லதுதானே? குழந்தைகளின் அறிவு வளர்ச்சிக்கு உதவுமே!


பதில்: நீங்கள் சொல்வதை ஒப்புக்கொள்கிறேன். ஆனால், கமல், ரஜினி போன்ற நடிகர்களின் புகைப்படங்களைப் போட்டுத்தானே விளம்பரமே தருகிறார்கள்! கார்ட்டூன், விஞ்ஞானப் படத்தைப் போட்டு விளம்பரப்படுத்த வேண்டியதுதானே? அதனால் மற்ற நிகழ்ச்சிகள் என்று கூறுவதெல்லாம் சுத்த ஏமாற்று வேலை. முக்கிய நிகழ்ச்சியாகத் திரைப்படங்கள் தான் இருக்கும். மேலும் இரவு நேரங்களில் ஆபாசப் படங்கள் காட்டப்படுவதாகவும் பல் புகார்கள் வந்துள்ளன. நமது கலாசாரத்திற்கே ஆபத்தை விளைவிக்கும் என்பதும் எங்கள் வாதம்.

கேள்வி: சென்஬ார் செய்யப்பட்ட வீடியோ காஸெட்டுகளைத்தான் விற்க வேண்டும் என்று சட்டம் வந்துள்ளதே. அதன்படி சென்ஸார் செய்த காஸெட்டுகளைக் கேபிள் டீ.வி.யில் போடுவதில் தடையென்ன?

பதில்: வீடியோ காஸெட் விற்பனையாளர்களுக்கே அந்தச் சட்டம் உருவானது. கேபிள் டீ.வி.க்காரர்கள் நாங்கள் கேஸட்டை விற்கவில்லையே, போட்டுத்தானே காண்பிக்கிறோம்'' என்ற முறையில்

தப்பி விடுவார்கள். அதோடு ஒவ்வொரு ஊரிலும், மூலை முடுக்குகளிலும் நாம் சென்று ஆராய்ந்து பார்க்கவும் முடியாது. அதோடு கேபிள் டி. வி. ஒயர்கள் தெருக்களைக் கடக்கக் கூடாது என்றும் சட்டம் உள்ளது. அதனால் சட்டப்படி கேபிள் டி.வி. முறை குற்றம்தான்.

கேள்வி: '**India Today**' பத்திரிகையில் '**Business feature**' பகுதியில் காப்பிரைட் ஒப்புதல் இருந்தால் திரைப்படங்களைக் காண்பிக்கலாம் என்பது போல எழுதியிருக்கிறார்களே!



* சித்திக்

பதில்: நான் முன்பே சொன்னது போல காப்பிரைட் இதுவரை யாருக்கும் கொடுக்கப்படவே இல்லை. இதுபற்றிப் பேசி முடிவெடுப்பதற்குள் அவசரப்பட்டு விளம்பரப்படுத்தி ஏமாற்றுகிறார்கள். திரையுலகப் பிரமுகர்கள் ஆலோசனைக் கூட்டம் ஒன்று *16.2.91* அன்று கூட இருக்கிறது. அதற்குள் கேபிள் டி. வி.க்காரர்கள் அவசர அவசரமாய்த் தினமும் சாதுர்யமான, மயக்கும் வார்த்தைகளால் விளம்பரங்கள் செய்து மக்களோடு அரசாங்கத்தையும் ஏமாற்றப் பார்க்கிறார்கள். அதனால்தான் நாங்களும் அவசரமாய் 'எச்சரிக்கை' விளம்பரம் அளிக்க வேண்டியதாயிற்று.

கேள்வி: அரசாங்கத்தை ஏமாற்றுகிறார்கள் என்று எப்படிச் சொல்கிறீர்கள்?

பதில்: சில வாரங்களுக்கு முன் நம் டி. ஜி. பி. துரை, சட்டவிரோதமாகக் கேபிள் டி. வி. ஒளிபரப்பும் நபர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிக்கை கொடுத்தும் இது வேகமாகப் பரவி வருகிறது. மேலும் தியேட்டர்காரர்கள் நேரடியாகப் பாதிக்கப்படுவார்கள். மாதம் பல ஆயிரங்கள் வரை கேளிக்கை வரி கட்டக் கூடியவர்கள் வருமானப் பாதிப்பால் சில ஆயிரங்கள் அல்லது மிகக் குறைவாகவே கட்ட நேரிடுவதால் அரசுக்கு எவ்வளவு நஷ்டம்!

கேள்வி: கேபிள் டி. வி.யால் பல ஆயிரம் படித்த வேலையில்லாத இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும் என்று சொல்கிறார்களே?

பதில்: தமிழகமெங்கும் ஏற்கெனவே உள்ள 2400 தியேட்டர் ஆட்களை நாம் பாதுகாக்க வேண்டும். அவர்களை அழித்து விட்டு அவர்கள் வேலையைக் கெடுத்து விட்டு, புதியவர்கள் எப்படி வேலைக்கு வர முடியும்? இது என்ன நியாயம்?

கேள்வி: உங்கள் அடுத்த கட்ட நடவடிக்கை என்னவாக இருக்கும்?

பதில்: **16.2.91* அன்று நடக்கும் ஆலோசனைக் கூட்டத்தில் முடிவாகும். முதல் கட்டமாகத் திரையுலகப் பிரமுகர்கள் அனைவரும் சேர்ந்து கவர்னரைச் சந்தித்து மனு கொடுப்போம். வழக்கின் முடிவு விரைவாகத் தெரிய வர வேண்டுமென்று கேட்டுக் கொள்வோம். முடிந்தவரை நேரடிக் கண்காணிப்பு வேலையிலும் இறங்க வேண்டி இருக்கும். சில தனிப்பட்ட ஆட்கள் அடிக்கப் போகும்பகல்கொள்ளைக்கு முற்றுப் புள்ளி வைக்க, அரசாங்கம் முன்வந்தால்தான் திரைப்படக் கலைஞர்களோடு, பொது மக்களுக்கும் பாதுகாப்பு.மிக விரைவில் முடிவு தெரிந்துவிடும் என்றே நினைக்கிறேன்.

சினி இந்தியா வீடியோ கடை நிர்வாகி சித்திக் கூறுகிறார்:

"பம்பாயில் கேபிள் டி. வி. காட்டப்படும் முறைக்கும் இங்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதற்கும் நிறைய வித்தியாசம் உண்டு. அங்கே சினிமா டிஸ்டிரிபியூட்டர்களுக்குச் சமமாகப் பணம் கொடுத்துப் புதுப் படங்களை வாங்கி, கேபிள் டி. வி. யில் வெளியிடுகிறார்கள். இங்கு அப்படி இல்லை. செலவில்லாமல் கேபிள் ரைட்ஸ் பெற முயற்சி நடக்கிறது. தனிப்பட்ட நபர்களின் பேராசைக்கு மக்கள் பலியாகிவிடக் கூடாது என்பதே எங்கள் குறிக்கோள். எங்களைப் போன்ற வீடியோக் கடை நிர்வாகிகளை நம்பிப் பலர் கஷ்டப்பட்டு, கடன் வாங்கிப் பணத்தைப் புரட்டி 'வீடியோ லைப்ரரி' வைத்துள்ளனர். அவர்களுக்கெல்லாம் பெருத்த நஷ்டம் ஏற்படும். அவர்களை நசுக்கிவிட்டுப் பணத்தைச் சேர்க்க எங்களுக்கு இஷ்டமில்லாததால்தான், காப்பிரைட் உள்ளது என்று கூறிக் கேபிள் டி. வி. யை ஆதரிக்க எங்கள் மனம் ஒப்பவில்லை."


— பானுமதி இராமச்சந்திரன்

---

* இக் கூட்டத்தில், முதல் கட்டமாக இந்த மாதம் 22ந் தேதி அன்று ஃபிலிம் சேம்பரிலிருந்து அனைவரும் ஊர்வலமாக ராஜ்பவனுக்குச் சென்று கவர்னரிடம் மனு கொடுத்து, "டோக்கன் ஸ்டிரைக்" செய்வது என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது.

அரசிடமிருந்து தகுந்த ஆதரவு கிடைக்கவில்லையென்றால் அடுத்த கட்டமாக மார்ச் 1ந் தேதி முதல் திரைப்படம் சம்பந்தப்பட்ட அனைத்து நிர்வாகங்களும் (திரை அரங்குகள் உள்பட) காலவரம்பின்றி வேலை நிறுத்தம் செய்வதாகவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் ஆந்திரப் பிரதேச உயர்நீதி மன்றம், கேபிள் டி. வி. என்பது சட்டவிரோதமானது என்று தீர்ப்பளித்திருக்கிறது என்றும் வருடத்துக்கு என்பது கோடி ரூபாய் வருமானத்தை அளிக்கும் திரைப்படத் துறையின் கோரிக்கையைத் தமிழக அரசு நிச்சயம் நிராகரிக்காது என்றும் ஜி. வி. அவர்கள் நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்.









காப்பகத்தில் குழந்தை அம்மாவுக்கு ஏங்குமா...?

விலைவாசி ஏற்றம் ஒருபுறம். வாழ்க்கை வசதிகளைப் பெருக்கிக்கொள்ள வேண்டும் என்கிற விழைவு இன்னொரு புறம். 'உயர் விலைப் பொருள்கள்' என்று ஒரு காலத்தில் முத்திரை குத்தப்பட்டிருந்த மிக்ஸி, ஃப்ரிஜ், கலர் டி.வி., வி.ஸி.ஆர்., வாஷிங் மெஷின் போன்றவை அன்றாடப் புழக்கத்துக்கு அவசியமாகி விட்டன என்று கருதுகிற நிலை. பெருகி வரும் இந்தப் பொருளாதாரத் தேவைகளைச் சமாளிக்கக் கணவன் – மனைவி இருவருமே வேலைக்குப் போய்ச் சம்பாதிக்க வேண்டிய அவசியத்துக்கு உள்ளாகி விடுகின்றனர்.

* ஜெயஸ்ரீ





* வித்யா

* உஷா





* மாலதி பணிக்கர்



* பேராசிரியர் ஜெயச்சந்திரன்



* லக்ஷ்மி – குழந்தைகளுடன்

கூட்டுக் குடும்பம் என்பது அநேகமாக இல்லையென்றே ஆகிவிட்ட நிலையில், பிறக்கும் குழந்தையை, அது பள்ளிக்குச் செல்லும் வயதை எட்டும் வரையில், எப்படிச் சமாளிப்பது?

நடுத்தர வர்க்கத்தினரின் இந்தத் தேவையை 'கிரச்' பூர்த்தி செய்கிறது.

''கூட்டுக் குடும்ப முறை இல்லாமல் போய் விட்டதற்கு நாம் யாரையும் குற்றம் சாட்ட முடியாது'' என்கிறார் பிரேமலதா. ''பெற்றோரின் ஊரிலேயே பிள்ளைக்கு வேலை கிடைப்பதில்லை. பழகிப் போன ஊரையும் சொந்த வீட்டையும் விட்டுவிட்டு வர முக்கால்வாசிப் பெற்றோருக்கு விருப்பம் இருப்பதில்லை. தனிக் குடித்தனம் நடத்துகிறபோது, இருக்கும் விலைவாசியைச் சமாளிக்கக் கணவன் – மனைவி இரண்டு பேருமே வேலைக்குப் போகத்தான் வேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட நிலையில் கிரச்கள் ரொம்பவும் வசதியாக இருக்கின்றன.''

''பல சந்தர்ப்பங்களில், குடும்பங்களில் 'அட்ஜஸ்ட்மெண்ட்' ஏற்படாமல் போவதால் கூடத் தனிக்குடித்தனங்கள் அமைந்து விடுகின்றன. அப்படிப்பட்ட சூழ்நிலையிலும் குழந்தைகளைப் பார்த்துக் கொள்ளக் கிரச்தான் துணை'' – இப்படிக் கூறுகிறவர் உஷா ராஜ்குமார்.

இருவருமே வங்கியில் பணியாற்றுகிறவர்கள்.

இபபடி வேலைக்குப் போகும் தாய்மார்கள் மட்டும்தான் தங்கள் குழந்தைகளை கிரச்சில் விட்டுச் செல்கிறார்கள் என்பதில்லை. ''வீட்டிலேயே இருக்கும் இல்லத் தலைவிகள் கூடக் குழந்தைகளை கிரச்சுக்கு அனுப்பி வைக்கிறார்கள்'' என்கிற தகவலை அளிப்பவர் மாலதி பணிக்கர். அதற்கு அவர்கள் கூறும் காரணம்: 'செய்கிற விஷமம் தாங்க முடியவில்லை!'

அன்னை வேளாங்கண்ணி உயர் நிலைப் பள்ளியுடன் இணைந்ததாக, ஏறக்குறைய 24 ஆண்டுகளாக கிரச் நடத்தி வருகிறார் மாலதி பணிக்கர். ''சுமார் 40 நாள் குழந்தை கூட கிரச்சுக்குக் கொண்டு வந்து விடப்பட்டதுண்டு – அதன் தாயாரின் உடல் நிலை காரணமாக'' என்று சொல்லும் இவர், தெரிவிக்கும் இன்னொரு கருத்து: ''கூட்டுக் குடும்பமாக இருந்தால் மட்டும் என்ன? குழந்தையைப் பார்த்துக் கொள்வதில் சலிப்பு ஏற்பட்டுத் தன் மகளின் வீட்டுக்குப் போய் விடும் மாமியார்கள் 'எத்தனை பேர் இல்லை!''

எண்ணிக்கையில் பம்பாய் அளவுக்கு இல்லாவிட்டாலும் சென்னையில் கிரச்கள் பெருகி வருவது உண்மை. பேட்டைக்கு நாலைந்து என்றிருப்பது தெருவுக்கு ஒன்றிரண்டு என்கிற அளவுக்குப் பெருகுவதற்கு வாய்ப்புகள் உள்ளன. நடுத்தர வர்க்கத்தினரின் தேவையை கிரச் பூர்த்து செய்கிறது



என்றாலும், குழந்தையின் மனவளர்ச்சிக்குத் தேவைப்படும் தாயின் அன்பையும் அரவணைப்பையும் அதனால் தர இயலுமா?

''முடியாது என்றுதான் கூற வேண்டும்'' என்கிறார் மனத் தத்துவப் பேராசிரியர் ஜெயச்சந்திரன். ''கிரச் என்று மட்டும் இல்லை. கூட்டுக் குடும்பமாக இருந்து, தாய் வேலைக்குப் போகும் போது குழந்தையைக் கவனித்துக் கொள்ள வீட்டில் பெரியவர்கள் இருந்தாலும் கூட இதே பதில்தான். காரணம், தாயின் இடத்தை வேறு யாராலும் நிரப்ப முடியாது. தாயைப் புரிந்து கொள்ளும் அளவுக்குக் குழந்தை வேறு யாரையும் புரிந்து கொள்வதில்லை. பிறவியிலேயே பார்வையை இழந்த குழந்தை, ஏன், மூளை வளர்ச்சி சரிவரப் பெற்றிருக்காத குழந்தை கூடத் தன் தாயைக் கண்டிப்பாக இனம் கண்டு கொண்டு விடும்...''

சுமார் 120 குழந்தைகள் கொண்ட கிரச்சை நடத்தி வரும் மாலதி பணிக்கரும் கூட இதே கருத்தைத்தான் கொண்டிருக்கிறார். '''மதரிங்' என்பது இணையற்றது. மற்றவர்கள் எவ்வளவுதான் அன்பு செலுத்தினாலும் அதற்கு ஈடு செய்ததாக ஆகாது.''

தாயின் அரவணைப்புக் குறித்தும் குழந்தை பெறும் மன வளர்ச்சி பற்றியும் சுவையான விவரங்களைத் தருகிறார் பேராசிரியர் ஜெயச்சந்திரன் —

''முதல் இரண்டு வயதில் குழந்தை பெறும் மன வளர்ச்சி மிக முக்கியமானது. இந்த வயதில் இந்தியக் குழந்தைகள் மேல் நாட்டுக் குழந்தைகளை விடச் சற்று அதிகமான, துரிதமான மன வளர்ச்சி பெறுகிறார்கள். அதன் பின்? நிலைமை நேர் மாறாகி விடுகிறது. மேல் நாட்டுக் குழந்தைகள் எங்கேயோ மேலே மேலே போய் விடுகிறார்கள். அதற்குக் காரணம் இருக்கிறது.

'''ஸ்டிமுலண்ட்' என்று சொல்வார்கள். அதாவது, மன வளர்ச்சியை ஊக்குவிக்கும் சூழ்நிலையும் சாதனங்களும். இந்தச் சாதனங்களில் விளையாட்டுப் பொருள்களும் அடங்குகின்றன. இங்கே ஐம்பது கிரச்களில் கிடைக்கக் கூடிய இத்தகைய அத்தனை ஸ்டிமுலண்ட்களையும் ஒன்று திரட்டினாலும் கூட அங்கே ஒரேயொரு வீட்டில் காணப்படுவதை விடக் குறைவாகவே இருக்கும்.

''குழந்தையின் மன வளர்ச்சிக்குத் தாய் ஒரு முக்கியமான ஸ்டிமுலண்ட். தாயின் மன நிலை கூடக் குழந்தையைப் பாதிக்கக் கூடியது. 'தாய்ப்பாலுடன் கூட வீரத்தையும் சேர்த்துக் குழந்தைக்கு ஊட்டினாள்' என்று இலக்கியங்களில் சொல்லப்பட்டிருப்பது மிகைப்படுத்திக் கூறப்படும் ஒன்றல்ல. குழந்தை, தாயின் மார்பிலிருந்து பால் அருந்தும் போது, அந்த நேரத்தில் உள்ள அவளது மனநிலை குழந்தையையும் பாதிக்கிறது என்பது மனத்தத்துவ ஆராய்ச்சியாளர்களின் கருத்து. அந்த நேரத்தில் தாயின் மனநிலை ஆத்திரம், கோபம், அல்லது இதுபோன்ற வேறு வகையான உணர்ச்சிகளுக்கு ஆட்பட்டிருந்தால் குழந்தைதிருப்திஉணர்வைப்பெறுவதில்லை. இந்த அதிருப்தி பல வருடங்களுக்குப் பிறகும்கூட உள்ளுக்குள் நீடிக்கிறது. வளர்ந்த பின் புகை பிடிக்கும் பழக்கம் ஏற்படுவது இத்தகைய அதிருப்தி உணர்வினால்தான்' என்று மனத்தத்துவ நிபுணர்.... ஃப்ராய்டு கூறியிருக்கிறார். எனவே தாய் குழந்தையுடன் இருப்பதும், அந்த நேரத்தில் ஆரோக்கியமான எண்ணங்களை, சூழ்நிலையை குழந்தைக்கு வழங்க முயற்சி செய்வதும் அவசியம்....''

இந்தக் கருத்தை ஏற்கிறார் பிரேமலதா. ''குழந்தையின் மனவளர்ச்சிக்குத் தேவைப்படும் தாயின் அரவணைப்பு கிரச்சில் முழுமையாகக் கிடைக்க முடியாது என்பது சரிதான். அதற்காகக் கணவன் — மனைவி இருவரும் வேலைக்குப் போகாவிட்டால் குடும்பத்தைச் சமாளிப்பது எப்படி?''

மேலும், தாய்ப்பாலுடன் ஆரோக்கியமான சிந்தனைகளைக் குழந்தைக்கு ஊட்ட வேண்டும் என்றால், அம்மாவின் மனநிலையும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். பட்ட உயர் படிப்பும், தொழிற்கல்வியும் பயின்று முன்னேறும் பெண்கள், வீட்டிலேயே முடங்கிக் கிடந்தால் அவர்களுக்குச் சாதனை உணர்வு அற்றுப் போய் மனக் கிலேசங்கள் தான் அதிகரிக்கும்.

தாய்மையும் குடும்ப நலம் பேணலும் சாதனைகள்தானே என்ற வாதம் இன்றையச் சூழலில் விலைபோகாது. அவற்றைச் சாதனைகளாக உலகம் இன்று அங்கீகரிப்பதில்லை!

எனவே பெண்கள் பொருளாதார நோக்குக்காக மட்டுமின்றி மனநிறைவுக்காகவும் வேலைக்குப் போகத்தான் வேண்டியுள்ளது. குழந்தைகளைப் பார்த்துக் கொள்ள ஓர் ஏற்பாடு செய்தே ஆக வேண்டியுள்ளது.

கிரச்சில் குழந்தையை விட விருப்பமில்லை, வீட்டிலும் பெரியவர்கள் யாரும் இல்லை என்னும் போது மாற்று ஏற்பாடு என்ன? குழந்தையைக் கவனித்துக் கொள்ள ஒரு ஆயாவை நியமிப்பது தான்.

''பம்பாயில் இதற்கென்றே 'பேபி ஸிட்டர்'கள் உண்டு'' என்கிறார் மாலதி பணிக்கர். ''பகல் முழுவதும் பக்கத்திலிருந்து பார்த்துக் கொள்வதற்காக ஏற்பாடு செய்யப்படும் இவர்களில் சிலர் செய்வது என்ன? தூக்க மாத்திரையைக் கொடுத்துக் குழந்தையைத் தூங்கச் செய்து விட்டு வீட்டைப் பூட்டிக் கொண்டு சொந்த வேலையைப் பார்க்கப் போய் விடுவார்கள். மாலையில் திரும்பும் பெற்றோருக்கு இவள் இப்படி வெளியே போய் விட்டுத் திரும்பியிருப்பது பற்றி எதுவுமே தெரிய வருவதில்லை!''

இங்கே அத்தகைய 'பேபி ஸிட்டர்'கள் இல்லாதது பெருத்த ஆறுதல்! நம்மூர் ஆயாக்கள் அவ்விதம் செய்வதில்லை. என்றாலும் அவர்கள் சம்பந்தப்பட்ட வேறு சில சிக்கல்களும் இருக்கின்றன. அவை

●● ''உலகம் முழுவதும் தனக்குச் சொந்தமாகிவிட வேண்டும் என்று வெறி கொண்டு அலைந்த இந்த வீரனுக்குக் கடைசியாக இந்த ஆறு அடி நிலந்தான் சொந்தமாகிறது'' என்ற வாசகம் நெப்போலியனின் சமாதியில் பொறிக்கப் பெற்றிருக்கிறது.

— செ. சரவணன்.



பற்றிப் பேராசிரியர் ஜெயச்சந்திரன் என்ன சொல்கிறார்?

''சுகாதார உணர்வுடன் அவள் குழந்தையைப் பார்த்துக் கொள்வாள் என்பது என்ன நிச்சயம்? அவளுடைய சுத்தமின்மையின் காரணமாக நோய்க் கிருமிகள் குழந்தையைத் தாக்கக் கூடும். 'ப்ரைமரி காம்ப்ளெக்ஸ்' போன்ற நோய்கள் வரக் கூடும். கண்டுபிடித்து சிகிச்சை செய்து அது குணமாகி விட்டாலும் நோய்க் கிருமிகள் முற்றிலும்அழிக்கப்படாமல்போய்விடலாம். அப்போது அவை உள்ளுக்குள்ளேயே தங்கியிருந்து, ரத்தத்துடன் சேர்ந்து மூளையை அடைந்து அதன் வளர்ச்சியைப் பாதித்து விடக்கூடும். இன்றைக்கு மூளை வளர்ச்சி குன்றியவர்களின் எண்ணிக்கையை எடுத்துக் கொண்டால், அவர்களில் 25 சதவிகிதத்தினர் இம்மாதிரி காரணத்தால் அப்படி ஆனவர்கள் தான்.''

ஆயாக்கள் சம்பந்தப்பட்ட இன்னொரு சிக்கல் பற்றிக் கூறுகிறார் கிரச்சில் குழந்தையை விட்டுச் செல்லும் மற்றொரு தாயான ஜெயஸ்ரீ.

''செக்யூரிட்டி ஒரு முக்கியமான விஷயம். வீட்டின் எல்லா அறைகளையும் பாதுகாப்பாகப் பூட்டிவிட்டு ஹாலில் மட்டுமே குழந்தையுடன் ஆயாவை விட்டுச் செல்ல வேண்டும். அதன் விளைவாகக் குழந்தை வீடு முழுவதும் திரிய இயலாமல் தன் சுதந்திர உணர்வை இழந்து தவிக்கிறது. கூடவே இன்னொரு பிரச்னை. குழந்தை ஆயாவிடம் ஒத்துப் போக வேண்டும். அந்த அட்ஜஸ்ட்மென்ட் ஏற்படாவிட்டால் ரொம்பவும் கஷ்டமாகி விடும். அந்த வகையில் கிரச் தான் சௌகரியம்.''

ஆயாக்களை நியமிப்பது பற்றிய இன்னொரு கருத்தையும் தெரிவிக்கிறார் பேராசிரியர் ஜெயச்சந்திரன்.

இம்மாதிரி ஆயா வேலைக்கு வருகிறவர்களுடைய பொருளாதார நிலை எப்படி இருக்கும் என்பதை ஊகித்துக் கொள்ள முடியும். கொடுக்க வேண்டிய நேரங்களைக் குறிப்பிட்டுப் பாலையும் ஹார்லிக்ஸையும் ஃப்ரூட் ஜூஸையும் எடுத்து வைத்து விட்டுத் தாய் வேலைக்குப் போய்விட, ஆயா அந்தந்த நேரத்தில் அவற்றைக் குழந்தைக்குக் கொடுக்கிறாள். அவளும் கூட அதே வயதில் உள்ள தன் குழந்தையை வீட்டில் விட்டு விட்டு வந்திருக்கக் கூடும். அந்தச் சமயத்தில் அவள் மன நிலை எப்படி இருக்கும்?

ஆயாவிடம் ஒப்படைப்பதை விட கிரச்சில் விட்டுச் செல்வது மேலானதாகவே இருக்கும்; ஆயினும் கிரச்சில் விடப்பட்டு நாள் முழுவதும் தாயைப் பிரிந்திருக்கும் குழந்தையின் மனநிலை எப்படியிருக்கும்? தாயை நினைத்து அது ஏங்கிப் போய் விடாதா?

''தொடக்கத்தில் குழந்தைக்கு அந்த ஏக்கம் இருக்கத்தான் செய்கிறது'' என்கிறார் லட்சுமி சுப்பிரமணியன். தமது இல்லத்திலேயே கிரச் நடத்தி வரும் இவர் தொடர்ந்து கூறுவது: ''சேர்ந்து ஒரு மாதம் ஆகிறவரை குழந்தை தாயை நினைத்து அழுகிறது... குறிப்பாக, ஒரு வயதுக்கு உட்பட்ட குழந்தை. அம்மாதிரி குழந்தைகளிடம் தனிப்பட்ட கவனம் செலுத்த வேண்டும். கொஞ்சம் கொஞ்சமாக அவை இந்த மன நிலை மாறி, விளையாட்டில் கவனம் செலுத்தத் தொடங்குகின்றன. அதன் பின்னர் அந்த ஏக்கம் வெளிப்படுவதில்லை....''

''இப்படிக் குழந்தையை விட்டு விட்டு வேலைக்குச் செல்வது, தாயின் மனத்திலேயே ஒரு குற்ற உணர்வைத் தோற்றுவித்து விடுகிறது'' என்கிறார் ஜெயஸ்ரீ. ''அதன் விளைவாக நாள் முழுவதும் ஒரு பதற்றம். அலுவலகம் முடியும் நேரம் நெருங்க, நெருங்க அந்தப் பதற்றம் கூடுகிறது. பஸ்ஸைப் பிடித்துச் சீக்கிரம் போக வேண்டுமே என்கிற வேகம் ஆட்டிப்படைக்கிறது. பஸ்ஸைத் தவற விட்டு, ஆட்டோவுக்குத் தவித்துப் பதறியடித்துக் கொண்டு போய்ச் சேரும் போது... பகல் முழுவதும் பிரிந்திருக்கிற குழந்தை தாயைக் கண்டதும் வெளிப்படுத்தும் மகிழ்ச்சியும் சிரிப்பும் இருக்கிறதே, அதற்கு இணையாக எதைச் சொல்ல முடியும்?''

பள்ளிக் கூடங்களுடன் இணைந்துள்ள கிரச், பள்ளிக் கூடங்களுடன் இணைந்திராமல் தனிப்பட்டவர்கள் வியாபார ரீதியில் நடத்தும் கிரச் என்பதோடு நின்று விடாமல் இப்போதெல்லாம் பல இல்லத் தலைவிகளே தங்கள் வீடுகளில் கிரச் நடத்துகிறார்கள்.

''மற்றவற்றை விட இல்லத்தலைவிகள் நடத்தும் கிரச்சில் குழந்தைகளின் எண்ணிக்கை குறைவு. எனவே அவர்களால் அதிக கவனம் செலுத்த முடிகிறது. கூடவே,

குழந்தையைப் பார்த்துக் கொள்ள நம்பகமாக யாரோ இருக்கிறார்கள் என்கிற எண்ணமே ஒரு நிம்மதியை அளிக்கிறது'' என்கிறார் வித்யா மோகன்.

ஒரு தனியார் மருத்துவமனையில் பி. ஆர். ஓ.வாகப் பணியாற்றும் அவர் மேலும் கூறுவது: ''பெரிய பள்ளிகளுடன் இணைந்து நடத்தப் படும் கிரச்களின் விஷயமே தனி. அவர்களுக்கு ஆள் கட்டுமானம் இருக்கும். ரெப்புடேஷன் விஷயத்தில ஒரு ஜாக்கிரதை உணர்வும் இருக்கும். ஆனால் வியாபார ரீதியில் நடத்தப்படும் தனி கிரச்கள் சிலவற்றில் குறைகள் உள்ளன. ஒன்றிரண்டு ஆயாக்களின் பொறுப்பில் குழந்தைகளை விட்டு விடுகிறார்கள். சாயந்திரம் குழந்தையை அழைத்துச் செல்ல கிரசுக்குப் போகும் போது அங்கே அது பாட்டுக்கு மண்ணில் அளைந்து கொண்டிருக்கும். அதைப்பார்க்கும்போது மனசைப் போட்டுப் பிசையும்... எனவே நன்கு விசாரித்துச் சிறந்த கிரச்சைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.''

பத்துப் பதினைந்து குழந்தைகளை நாள் முழுதும் வருடத்தின் 365 நாட்களும் கவனித்துக் கொள்வது என்பது கிரச் நடத்தும் இல்லத் தலைவிக்கு எப்படி சாத்தியமாகிறது?

''இதை ஒரு சாரிடி ஷோவாகவோ, சோஷல் சர்வீஸாகவோ சாயம் பூச நான் தயாராக இல்லை'' என்கிறார் லட்சுமி சுப்பிரமணியன். ''குழந்தைகளிடம் ஒரு உள்ளார்ந்த ஈடுபாடு இருக்க வேண்டும். அவற்றை அனுசரித்துக் கொண்டு போகும் மனப் பக்குவம் பெற்றிருக்க வேண்டும். பணம் தேவைதான். ஆனால் அது மட்டும் நோக்கமாக இருந்தால் இதை வெற்றிகரமாக நடத்த முடியாது...''

கிரச் நடத்துவது, கிரச்சில் குழந்தைகளை விட்டு விட்டு வேலைக்குச் செல்வது என்பதே இறக்குமதியான ஒரு கருத்துதான். மேல் நாடுகளில் அவை எப்படிச் செயல்படுகின்றன?

பேராசிரியர் ஜெயச்சந்திரன் கூறுகிறார்: ''அங்கெல்லாம் அதற்கென்று விசேஷப் பயிற்சி பெற்றவர்கள்தான் கிரச் நடத்த முடியும். குறிப்பிட்ட கால இடைவெளிகளில் அவர்கள் மேல் பயிற்சி பெற்றுத் தங்கள் தகுதிகளை வளர்த்துக் கொள்கிறார்கள். அது மட்டுமல்ல. கிரச் நடத்துவதற்கு அரசிடமிருந்து லைசென்ஸ் வேறு பெற வேண்டும்....''

இந்த முறை இங்கும் அமலானால் நம்முடைய கிரச்கள் மேலும் சிறப்பாக இயங்கக் கூடும்.

— சி. ஆர். கண்ணன்

அட்டை வண்ணப்படம், படங்கள்:

யோகா

வாசகர் யோசனை:
ஹேமா நரசிம்மன்,
சென்னை — 41.

கடிகாரத்தைப் பார்த்தாள் விலி. ரயில் வருவதற்கு இன்னும் ஒரு மணி நேரம் இருந்தது. பார்வையை நிமிர்த்தினாள். எதிரே அந்தப் பள்ளிக் கட்டிடம். அதனுள் அவளுடைய ஆறு வயது மகள். வகுப்பு முடிந்து அவள் வெளியே வந்ததும் அவளையும் அழைத்துக் கொண்டு ரயில் நிலையம் செல்ல வேண்டும்.

காலை எழுந்தது முதலே குழந்தை கேட்டுக் கொண்டிருந்தாள்.

''இன்றைக்கு அப்பா வருவாரில்லையா?''

நாலாண்டுகளாகப் பிரிந்திருந்த தந்தை. இரண்டாண்டுகளுக்கு முன் ஒய்வில் வந்து— ஒய்வில் வந்தா? மனைவியையும் மகளையும் பார்க்க வேண்டும் என்கிற ஆர்வத்தில் ராணுவத்திலிருந்து சொல்லாமல் கொள்ளாமல் ஓடி வந்து இரண்டு நாட்கள் தங்கிப் பின்னர் அதிகாரிகள் தேடி வந்து பிடிபட்டுத் திரும்பிப் போன அப்பாவை... அவர் தோற்றத்தை அந்தக் குழந்தையால், எந்த அளவிற்கு நினைவில் கொண்டிருக்க முடியும் என்பதை விலியால் நிர்ணயிக்க முடியவில்லை.

என்றாலும் அவள் அவரைப் பற்றிப் பேசாத நாட்கள் இல்லை. கேள்விகள் கேட்டுத் துளைக்காத நேரங்கள் இல்லை. இரவும் பகலும் எந்நேரமும் அந்தப் பிஞ்சு நெஞ்சத்தில் நிறைந்திருந்தது அப்பாவைப் பற்றிய நினைவுகள்தான்.

விலியின் நினைவுகளிலும் அவன்தான் நிறைந்திருந்தான். அவனை முதல் முதலாகச் சந்தித்துப் பத்தாண்டுகள் ஆகியிருக்குமா? 1936.... அவை அமைதியான நாட்கள். இளமையின் பூரிப்பில், கவலையென்றால் என்னவென்பதே தெரியாமல் உலகமே உற்சாகப் பூக்களாகக் கண்களுக்குத் தெரிந்த காலம்.

தொழில் தொடங்கும் நோக்கத்துடன் ஜப்பானை விட்டுக் கிளம்பிப் பல ஆண்டுகளுக்கு முன்னரே மனைவியுடன் அமெரிக்காவுக்கு வந்து விட்டவர் விலியின் தந்தை. அவள் பிறந்தது அதன் பிறகுதான். நடையுடை பாவனைகளில் மேலைக் கலாசாரம் செல்வாக்குப் பெற்று விட்டாலும் கீழைப் பண்புகள் இரத்தத்திலிருந்து விலகி விட அனுமதிக்காத குடும்பக் கட்டுப்பாடுகளுக்குள் வளர்க்கப்பட்டவள்.

அப்படிப்பட்டவள் ஜாக்கைக் காதலிக்கத் தொடங்கிய போது அது எத்தகைய புயலைக் கிளப்பி விட்டது! ஒரு ஜப்பானியப் பெண் அமெரிக்கன் ஒருவன் மீது ஆசை கொள்வதாவது!

ஜாக்! நியூயார்க் நகரில் தியேட்டர் ஒன்றில் ஆப்பரேட்டராகப் பணியாற்றி வந்தவன். இயல்பாகவே தொழிலாளர் நலத்திலும் தொழிற்சங்க நடவடிக்கைகளிலும் ஆர்வம் கொண்டிருந்தவன். ஒரு வேலை நிறுத்தப் போராட்டம் கலவரத்தில் முடிவு பெற்றுப் போலிசாருடன் நேரிடை

மெரிக்கா)



காத்திருத்தல்

யான மோதல் ஏற்பட, கைதாகாமல் தப்பித்து லாஸ் ஏஞ்ஜல்ஸ் நகருக்கு ஓடி வந்து விட்டவன்.

அவன் தந்தை நடத்தி வந்த தியேட்டரில் அவனுக்கு வேலை கிடைத்தது. அவர்கள் சந்தித்தார்கள். மனம் பறிகொடுத்தார்கள். திருமணம் செய்து கொள்வது என்கிற முடிவுக்கு வந்த போதுதான் அவள் தந்தையும் குடும்பத்தினரும் கடுமையான எதிர்ப்பைத் தெரிவிக்க, குடும்பத்தை விட்டு அவள் வெளியேறிவிட வேண்டியதாகி விட்டது.

அவன் வேறிடத்தில் வேலை தேடிக் கொண்டான். அவர்கள் தனியே வாழத் தொடங்கினார்கள்.

மணியடித்துப் பள்ளி நேரம் முடிவுக்கு வந்தது. வண்ணப் பூக்களாகச் சிதறி ஓடி வந்தார்கள் குழந்தைகள். அவர்கள் மத்தியில் தன் மகளைத் தேடினாள் விவி.

தொலைவிலேயே தாயைப் பார்த்து விட்ட மகள், ''மம்மி!'' என்று கூவியவாறு ஓட்டத்தின் வேகத்தை அதிகரித்தாள். அருகில் நெருங்கியதும் அவளை அப்படியே வாரியணைத்துக் கொண்டாள் விவி.

மகள் கேட்டாள்: ''ரயில் எப்போது வருகிறது மம்மி?''

''நேரம் இருக்கிறது. வா போகலாம்.''

அவர்கள் நடக்கத் தொடங்கினார்கள். தந்தையைக் காண வேண்டும் என்கிற விழைவு அந்தச் சிறுமியின் துள்ளல் நடையில் தெரிந்தது.

விவியின் நெஞ்சத்திலும் அந்த விழைவு நிறைந்துதான் இருந்தது. பிரிவு என்பது எத்தனை சோகமான விஷயம்! அதுவும் ஒரு நாளா? இரண்டு நாளா? குழந்தை பிறந்தவுடனேயே ஏற்பட்ட பிரிவு அது. அதன் பின்னர் சந்தர்ப்பங்களும் சூழ்நிலைகளும் எப்படியெல்லாம்தான் திசை மாறி விட்டன!

ஆரம்பத்தில் அவர்கள் நடத்திய தனி வாழ்க்கை எளிமையாக இருந்தாலும் இனிமையாக இருந்தது. அதுவும் அவள் தாயாகப் போகிறாள் என்பது தெரிந்த போது அந்த வாழ்க்கை திகட்டும் அளவுக்குத் தித்திக்கத் தொடங்கியது. தன்னையும் தன் குடும்பத்தையும் சுற்றி ஒரு வேலி அமைத்துக் கொண்டு, அதற்கு அப்பால் வெளியே என்ன நடக்கிறது என்பது குறித்து எந்தக் கவலையும் படாமல் அந்த சொர்க்கத்துக்குள்ளேயே அவள் மூழ்கிப் போனாள்.

வெளியே இரண்டாம் உலகப் போர் தொடங்கியிருந்ததையோ, ஜெர்மனியின் அணியில் ஜப்பானும் இறங்கியிருந்ததையோ, அதன் விளைவாக அமெரிக்காவில் வாழ்ந்து வந்த ஜப்பானியர்கள் மீது ஒரு வெறுப்புணர்வு படர்ந்து வந்ததையோ அவள் புரிந்து கொள்ளவில்லை.

அந்த வீடும், அவள் கணவனும் பிறக்கவிருந்த அவள் குழந்தையும் போதும்

அவளுக்கு. அவற்றை அவளிடமிருந்து பிரிக்க எந்தச் சக்தியால் முடியும்? அப்படி நினைத்ததுதான் தவறாகப் போய்விட்டது. எதிர்பாராத விதமாக அந்தப் பேரிடி அவள் மீது இறங்கியது.

தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபட்ட ஜாக், அதைத் தொடர்ந்து ஏற்பட்ட கலவரத்தில் பங்கு கொண்டு, கைது செய்யப்பட்டு சிறைத் தண்டனை பெற்று விட —

அவள் வாழ்க்கை ஸ்தம்பித்துப் போய் விட்டது.

ஜப்பானியருக்கெதிராகப் பெருகிக் கொண்டிருந்த அந்தக் கோபமான சூழ்நிலையில் அவளால் தனித்து எப்படி வாழ முடியும்? தாய் வீட்டுக்குத் திரும்புவதைத் தவிர அவளுக்கு வேறு வழி தென்படவில்லை. தந்தை ஏற்க மாட்டார் என்பது நிச்சயம். என்றாலும் தாயார் அப்படி விட்டு விடுவாளா, என்ன?

"அதோ, ரயில்வே ஸ்டேஷன்" உற்சாகமாகக் கூவினாள் மகள்.

இருவரும் உள்ளே நுழைந்தார்கள். பிளாட்பாரத்தில் போடப்பட்டிருந்த இருக்கையொன்றில் அமர்ந்தார்கள். கடிகாரத்தைப் பார்த்தாள். ரெயில் வர இன்னும் நேரம் இருந்தது. காத்திருந்தார்கள்.

காத்திருப்பது அவளுக்குப் பழக்கப்பட்டுப் போய் விட்டிருந்தது. முதலில் தாய் வீட்டில் பிரசவத்திற்காகக் காத்திருந்தாள். பின்னர் சிறையிலிருந்து கணவன் திரும்புவதற்காகக் காத்திருந்தாள்.

இதனிடையில் ஜப்பான், அமெரிக்காவின் 'பேர்ல்' ஹார்பரில் குண்டு வீச்சு நடத்தி விட, அமெரிக்க மக்கள் ஜப்பானியர்களுக்கெதிராகக் கொண்டிருந்த வெறுப் புணர்வு உச்சம் பெற்றது. ஜப்பானியக் கடைகள் சூறையாடப்பட்டன. அவர்களுடைய வீடுகள் தாக்கப்பட்டன. முடிவில் அத்தனை குடும்பங்களும் ஒன்று திரட்டப் பட்டு ரயில்களில் கூட்டம் கூட்டமாகத் திணிக்கப்பட்டனர். பாலைவனப் பகுதியொன்றுக்குக் கொண்டு போகப் பட்டனர். விஸ்தாரமான கைதிகள் முகாம் ஒன்றில், சுற்றிலும் ராணுவத்தினர் காவல் இருக்க, அவர்களுடைய சிறை வாழ்க்கை தொடங்கியது.

லிலிக்குப் புரியவில்லை. ஜப்பானியப் பெற்றோர்கள் வேண்டுமானால் வேற்று நாட்டவராக இருக்கலாம். அவளும் அவள் வயதினரும் அவள் மகளும் இந்த சொர்க்கபுரியில் பிறந்து வளர்ந்த இந் நாட்டுக் குடிமக்கள் அல்லவா! அவர்களுக்குமா இந்தச் சிறை வாழ்க்கை?

வேறு வழியில்லை. என்றாவது ஒரு நாள் எப்படியாவது தேடிக் கண்டுபிடித்துக் கணவன் திரும்பி வருவான் என்று காத்திருப்பதைத் தவிர வேறு வழியில்லை.

அவன் வரத்தான் செய்தான். சிறை வாழ்க்கை முடிந்ததும் சட்டத்துக்குட்பட்டு ராணுவ வீரனாகி, அமெரிக்கா வாழ் ஜப்பானிய மக்களுக்கு நேர்ந்து விட்ட சிறை வாழ்க்கையைப் பற்றிக் கேள்விப்பட்டுத் தப்பி வந்து, ஓரிரு நாட்கள் அவர்களுடன் இருந்து திரும்பிச் சென்று விட்டான்.

அதன்பின், போரின் முடிவுக்காகக் காத்திருந்தாள். அதையொட்டிய தங்கள் விடுதலைக்காகக் காத்திருந்தாள்.

போர் முடிந்தது. சகஜ வாழ்க்கை திரும்பியது. அதைத் தொடர்ந்து, ராணுவத்திலிருந்து ஓய்வு பெற்றுக் கணவன் திரும்புவதற்காகக் காத்திருந்தாள்.

இதோ இப்போது...

"அம்மா, அதோ ரயில்!" கூவிய மகளின் மகிழ்ச்சிக்கு எல்லை தெரியவில்லை.

பார்வையை உயர்த்தினாள்.

தொலைவில் ரயில் வந்து கொண்டிருந்தது. அதில் அவள் கணவன் வந்து கொண்டிருந்தான்.

காத்திருந்தாள்.

— சி. ஆர். கே.



OO அவளுக்கு விலாசமிட்டு வந்த உறையை அவளிடம் கொடுத்தேன். பிரித்துப் பார்த்தவுடனேயே பையில் வைத்துவிட்டு, "என் கணவர் நலமாக இருக்கிறார். வியாபாரம் நன்றாக நடக்கிறது. அவருக்கு என் மீது இருந்த கோபம் தணிந்து விட்டது..." என்று அடுக்கிக் கொண்டே போனாள்.

"உறையில் ஒரு சிறு காகிதம் மட்டும்தானே இருந்தது. அதையும் நீ சரியாகப் படிக்கவில்லை. இவ்வளவையும் எப்படிச் சொல்கிறாய்?" என்றேன்.

அவள் அந்தத் துண்டுக் காகிதத்தை எடுத்துக் காட்டினாள். அது — ஆயிரம் ரூபாய்க்கான செக்!

இத்துணுக்கை எழுதியவர் யார் என்று ஊகிக்க முடிகிறதா? அது இன்னொரு துணுக்காக 58ஆம் பக்கம் இடம் பெறுகிறது!



மிருதுவான போஷாக்கு

உங்கள் குழந்தைக்கு 4 மாதங்களாகும் சமயத்தில் அவனது இயற்கை உணவான பாலுடன் எளிதில் ஜீரணிக்க உகந்த போஷாக்கு உணவான நெஸ்டத்தையும் கொடுங்கள்.

பாலுடன் கலந்து தயாரிக்கப்பட்ட நெஸ்டம் உங்கள் குழந்தையின் மிருதுவான முதல் திட உணவாகும். ஏனெனில் இதில் குழந்தை ஆரோக்கியமாய் வளர்வதற்குரிய எல்லா போஷாக்குகளும் சமச்சீர் அளவில் அடங்கியுள்ளன. உங்கள் குழந்தையின் உணவில் வெவ்வேறு சுவையைக் கூட்ட விரும்பினால், அவ்வகை உணவுடன் நெஸ்டத்தை கலந்து கொடுங்கள். உதாரணமாய் வேக வைத்த பழங்கள், வேகவைத்து மசிய வைத்த காய்கறிகள் மற்றும் பருப்பு வகைகள்.

அரிசி சேர்த்த நெஸ்டம், போஷாக்கு நிறைந்த ஸீரியல் ஆகும். உங்கள் குழந்தை இதை எளிதில் ஜீரணிக்கும். உங்கள் குழந்தையின் வளர்ச்சிக்கு மருத்துவர்கள் சிபாரிசு செய்யும் எல்லாவித போஷாக்கும் இதில் உள்ளன. உறுதியான எலும்புகளுக்கும் பற்களுக்கும் தேவையான கால்ஷியம்; ஆரோக்கியமான ரத்தத்திற்கு தேவையான இரும்பு சத்து; பட்டு போல் பளபளக்கும் சருமத்திற்கும், ஒளிவீசும் கண்களுக்கும், நோய் எதிர்ப்பு சக்திக்கும் தேவையான வைட்டமின்களும் இதில் அடங்கியுள்ளன.


உங்கள் செல்லக் குழந்தை நெஸ்டத்துடன் சேர்ந்து வளர்வதை கவனியுங்கள்.

இலவச நெஸ்டம் செய்முறை புத்தகத்திற்கு எழுதுங்கள். போஸ்ட் பேக் 25, புது டில்லி-110016.

எளிதில் ஜீரணிக்க வல்ல பேபி ஸீரியல்.

நெஸ்டம்

வாழப்பாடி பேட்டி காண்கிறார்...





கல்கி

1991 மார்ச் 3
மலர் : 49 இதழ் 31
பிரமோதூத மாசி 19



பொம்மலாட்ட அரசு!

"தி. மு. க. ஆட்சியைக் கலை!'' என்றார் ராஜீவ். பிரதமர் தயங்கினார். ''கலைக்கிறாயா, இல்லை....'' என்ற மிரட்டல் பிறந்ததும், ''இதோ'' என்று கட்டளையை நிறைவேற்றினார் சந்திரசேகர்!

''பர்னாலவை நீக்கு!'' என்றார் ராஜீவ். பிரதமர் தயங்கினார். ''நீக்குகிறாயா, இல்லை....'' என்ற மிரட்டல் பிறந்ததும் பணிய வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளானார் சந்திரசேகர். 'தி. மு. க. ஆட்சியைக் கலைத்தது தவறு' என்று முதல்வர் எழுதித் தந்த உரையைப் படித்ததற்காக பீகார் ஆளுனரும் வீட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டார்!

''அமெரிக்க விமானங்களுக்குப் பெட்ரோல் நிரப்புவதை நிறுத்து!'' என்றார் ராஜீவ். பிரதமர் தயங்கினார். ''நிறுத்துகிறாயா அல்லது.....'' என்ற மிரட்டல் பிறந்தது. நிறுத்தியாயிற்று!

''பட்ஜெட் சமர்ப்பிக்கப்படக் கூடாது; கடுமையான பட்ஜெட் தமிழகத் தேர்தலில் வெற்றி வாய்ப்புக்களைக் கணிசமாகப் பாதிக்கும்; ஒத்திப்போடு!'' என்றார் ராஜீவ். பிரதமர் தயங்கினார். நிதி அமைச்சரோ ராஜினாமாவுக்கே தயாரானார். ''ஒத்திப் போடுகிறாயா, இல்லை....'' என்று மிரட்டல் பிறந்தது. ஒத்திப் போட்டாயிற்று. பட்ஜெட் பின்னால் வரும் என்றும் இடைக்காலச் செலவுகளுக்குத் தாற்காலிகமாக நாடாளுமன்றத்தில் அநுமதி பெறப்படும் என்றும் தெரிகிறது.

''இது என்ன பொம்மலாட்ட அரசு?'' என்று மக்கள் மனம் வருந்துகிறார்கள். இப்படித் தான் இருக்கும் என்பதைச் சந்திரசேகர் பதவிக்கு வரும்போதே யோசித்து உணர்ந்திருக்க வேண்டும். பதவி ஆசை கண்ணை மறைக்க, வெளியே இருந்து ஆதரவு தருவதாக ராஜீவ் சொன்னதை நம்பி ஏற்றதில் இப்போது தவணை முறைப் பிரதமராக விளங்குகிறார்.

நிஜ லாபம் ராஜீவுக்கே. பிரதமராக இருந்தால் பொறுப்பு உண்டு. ஆனால் இப்போது பொறுப்பை ஏற்க அவசியமில்லாத பிரதமராக விளங்குகிறார்! தேர்தலைச் சந்திக்க அவகாசம் பெற்றார். போஃபோர்ஸ் விசாரணை போன்றவற்றைக் குழி தோண்டிப் புதைக்கவும் வழி கண்டார். ஒரே கல்லில் ஏகப்பட்ட மாங்காய்கள்!

தேர்தலைச் சந்திக்காமலே ராஜீவைப் பிரதமராக்கி விடவும் ஒரு பக்கம் முயற்சி நடக்கிறது. ஜனதா தளம், ஜனதா தளம் (எஸ்) ஆகியவற்றிலிருந்து கட்சித்தாவல் சட்டத்தில் சிக்காத அளவில் பலரை இழுத்து, காங்கிரஸ் ஆட்சி அமைக்கத்திட்டம் வகுக்கப்படுகிறது. இதன் மூலம் பிரதமராக வந்து, அரசு இயந்திரத்தைக் கையில் வைத்துக் கொண்டு, பிறகு தேர்தலுக்குச் சிபாரிசு செய்யலாம் என்ற தந்திர நோக்கம் செயல்படுகிறது.

இதற்கெல்லாம் இடம் தராமல் இப்போதே சந்திரசேகர் குடியரசுத் தலைவரிடம் தேர்தலைச் சிபாரிசு செய்வது உசிதமாயிருக்கும். ''தேர்தல் என்றால் ஏகப்பட்ட செலவாயிற்றே? இப்போதுதானே தேர்தல் நடந்து முடிந்தது? எல்லாச் செலவுகளையும் வரி செலுத்தும் மக்கள்தானே சுமக்க வேண்டும்?'' என்று கேட்கப்படுகிறது.

ஆனால், ஒழுங்காக பட்ஜெட் கூட சமர்ப்பிக்க முடியாத நிலையற்ற அரசு காரணமாக, நாட்டின் பொருளாதாரம், தொழில்துறை அடைகின்ற நஷ்டத்தோடு ஒப்பிட, தேர்தல் செலவு அப்படியொன்றும் பெரிய நஷ்டமாக இராது.

''தேர்தல் என்று வந்தால் எதிர்க்கட்சி வோட்டுக்கள் சிதறும் நிலையில், ராஜீவ் தானே மீண்டும் ஆட்சிக்கு வரப்போகிறார்?'' என்று கேட்கலாம். உண்மைதான். ஓர் அற்புதம் நிகழ்ந்தாலொழிய, மறுபடி ராஜீவ்தான் சிறுபான்மை வோட்டுக்கள் பெற்று, பெரும்பான்மை நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் பதவிக்கு வருவார். ஆனாலும் அவரை எதிர்ப்பவர்கள் கூட, ''நிலையான ஆட்சியாவது அமைந்ததே'' என்றுதான் நிம்மதிப் பெருமூச்சு விடுவார்கள். மக்கள் அளித்த தண்டனையில் அவர் படிப்பினை பெற்றிருந்தால், நிலையான ஆட்சியோடு, நல்லாட்சி மலரவும் வாய்ப்புண்டு. இல்லையெனில் நாட்டின் துரதிர்ஷ்டம்தான்.

எவ்வாறானாலும் மக்களுக்குப் 'போதும், போதும்' என்றாகி விட்டது. 'தேர்தல் வேண்டும், வேண்டும்' என்ற நிலை தோன்றிவிட்டது.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.

பூக்களினால்
நாம் அடையும் நன்மைகள்


பூக்கள் மனிதனுக்கு நல்ல மனத்தெளிவும், அழகும், நறுமணமும், ஒளியும், ஒளி நிறங்களும், உள்ளத்திற்கு உற்சாகமும், அன்பு, இரக்கம் போன்ற உணர்ச்சிகளும், உடலுக்கு உறுதியும், தைரியமும், இன்னும் தியானசக்தியும், ஆன்மீக உணர்வும், மலர்ச்சியும், தீய குணங்களை மாற்றும் சக்தியும் இவற்றையெல்லாம் நமக்கு அளித்து உதவும்.

பூக்களின் பெயர்கள்	பலன்கள்
1. மல்லிகையும், முல்லையும்	புனிதத்தன்மை தந்து சம நிலையும் அளிக்கும் நறுமணத்தை முகர்வது அவசியம். இதனால் பூமியில் மறைந்து உள்ள அதன் சாரம் இரகசிய உண்மை நாம் ரசித்துக் கொள்ள முடிகிறது.
2. நாட்டு ரோஜாப்பூ	சரணாகதி பாவனை தந்து ஆண்டவர்பால் இனிய எண்ணமும் தந்து தியானம் வளர்க்கும்.
3. ரோஸ்கலந்த சிவப்பு ரோஜா	ஆண்டவரின் பேரன்பையே வெளிப்படுத்தும்.
4. துளசி - பூவும் இலையும்	பக்தி தரும்.
5. அரளிப்பூ	மன அமைதியும் சரணாகதியும் ஆண்டவர்பால் இனிய எண்ணமும் தந்து தியானம் வளர்க்கும்.
6. கருஞ்சிவப்பு (கிரிம்சன்) அரளிப்பூ	தவறான போக்கினைத் தடுத்து நல்வழிக்கு மாற்றிச் செலுத்தும்.
7. அல்லிப்பூ	இலட்சுமியின் பொருள்வளம் தரும்.
8. வெள்ளைத் தாமரைப்பூ	தெய்வீகப் பேருணர்வை சைத்திய சக்தியைத் தரும்.
9. மணமுள்ள கதிர் பச்சை அல்லது திருநீற்றுப் பச்சை என்னும் பூவும்	ஆண்டவருடன் இணைந்து இன்பம் தரும்.
10.சண்பகப்பூ	மனோ உள்ளப்பாடுகளை சீர்ப்படுத்தி அமைக்கும்.
11.மணமுள்ள மருவு இலை	ஆண்டவரின் சாந்நித்யத்தையும் உணர்வையும் தரும். வைகறை ஸ்ரீ அரவிந்த ஆசிரமம் 1986-4
12.நாகலிங்கப்பூ	அன்றாடம் கடவுளுக்கு அர்பணித்தால் பொருள் பற்றாக் குறையை நீக்கிச் செல்வத்தை கொடுக்கக்கூடிய ஒரு ஆற்றல் உண்டு.


Sarathy

13. மருக்கொழுந்து	வேண்டாதவற்றை விட்டுவிட்டு வேண்டியவற்றை பெற்றுக் கொள்ளலாம். இது புதிய வாழ்வை அளிக்கவல்லது.
14. விருட்சிப்பூ	வெண்மை நிறமுள்ள பூ குளுமை நிறைந்த அமைதியை உடலில் உள்ள அணுக்களில் பாய்ச்சுகின்றச் சக்திப் படைத்தது. அந்த அமைதி நோய்களை குணப்படுத்துகின்ற வல்லமை வாய்ந்தது.
15. எருக்கம்பூ	பயத்தை ஒழித்து தைரியத்தை வளர்த்துக் கொள்ளலாம்.
16. மகிழம்பூ	பொறுமையைக் கொடுக்கும்.
17. பவளமல்லி	சிறந்த விருப்பங்களை வளர்க்கலாம் சிவபுராணம் கூறுதல்.

பெருஞ்செல்வம் விரும்புவோர்: தாமரை மலர், வில்வம், சதபத்திரம், ஸங்கபஷ்பம் ஆகியவற்றால் பூஜித்தால் சந்தேகமில்லாமல் பெருஞ்செல்வம் கிடைக்கும்.



அக்கினிப் புராணம் கூறுதல்: மலர்களில் மிகச் சிறந்ததாக சொல்லப்படுவது மாலதி புஷ்பமாகி



புஷ்பத்தின் பெயர்	பலன்
1. மருக்கொழுந்தினால் அர்ச்சனை செய்தால்	ஆனந்தகரமான வாழ்வை அடைவர்
2. மல்லிகைப் பூவினால் அர்ச்சனை செய்தால்	எல்லா பாவங்களிலிருந்து விடுபடுவான்
3. ஜாதி புஷ்பத்தால் அர்ச்சித்தால்	வைகுந்தப் பதவி
4. அலரிமுட் செவ்வந்தி மலர்களால் அர்ச்சித்தால்	தெய்வப்பக்தி நிறைந்தவனாய் விளங்கி வைகுண்டத்தை அடைவர்.



மலர்களை மாலைகளாக தொடுத்து பகவானுக்கு அர்ப்பணம் செய்வது மலர்களால் அர்ச்சிப்பதைவிட எண்ணற்றமடங்கு பலன் தரும். ஒருவன் தன் சொந்த தோட்டத்திலிருந்து மலர்களைச் சேகரித்து வந்து பகவானுக்கு அர்ப்பணித்தால் அடையும் பலன்களைவிட மும்மடங்கு பலனைக் காட்டும். பிரதேசத்தில் மலரும் மலர்களை பறித்துவந்து அர்ச்சிப்பதால் அடையலாம்.



• வெற்றி —



ஜெயந்தி

ஏழு பேர் உயர்த்தும் போர்க்கொடி!



• ராதாபாரதி: ஆசை நிறைவேறியது!

●● தமிழ் சினிமாவால் மறக்கப்பட்ட நடிகர் சுரேஷ் மீண்டும் தலைகாட்டுகிறார் — ஒரு டப்பிங் படத்தின் மூலம். வேறு மாநிலங்களில் நன்றாக ஓடிக் கொண்டிருக்கும் குடும்பக் கதை கொண்ட ஒரு படத்தினைத் தமிழில் 'பொறந்த வீட்டுப் பட்டுப் பொடவை' என்ற தலைப்பில் டப்பிங் செய்கிறார்கள். இதில் யமுனாவுடன் ஜோடியாக நடிக்கிறார் சுரேஷ்! ஆந்திராவில் மட்டும் இருபது தியேட்டர்களில் நூறு நாட்களுக்கு மேல் ஓடிய படமாயிற்றே. அதனால் தமிழில் ரிலீஸ் ஆனவுடன் மீண்டும் பழைய இடத்தைப் பிடித்துவிடலாம் என்ற நம்பிக்கையில் இருக்கிறார் சுரேஷ்!

●● வெவ்வேறு இடங்களிலிருந்து சினிமா சான்ஸ் தேடி வந்த ஏழு பேர் ஓர் இடத்தில் சந்தித்திருக்கிறார்கள். அது நட்பாக மலர, ஒரே வாடகை வீட்டில் தங்கி, சான்ஸ் தேடிக் கொண்டே இருந்திருக்கிறார்கள். வருஷங்கள் பல ஓடியிருக்கிறதே தவிர, வாய்ப்புக்கள் ஒன்றும் அமையவில்லை! பொறுத்தது போதும் என்று தற்போது 'போர்க்கொடி' தூக்கி விட்டார்கள்! அதாவது ஏழு பேரும் தலைக்குக் கொஞ்சமாகப் பணம் போட்டுச் சொந்தமாகவே ஒரு படத்தை எடுக்க ஆரம்பித்துவிட்டார்கள் படத்தின் பெயர்: 'போர்க்கொடி'! முழுக்க முழுக்க அரசியல் படம். நடிகர் வெற்றியும், புதுமுகம் ஜெயந்தியும் ஜோடியாக நடிக்கும் இந்தப் படத்தின் டெக்னிகல் பொறுப்புக்கள் அனைத்தையும் மேற்படி ஏழு பேர்களே கவனித்துக் கொள்கின்றார்கள்.

• சுரேஷ் — யமுனா: பொ. வீ. ப. பொ.!




●● 'வைகாசி பொறந்தாச்சு' பட வெற்றி, அந்தப் படத்தின் டைரக்டர் ராதா பாரதிக்கு நான்கு புதுப் படங்களைச் சம்பாதித்துக் கொடுத்திருக்கிறது. 'அவார்டு நடிகை' என்று முத்திரை குத்தப்பட்ட அர்ச்சனாவை வைத்து ஒரு கமர்ஷியல் படம் எடுத்து சக்ஸஸ் பண்ணிக் காட்ட வேண்டும் என்ற நீண்ட நாள் ஆசையை நிறைவேற்ற முற்பட்டிருக்கிறார் அவர். 'வைதேகி வந்தாச்சு' என்று ஒரு கதையைத் தயார் செய்து, அர்ச்சனாவிடம் கால்ஷீட்டும் வாங்கி விட்டார். ஒரே ஷெட்யூலில் படத்தை முடிக்கத் திட்டமாம்! படத்தின் தயாரிப்பாளர், ராதா பாரதியின் தம்பியே!

●● சத்யராஜை சினிமாவில் நடிக்க வைப்பதற்காக ஊரிலிருந்து சென்னைக்கு அழைத்து வந்தவர் தயாரிப்பாளர் மாதம்பட்டி சிவகுமார். இவர் தற்போது மாதம்பட்டியிலிருந்து ஒரு தயாரிப்பாளரையும் அழைத்து வந்திருக்கிறார். அவர் தயாரிக்கும் படம்: பிரபு — ஐஸ்வர்யா நடிக்கும் மயில்சாமி. முழு படத்தையும் மாதம்பட்டியைச் சுற்றியே எடுக்கிறார்கள். எலெக்ஷனுக்குள் படத்தை முடித்துவிட உத்தேசம். 'அப்படி என்ன அவசரம்?' என்று கேட்டால், கிடைக்கும் பதில்: மாதம்பட்டி சிவகுமாருக்கு அ. தி. மு. க. வில் சீட் கிடைத்துள்ளது!

— எஸ். பாலு.

தாலி கட்டி விட்டால் மனம் ஒன்றி விடுமா?



தேன் நிலவும் அதன் பின்பும் — 10

மனத்தளவில் ஒன்றாத நிலையிலேயே லதா கர்ப்பமுற்றாள். குழந்தை பிறந்ததும் அதை லதாவின் மாமியார் தன் பொறுப்பிலேயே வளர்க்க ஆரம்பித்தாள். லதா குழந்தையை நெருங்கினாலே புக்ககத்தில் எல்லோரும் பயந்து அலறினார்கள். அந்தக் குழந்தையும் அவளைப் போலவே கெட்டு, குட்டிச்சுவராகப் போய் விடும் என்று கருதினார்கள். விவரம் அறியாத வயதில் குழந்தையும் பாட்டியிடமே அதிகம் ஒட்டிக் கொண்டது. இப்படியே சில வருடங்கள் ஓடி விட்டன.

'கணவனும் அன்பு காட்டவில்லை; மாமனார் மாமியாரும் கொடுமைப்படுத்துகிறார்கள்; குழந்தையும் தன்னை நாடவில்லை...' என்று வெறுத்துப் போய் தற்கொலைக்குத் துணிந்து விட்டாள் லதா. தூக்க மாத்திரை உட்கொண்ட அவளை, டாக்டரிடம் அழைத்துச் சென்று, காப்பாற்றி, அவள் பிழைத்ததும் பிறந்த வீட்டில் கொண்டு விட்டு விட்டார்கள். அதன் பிறகு லதாவும் புக்ககம் திரும்பவில்லை; கோபாலனும் அவளை அழைத்துப் போக முயற்சி செய்யவில்லை.

நாட்கள் செல்லச் செல்ல லதாவின் தாய்மை உணர்வு தலைதூக்க ஆரம்பித்தது. பள்ளியில் சேர்க்கப்பட்டிருந்த தன் குழந்தையை உணவு இடைவேளையின் போது போய்ப் பார்த்து வரலானாள்.

குழந்தையும் அம்மாவிடம் ஒட்டிக் கொண்டது. வீட்டிற்குத் திரும்பியதும் 'ஏன் அம்மா மட்டும் எங்கோ இருக்கிறாள்? மற்ற அம்மாக்கள் மாதிரி நம் வீட்டிலேயே என் அம்மாவும் இருக்கணும்' என்று கேட்க ஆரம்பித்தது. பயந்து போன கோபாலனின் பெற்றோர், 'லதாவைப் பள்ளி வளாகத்துள் அனுமதிக்க வேண்டாம்' என்று சொல்லி வைத்தனர். குழந்தையைப் பார்க்கத் தடைசெய்யப்பட்ட லதா, துடித்துப் போனாள். தனக்கும் கணவன் குழந்தையோடு குடும்பமாய் வாழும் ஆசை இருப்பதை உணர்ந்து Legal Aid Board இன் மணநல ஆலோசகர்கள் குழுவை அணுகினாள்.

லதா தானே முன்வந்து உதவி கோரிய போதிலும் ஆரம்பத்தில் முன்னுக்குப் பின் முரணாகப் பேசினாள். 'எங்களைச் சேர்த்து வைத்தால் நான் என் கணவரைக் கொன்று விடுவேன்' என்றாள். ஆக, அவள் ஆழ் மனத்தில் கணவன் பேரில் மிகுந்த வருத்தம் இன்னமும் இருந்தது என்பது புரிந்தது. எனவே, அவசரப்பட்டு அவளைக் கணவனுடன் சேர்த்து வைத்து விடக் கூடாது என்று முடிவு செய்தனர் மணநல ஆலோசகர்கள்.

கோபாலனின் குடும்பத்தை அழைத்துப் பேசிய போது, 'எங்கள் மகனால் நிச்சயமாக அவளோடு சந்தோஷமாய் வாழ முடியாது' என்று லதாவின் மாமனார், மாமியார் அடித்துப் பேசினார்கள். ஆனால், கோபாலனிடம் மணநல ஆலோசகர்கள் தனியாகப் பேசிய போது அவன் கண் கலங்கிப் போய்ச் சொன்னான்: "லதாவை நான் எவ்வளவு நேசிக்கிறேன் என்று சொல்ல முடியாது. அவளுக்குத்தான் என்னைப் பிடிக்கவில்லை.

லதாவோ "என் கணவரா என்னை நேசிப்பதாகச் சொன்னார்? எனக்குத் தலைவலி என்று கூறினால், 'அம்மா லதாவுக்குத் தலைவலி, காப்பி போட்டுக் கொடு' என்று தன் அம்மாவிடம் சொல்லி விட்டு, சுலோகம் சொல்ல ஆரம்பித்து விடுவாரே! அப்படிப்பட்டவர் என்னிடம் உயிரை வைத்துள்ளார் என்று நம்பச் சொல்கிறீர்களா?" என்று பொறிந்து தள்ளி விட்டாள்.

கோபாலனோ "லதாவுக்குத் தலை வலித்தால் நானா தைலம் தடவி விட முடியும்? எல்லோர் முந்நிலையிலும் அது சாத்தியமா? அவள் ஏன் இதைப் புரிந்து கொள்ளவில்லை?" என்றான். கோபாலன் சுலபமாகச் சொல்லி விட்டாலும் லதா எதிர்பார்த்தது அதைத்தான்!

கோபாலன் – லதா திருமணத்தை நிச்சயித்த பெற்றோர், அவர்களுடைய ஜாதகம், அந்தஸ்து, அழகு, உயரம் என்று பொருத்தம் பார்த்தனரேயொழிய வாழ்க்கைப் பின்னணி பொருந்துகிறதா என்று பார்க்கவேயில்லை... அதன் விளைவுதான் மனக்கசப்பும், பிணவும், பிரிவும்.

நன்றாகப் படித்திருந்தும் எதிராளியின் உணர்வைப் புரிந்து கொண்டு விட்டுக் கொடுக்கும் பண்பு தம்பதிகள் இருவரிடமும் இல்லை. இதைச் சுட்டிக்காட்டிய பிறகு, புரிந்து கொண்டு சமரசம் செய்து கொள்ளும் நல்லறிவு, கடவுள் அருளால் இருவருக்கும் இருந்தது.

லதாவின் மாமனார் மாமியாரை அழைத்துப் பேசிய போது அவர்கள், 'லதா, வீட்டில் நைட் டிரஸ் போட்டுக் கொள்ளக் கூடாது' என்பதில் ஆரம்பித்து, வரிசையாகக் கட்டுப்பாடுகளைப் பட்டியலிட்டனர். 'லதா அதில் கையெழுத்துப் போட வேண்டும்' என்றனர்! "கையெழுத்துக் கேட்பதும், ஒப்பந்தம் செய்து கொள்வதும் இந்த உறவில் அவநம்பிக்கையின் அடையாளம்; நம்பிக்கை என்ற அஸ்திவாரத்தில் புதிய வாழ்க்கையை அமையுங்கள்" என்று மணநல ஆலோசகர்கள் அறிவுரை வழங்கினர்.

'பழைய நிகழ்ச்சிகளை ஒரு போதும் நினைவுபடுத்தக் கூடாது' என்ற ஒரே நிபந்தனையின் பேரில் மீண்டும் மண வாழ்க்கையைத் துவங்கினார்கள். பல சிறு சிறு விஷயங்களில் கோபாலன் குடும்பத்திடம் விட்டுக் கொடுத்தாள் லதா. வேலைக்குப் போக லதா விரும்பிய போது ஆட்சேபமே எழவில்லை. மெள்ள மெள்ள மகிழ்ச்சி அந்தக் குடும்பத்தில் புகுந்து, பரவ ஆரம்பித்து விட்டது.

தொகுப்பு: **எஸ். ஆர்.**



ஆகாசத்

மஞ்களா எழுந்திருக்கும் போது மணி ஏழு. அநேகமாக அவள் ஐந்தரை மணிக்கே எழுந்து, ஒரு மணி நேரம் தேகப் பயிற்சி செய்வது வழக்கம். நேற்றிரவு நேரமாகி விட்டது.

துருவ், 'ஆல் ஆஃப் யு கெட் லாஸ்ட்' என்று சொல்லிவிட்டுப் போனவுடன், அங்கே ஒரு சங்கடமான அமைதி நிலவியது. மஞ்களா மந்திரியிடம் சென்று, ''ஐ ஆம் ஸாரி'' என்றாள்.

மந்திரி ஏதோ கூற வந்து, தயங்கி, ஒரு மாதிரி சமாளித்து, ''இதைப் பற்றிக் கவலைப் படாதீர்கள். மேதைக்குத் தாயாகவோ தந்தை யாகவோ இருப்பது, ஒரு சிரமமான அனு பவம்'' என்றார்.


சாப்பிடும் போது சன்னானா அவளிடம் சொன்னான்: ''மந்திரி ஏதோ உங்களிடம் சொல்ல வந்து சொல்லாமல் நிறுத்தி விட் டாரே, அது என்ன தெரியுமா? நீங்கள் தப்பாக நினைத்துக் கொள்ளக் கூடாதே என்ற தயக்கம் அவருக்கு.''

''என்ன? சொல்லுங்கள்.''

''ஒரு 'சைக்யாட்ரிஸ்ட்'டிடம் நீங்கள் துருவ்வைக் காண்பிக்கலாமென்பது அவர் அபிப்பிராயம்.''

''இதைச் சொல்ல என்ன தயக்கம்? பல பேர் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் துருவ் ஒப்புக்கொள்ள மாட்டான். அதுதான் பிரச்னை.

''இந்தியாவில் நல்ல சைக்யாட்ரிஸ்ட் களே இல்லை. நீங்கள் எங்களுடன் ஐரோப் பாவுக்கு வாருங்கள். வியன்னாவுக்குச்



தாமரை

சென்று...''

''இதுதான் மந்திரியின் யோசனையா?''

''ஆமாம்.''

''துருவ் வர மாட்டான்.''

''அவரெதற்கு? பிரச்னையைச் சொல்லி ஒரு நல்ல டாக்டரை இங்கு அழைத்து வருவோம். அவர் டாக்டரென்றே துருவ்விடம் சொல்ல வேண்டிய அவசியமில்லை...''

''நான் உங்களுடன் வரவேண்டுமென்கிறீர்கள்!''

''ஆமாம்... மந்திரியுடன் வருவதினால் உங்களுக்குப் பல சலுகைகள் கிடைக்கும்.'' அப்பொழுது அவள் அவன் பிறப்பின் மூலத்தைச் சந்தேகித்து மனத்துக்குள் திட்டினாள்

இப்பொழுது தனிமையில் இருந்ததால் அதை நினைத்துப் பார்த்து வாய்விட்டே திட்டினாள். பிறகு, 'காலையில் எழுந்ததும் எழாததுமாக அவனைப் பற்றி எதற்கு நினைக்க வேண்டும்' என்று அருவருப்புடன் அந்த நினைவை ஒதுக்கிவிட்டு, மளமளவென்று மஞ்சுளா கீழே இறங்கிச் சென்றாள்.

செய்தித்தாளைப்பிரித்தபோது, டெலிஃபோன் ஒலித்தது.

''மஞ்சுளா.''

''குட் மார்னிங் ஆன்ட்டி... நேத்து வர முடியலே. ஹௌ வாஸ் தி ஈவினிங்?''

''வழக்கம் போலத்தான்.''

''அப்படின்னா?''

''ஒரு அபூர்வ ராகத்தை எடுத்துண்டு, ஒரு மணி நேரம் ஆலாபனை பண்ணினான். அதிலே ஒரு கிருதி வாசிச்சிட்டு, எல்லாரையும் 'கெட் லாஸ்ட்'னு சொன்னப்புறம் மாடிக்குப் போய், ராத்திரி பூரா வாசிச்சிண்டிருந்தான்.''

''நெறையப் பேரைக் கூப்பிட்டிருந்திங்களா?''

''இல்லே, இருபது பேர்தான். ஒரு மந்திரி உள்பட.''

''இப்போ புரியறது.''

''அவனுக்கு வந்தவா யார் யார்னு தெரியாது. மந்திரி அவனை 'யமன் கல்யாண்' வாசிக்கச் சொன்னார், அதனாலே கோபம் வந்திருக்கலாம், ஐ டோன்ட் நோ.''

''பாஸிபிள்... நான் அப்பாவைக் கேட்டேன்: அன்னிக்கு ராத்திரி என்ன நடந்ததுன்னு. கொஞ்சம் 'ரூடா'த்தான் நடந்திண்டிருக்கா, எங்கப்பா. யு நோ, ஹி வாஸ் ட்ரங்க். ஐ ஆம் ஸாரி, ஆன்ட்டி... வேணும்னா, துருவ் கிட்டேயும் மன்னிப்புக் கேட்டுக்கறேன்.''

''துருவ் தூங்கறான். மேலும் மன்னிப்புக் கேட்கிறதெல்லாம் அவசியமா?''

''எங்கப்பா கேட்க மாட்டார். நான் தானே கேட்கணும்?''

''பரவாயில்லே, லீவ் இட்.''

அப்பொழுது துருவ் மாடியிலிருந்து இறங்கி வருவதைக் கவனித்த மஞ்சுளா, உடனே டெலிஃபோனில் சொன்னாள்: ''வெயிட்... துருவ் ஈஸ் கமிங், கேக்கறேன்.''

துருவ் அவளைப் பார்த்தான்.

''சந்தியாவுக்கு உன்கிட்டே பேசணுமாம்...

இந்திரா பார்த்தசாரதி

துருவ் ஃபோனை வாங்கிக் கொண்டான்.

''துருவ்.''

''ஐ ஆம் ஸாரி துருவ். அன்னிக்கு எங்கப்பா வாஸ் ரூட் டு யு. ஐ பிலீவ்.''

''அதுக்கு நீ எதுக்காக மன்னிப்புக் கேட்கணும். இட் இஸ் ஃபன்னி...''

''எங்கப்பா கேட்க மாட்டார். நான் அவரோட பொண்ணு. அவர் சார்பிலே கேக்கறேன். இதுதான் மனுஷத் தன்மை.''

''அப்படியா? மனுஷத்தன்மையைப் பத்தி எனக்கு ஒண்ணும் தெரியாது.''

''அதுவும் எனக்குத் தெரியும்.''

''என்ன சொல்றே நீ?''

''உங்கம்மாகிட்டே நீங்க எப்படி நடந்துக்கிறீங்களோ அப்படி என் அப்பாகிட்டே நடந்துக்க எனக்குத் தெரியாது. நான் சராசரி பெண். சராசரி மனுஷர்களுக்கு இருக்க வேண்டிய பாசம், பரிவு, உணர்ச்சிகள் எல்லாம் எனக்குண்டு. நான் மத்தவங்க கிட்டே இருந்து வேறுபட்டவள்னு நினைச்சுக்க விரும்பலே, பிகாஸ் ஐ' ஆம் நாட் எ ஜீனியஸ்.''

துருவ் கோபமாக ஃபோனைக் கீழே வைத்தான்.

செய்தித்தாள் படிக்கத் தொடங்கியிருந்த மஞ்சுளா அவனை ஏறிட்டு நோக்கினாள். சந்தியா என்ன சொல்லியிருப்பாள்? அவனுக்கு ஏன் இவ்வளவு கோபம்?

துருவ் அவளருகில் வந்து சோபாவில் உட்கார்ந்தான். ''ஐ ஆம் ஸாரி, அம்மா.''

அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. சந்தியாவிடம் கோபப்பட்டவன், அவளிடம் மிகவும் இயல்பாகப் பேசுவதோடு மட்டுமல்லாமல், மன்னிப்பும் கேட்கிறான்!

அப்பொழுது வாசல் மணி ஒலித்தது.

உத்தம் சிங் கதவைத் திறக்கச் சென்றான்.

''சீடை, முறுக்கு, தட்டை, தேன்குழல் போன்ற தென்னிந்தியப் பட்சணங்கள் செய்து தரும் பட்சணக்காரர் சடகோப அய்யங்கார்.

நல்ல உயரம். நெற்றியில் தீர்க்கமான நாமம். பட்சணம் செய்து விற்கா விட்டால் பயில்வானாகப் போயிருக்கலாம். அப்படியொரு கட்டுமஸ்தான உடம்பு.

தம் பெண்ணையும் அழைத்து வந்திருந்தார். இருபது வயதிருக்கலாம். நல்ல களையான முகம். மிரண்ட பார்வை. கையில் பழக்கூடை.

''நமஸ்காரம்மா...''

''நமஸ்காரம். என்ன பட்சணம் கொண்டு வந்திருக்கீங்க?''

''எல்லாமிருக்கு. ஆனா நான் இன்னொரு காரியத்துக்காக வந்தேன்.''

''சொல்லுங்க.''

''இவதான் என் மூணாவது பொண்ணு.''

''தெரியுமே... கோமளம், இல்லியோ?''

மஞ்சுளாவின் நினைவாற்றலைக் கண்டு சடகோபன் வியந்தார். கோமளாவிடம், ''அதை மாமிகிட்டே கொடு'' என்றார்.

அந்தப் பெண் மிகப்பணிவுடன் கூடையை மஞ்சுளா எதிரே இருந்த 'டீ-பாயி'ன் மீது வைத்தாள்.

''ஆப்பிள், ஆரஞ்சு, வாழைப்பழம், என்ன பட்சணத்துக்குப் பதிலாப் பழவியாபாரம் ஆரம்பிச்சுட்டீங்களா?''

சடகோபன் சிரித்தார்.

அப்பொழுது ராமலிங்கம் வந்தான்.

''என்ன ராமலிங்கம்?''

''சன்னானா...''

''ஃபோன்லியா?''

''இல்லே, வந்திருக்கார்.''

அவளுக்கு ஆச்சர்யமாக இருந்தது. எதற்காக வந்திருக்கிறான்? மஞ்சுளா எழுந்து சென்றாள்.

சன்னானா மஞ்சுளாவைக் கண்டதும் மிகச் சந்தோஷத்துடன் புன்னகை செய்தான். ''இட் வாஸ் எ க்ரேட் ஈவினிங் எஸ்டர்டே'' என்றான்.

''தாங்க் யு.''

மஞ்சுளா உட்கார்ந்தாள். அவன் ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டான்.

''இதைச் சொல்வதற்காக, இவ்வளவு காலையில், முன்னறிவிப்புக் கூட இல்லாமல் வந்திருக்க மாட்டீர்களென்று நினைக்கிறேன்'' என்றாள் மஞ்சுளா.

சன்னானா சிரித்தான்.

''சொல்லுங்கள்.''

'''க்ளோபல் டெண்டர்' ஒன்றை அரசாங்கம், விரைவில் அறிவிக்க இருக்கிறது. பிரான்சிலிருந்துதான் அரசாங்கம் வாங்கக் கூடும். உங்களுக்கு ஐரோப்பாவில் நல்ல தொடர்பு இருக்கின்ற காரணத்தினால், நீங்கள் தரகு ஏஜென்ஸி எடுத்துக் கொள்ளலாம்.''

'''க்ளோபல் டெண்டர்' எதற்காக?''

''பாதுகாப்புத் தளவாடங்கள்.''

''நாங்கள் அந்தத் துறையில் வியாபாரம்



இவர்: பையில வெச்சிருந்த பணத்துல பாதியை எவனோ 'பிக்பாக்கெட்' அடிச்சிட்டான் சார்.

போலீஸ்: பாதியை மட்டும் அடிச்சிருந்தா அது அரைபிளேடு ஐயாசாமியாத்தான் இருக்கும்...!

— சீர்காழி. வி. ரேவதி.

செய்யவில்லை. இன்னொன்று, எங்களுக்கும் தரகு ஏஜென்ஸிக்கும் சம்பந்தமே கிடையாது."

"எனக்கு இதெல்லாம் தெரியும். ஒரு புது கம்பெனி தொடங்கச் சொல்கிறேன்."

"அதெப்படிச் சாத்தியம்? மற்ற 'டைரக்டர்களை'க் கேட்காமல் நான் எப்படி முடிவெடுக்க முடியும்?"

"உங்களுடைய மற்ற 'டைரக்டர்களை'ப் பற்றி எனக்குத் தெரியும். நாங்கள் ஐரோப்பாவுக்குச் செல்ல இருக்கிறோம். இரண்டு நாட்களுக்குள் எனக்கு முடிவு தெரிந்தாக வேண்டும்."

"பயமுறுத்துகிறீர்களா?"

"இல்லை. உங்கள் நன்மைக்காகத்தான் சொல்லுகிறேன். முதலீடு எதுவுமில்லாமல் அயல்நாட்டுச் செலாவணியில் 15 மிலியன் கிடைக்கிறதென்றால் உங்களுக்குக் கசக்கிறதா?"

"இதுதான் உங்களுடைய சமூக நல மனப்பான்மையா?"

சன்னானா சிரித்தான். "உங்களுடைய மகனின் மேதைத்தனம் உங்களுக்கு இதைச் சம்பாதித்துத் தரப் போகிறது."

"மந்திரியின் கோபத்தை அல்லவா சம்பாதித்துத் தந்திருக்க வேண்டும்?"

"அப்படி இல்லாதது எங்களுடைய பெருந்தன்மை. கம்பெனியை வெளிநாட்டிலேயே பதிவு செய்து கொள்ளலாம். ரிஸர்வ் பாங்க் ஒப்புதலைப் பற்றி நான் கவனித்துக் கொள்ளுகிறேன்."

"நீங்கள்தானே முக்கிய பங்குதாரர்?"

சன்னானா புன்னகை செய்தான்.

"இது சாத்தியமில்லை என்று எனக்குத் தோன்றுகிறது."

"ஹரிகிஷன் போன்ற பினாமிகள் இருக்கும் வரை இது சாத்தியந்தான்." என்றான் சன்னானா.

மஞ்சுளாவுக்கு அவனைக் கொன்றுவிட வேண்டும் போல் ஆத்திரம் வந்தது. புலிச் சவாரிதான். இறங்க முடியாது.

"நீங்களும் ஐரோப்பா வருவதாக இருந்தால் வரலாம். வியன்னாவில் டாக்டரைப் பார்க்கலாம். மந்திரி யோசித்துச் சொல்லச் சொன்னார். உங்கள் மகன் மீது அவருக்கு அவ்வளவு அக்கறை."

"தாங்க் யு. நான் யோசித்துச் சொல்லுகிறேன்."

"இரண்டு நாள் கழித்து வருகிறேன்." என்று சொல்லிக் கொண்டே அவன் எழுந்தான்.

இவனிடம் உதவி செய்யும்படி கேட்டுக் கொண்டதே தவறு என்று எண்ணினாள் மஞ்சுளா. இப்பொழுது என்ன செய்வது? ஒரு தப்பு இன்னொரு தப்புக்கு அழைத்துச் செல்லுகிறது.

'லாபந்தான் நியாயம், நஷ்டந்தான் அநியாயம்' — பத்மநாபன் கூறியது அவளுக்கு நினைவு வந்தது. 'இதுதான் இன்றையத் தாரக மந்திரம்.



"நம்ம செல்வராஜ் எப்போதும் எனக்குப் போட்டியாவே கிளம்பறான், கொஞ்சம் அடக்கி வெய்யுங்க!"

"ஏன், என்னாச்சு?"

"இந்தத் தீபாவளிக்கு ஸ்கட் மிஸ்ஸைல் பட்டாசுத் தயாரிக்கப் போறேன்னு சொன்னேன்... அவன் பேட்ரியட் பட்டாசுத் தயாரிக்கப் போறானாம்!"

அவள் எழுந்து உள்ளே சென்றாள்.

சடகோபனும் துருவ்வும் பேசிக் கொண்டிருந்தது அவளுக்கு வியப்பைத் தந்தது. துருவ் இவரோடு என்ன பேசியிருக்க முடியும்?

கோமளா சுவரோரமாக நின்று கொண்டிருந்தாள். எதற்காக இவர் கோமளாவை அழைத்துக் கொண்டு வந்திருக்கிறார்.

சடகோபனுக்கு ஐந்தாறு பெண்கள். இரண்டு பெண்களுக்குக் கல்யாணமாகி விட்டது; ஒரே பையன், உதவாக்கரை.

மஞ்சுளா சோபாவில் உட்கார்ந்தாள்.

"துருவ்கிட்டே சொல்லிண்டிருந்தேன். கோமளாவுக்குக் கல்யாணம் நிச்சயம் பண்ணப் போறேன். பையன் 'ஹோம் மினிஸ்ட்ரி'யிலே எல்.டி.சி.யா இருக்கான். இருபது பவுன் போடணுங்கிறா, ஒரு ஸ்கூட்டர் வாங்கித் தரணுமாம். மத்தபடி கல்யாணச் செலவு."

"இருபது பவுனா? இதென்ன கொள்ளையா? போலீசுக்கு 'ரிபோர்ட்' பண்ணுங்கோ." என்றாள் மஞ்சுளா.

"போலீசுக்கு ரிபோர்ட் பண்ணி என்ன பிரயோஜனம்? அவா என் பொண்ணுக்குக் கல்யாணம் பண்ணி வைக்கப் போறாளா?"

"நோ, நோ! இது பகல் கொள்ளை! யார் அந்தப் பையன், என்கிட்டே சொல்லுங்கோ, நான் விசாரிக்கிறேன்."

"அதெல்லாம் வேணாம். உங்களாலே முடிஞ்சதைக் கொடுங்கோ, அது போதும்..."

"என்னாலே அக்கிரமத்துக்கு உடந்தையா இருக்க முடியாது."

"சடகோபன்" — துருவ் அழைத்தான்.

மஞ்சுளா திரும்பிப் பார்த்தாள். துருவ் எழுந்து போய் அவர் பெண்ணருகே நின்று கொண்டிருந்தான்.

"நான் உங்க பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கிறேன். வரதட்சிணை எதுவும் வேணாம்" என்றான்.


மஞ்சுளாவுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

(தொடரும்)

வீரன் ஜடாயு வீடு பெற்ற திருத்தலம்

சீதையை ராவணனிடமிருந்து மீட்கும் முயற்சியில் சிறகொடிந்து விழுந்த ஜடாயு, ராம லக்ஷ்மணர்களிடம் செய்தியைச் சொல்லி உதவுவதற்காகவே உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு காத்திருந்தான். கடமை முடிந்தது. இறப்பதற்கு முன்னால், ஸ்ரீ ராம பிரானை மகாவிஷ்ணுவாகத் தரிசிக்க விரும்பி வரம் வேண்டினான். ஸ்ரீதேவி, பூதேவி சமேதராக, மகாவிஷ்ணு காட்சியளித்தார். பரவச நிலையில் ஜடாயுவின் உயிரும் பிரிந்தது. தசரதரின் உற்ற நண்பரான ஜடாயுவுக்கு, ஒரு மகனின் ஸ்தானத்தில் இருந்து அந்திமக் கிரியைகளைச் செய்தார் பரமாத்மா. ஜடாயுவின் பூத உடலுக்கு அவர் மூட்டிய கனலின் ஜ்வாலையைப் பொறுக்க முடியாமல், வழக்கமாக அவரது வலப்புறம் அமரும் ஸ்ரீதேவி இடது பக்கம் போய் அமர்ந்தாள். பொறுமையின் வடிவான பூமாதேவி ஜ்வாலையைச் சகித்துக் கொள்ளும் சக்தி படைத்தவளாதலால், இடது பக்கத்திலிருந்து வலப்பக்கம் வந்து அமர்ந்தாள்.


— இந்த வரலாற்றுக்குச் சான்றாக இன்றும் விஜயராகவப் பெருமாள் திருப்புட்குழியில் ஸ்ரீதேவியும் பூதேவியும் இடம் மாறிய நிலையில் காட்சி தருகிறார். அமர்ந்த திருக்கோலத்தில் ஒரு காலை மடித்தும், இடது காலைத் தொங்க விட்டபடியும் இருக்கிறார். இரு கரங்கள் சங்கு சக்கரம் ஏந்த, மற்ற இரு கரங்களுள் ஒன்று அபய ஹஸ்தமாகவும் மற்றது ஜடாயுவைத் தம்மிடம் அழைத்துக் கொள்ளும் முத்திரையிலும் உள்ளன. இடம் மாறி அமர்ந்தும் ஜ்வாலையைப் பொறுக்க முடியாமல் தாயாரின் முகக் கமலம் சற்றே திரும்பியிருக்கிறது....!



கோயிலின் பிரதான சன்னிதியில் இக்காட்சியை மங்கலான எண்ணெய் தீபத்தின் ஒளியில் காட்டி விளக்குகிறார் பட்டர் கண்ணன். எளிமையான அலங்காரம். மின் விளக்கின் துணையில்லாது, தீபச் சுடரின் ஒளியில் பெருமாளின் கம்பீரத்துடன் பட்டர் கூறிய வரலாற்றின் உருக்கமும் இணைய மனம் நெகிழ்ந்து விடுகிறது.

சென்னை—பெ.


களூர் நெடுஞ்சாலையில் காஞ்சிபுரத்துக்குக் கிளை பிரியும் இடம் தாண்டி சற்றுத் தூரத்தில் அமைந்துள்ளது பாலுச்செட்டிச் சத்திரம். இங்கு காவல் நிலையத்தைக் கடந்ததும் சாலையின் இடது பக்கத்தில் பிரியும் சிறு பாதை திருப்புட்குழி கோயிலுக்கு நம்மை அழைத்துச் செல்கிறது. புள் என்றால் பறவை. (ஜடாயு)திரு-புள்-குழி என்பதே திருப்புட்குழியாக மருவியிருக்கிறது. 108 வைணவ திவ்யஸ் தலங்களில் ஒன்று இவ்வூர். திருமங்கையாழ்வாரால் மங்களாசாஸனம் செய்யப்பட்டது.




* தாயார்

புழுதி மண்டிய வீதியைத் தாண்டிச் சென்றால் தெப்பக்குளம் தென்படுகிறது. தெப்பக்குளத்தையொட்டி ஓங்கி வளர்ந்த அரச மர நிழலில் சின்னஞ் சிறு மண்டபம். இதனுள் ஜடாயு, விஜயராகவப் பெருமாளின் சன்னிதியைப் பார்த்தபடி பரவசமாகி நிற்கிறார். ஜடாயவுக்குக் கிரியைகள் செய்வதற்கென்று ஸ்ரீராமர் தமது வில்லால் இவ்விடத்தில் பூமியைக் கீறியதாகவும், அதனால் உண்டான சிறு குழியில் நீர் நிரம்பி, அதுவே இன்று ஜடாயு புஷ்கரிணியாக வற்றாமல் விளங்குவதாகவும் சொல்கிறார்கள்.

விஜயராகவப் பெருமானுடன் உறை மரகதவல்லித் தாயார் சன்னிதியும் வரலாற்றுக் குறிப்புக்கு ஏற்ப பெருமாள் சன்னிதிக்கு இடப்புறமாகவே அமைந்திருக்கிறது. கற்பூரமும் துளசியும் மஞ்சள் காப்பும் இழைந்த சுகந்த நறுமணம் வரவேற்கிறது. பசுமஞ்சள் வண்ணச் சேலையில் கருணை ததும்பும் கண்களும், புன்னகை தவழும் இதழ்களு



* கோவில் தோற்றம்



* ஜடாயு சன்னதி



மாகக் காட்சி தருகிறார் தாயார்.

"வறுத்த பயறை முளைக்கச் செய்யும் மரகதவல்லித் தாயார் என்று இந்தத் தாயாரைச் சொல்வதுண்டு..." என விளக்க ஆரம்பிக்கிறார் பட்டர்.

குழந்தை பாக்கியம் இல்லாத தாய்மார்கள், அமாவாசை அன்று ஜடாயு புஷ்கரிணியில் நீராடி, கோவில் மடப்பள்ளியில் வறுத்துத் தரப்படும் பயறை மடியில் கட்டிக் கொண்டு இரவு கோவிலில் தங்க வேண்டும். காலையில் பயறு முளை விட்டிருந்தால், பெண்மணிகளுக்குக் குழந்தை பாக்கியம் உண்டாகும் என்பது நம்பிக்கை. இந்தப் பிரார்த்தனையின் மூலம் குழந்தை பெற்ற தாய்மார்கள் இதே கோவிலில் குழந்தைக்கு முடியிறக்கிச் செல்கிறார்கள்.

வெளிப் பிராகாரத்தை வலம் வரும்போது, இடது பக்கத்தில் மடப்பள்ளியை யொட்டியுள்ள கோயில் சுற்றுச்சுவர் சாய்ந்து நிற்பதைப் பார்க்கிறோம். சுவரிலெல்லாம்




* ராமானுஜர் பாடம் பயின்றார்...

* கோயில் வாசலில் மேளம்





* புஷ்கரிணி



* குதிரை வாகனம்

கனமான வேர்கள் ஓடியிருக்கின்றன. ஸ்ரீ ராமானுஜர் யாதவ பிரகாசரிடம் பாடம் கேட்டது இந்த ஸ்தலத்தில்தான் என்பதற்கு ஆதாரமாக அக் காட்சியை ஒரு மண்டபத்தில் சிற்பமாக வடித்து வைத்திருக்கின்றனர்.

விஜயராகவர் சன்னிதியின் முன்பு உள்ள மண்டபத்தில், குதிரை வாகனத்துக்கு வண்ணம் தீட்டிக் கொண்டிருக்கிறார் ஒரு சிப்பந்தி. இந்தக் குதிரை வாகனம் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. வயிற்றுப் பகுதியில் உள்ள ஒரு விசை, பெருமாள் அதன் மீது அமர்த்தப்பட்டதும் விக்கிரகம் கீழே விழாமல் தானியங்கு முறையில் கவ்விப் பிடித்துக் கொள்ளுமாம். கயிறு கொண்டு பிணைக்க வேண்டியதில்லையாம்.

ஆனால் இந்த விசை பின்னர் பழுதாகி விட்டது. செப்பனிட யாருக்கும் தெரியவில்லை என்றாலும் இன்றைக்கும் விஜயராகவப் பெருமாள் குதிரை வாகனம் ஏறும் போது, அந்த தச்சன் வாழ்ந்த தெருவில் முதன் முதலில் சேவை சாதித்துவிட்டுப் பிறகுதான் மற்ற இடங்களுக்குச் செல்கிறார்!

சரித்திரத் தொன்மையும் புராணப் பெருமையும் வாய்ந்த இக் கோயிலில் இரண்டு வேளை பூஜைகள் நடைபெறவும் கோயில் வாகனங்கள் செப்பனிடப்பட்டு சிறிய அளவிலேனும் உத்ஸவ சம்பிரதாயங்கள் நடைபெறவும் ஒரு சிறு குழுவினர், முயற்சிகள் எடுத்து நடத்தி வருகிறார்கள்.

"சரிந்து கொண்டிருக்கும் மடப்பள்ளியையும் சுவரையும் சீர் செய்ய வேண்டும்; ஆஞ்சநேயர் சன்னிதி ஒன்று இங்கே முன்பு இருந்திருக்கிறது. இப்போது மீண்டும் அதனை நிறுவ வேண்டும்; கல்வெட்டுக்களின் மீது அறியாமல் அடிக்கப்பட்டுள்ள சுண்ணாம்பு, காவி போன்றவற்றைத் தக்க முறையில் நீக்கிப் பாதுகாக்க வேண்டும்; கோவிலின் உள் வெளிப் பிராகாரங்களில் மின் விளக்குகள் பொருத்த வேண்டும்..." என்று இச்சபையினர் நடக்க வேண்டிய நற்பணிகளை அடுக்கினர். பட்டியல் மலைக்க வைத்தாலும் அவர்களுடைய உற்சாகம் நம்மை வியக்கச் செய்கிறது.

தமது பெயரிலேயே வெற்றியைத் தாங்கி நிற்கும் விஜயராகவப் பெருமாள் இவர்களின் முயற்சிகள் முழுமையடைய வழி காட்டாமலா போய்விடுவார்!

— சீதா ரவி

வண்ணப்படங்கள், புகைப்படங்கள்: **யோகா**

"சார், ஐ லவ் யூ..."



தர்மசங்கடமான, சிக்கலான காதல் கதை. டைரக்டர் ஜி. என். ரங்கராஜன் கத்தி முனையின் மேல் நடந்து பார்த்திருக்கிறார்!

சிவகுமார் அந்தக் கல்லூரிக்குப் புதிதாய் வரும் சரித்திரப் பேராசிரியர். மாணவி: குறும்புச் சிகரம் ரஞ்சனி. சுற்றுலாப் போகிற இடத்தில் புதை மணலில் மாட்டிக் கொள்கிற மாணவியைப் பேராசிரியர் காப்பாற்ற, பலன்: காதல். எதிர்பார்க்கிறபடியே சிவகுமார் மறுக்க, எதிர்பார்க்கிறபடியே ரஞ்சனி தற்கொலைக்கு முயல, எதிர்பார்க்கிறபடியே மற்றவர் வேண்டுகோளுக்காகச் சிவகுமார் ரஞ்சனியின் காதலை ஏற்று உயிரைக் காப்பாற்றுகிறார். திருப்பம்: ரஞ்சனியின் அம்மா லட்சுமிதான் பேராசிரியர் சிவகுமாரின் பழைய — காதல் தோல்வி — காதலி!

கழுத்தில் தெரியும் சில சுருக்கங்களைத் தவிர லட்சுமி பழங்காலத்து வீணை போன்று, தனி வசீகரமாகவே தெரிகிறார். கண்டிப்புக்கார அம்மாவாக மகளை அதட்டுவதும், மகளின் காதலன் தன் பழைய காதலன் என்று தெரிந்து மனசுக்குள் மருகுவதும், வெகு நாட்களுக்குப் பின் சிவகுமாரைச் சந்தித்து உரையாடுவதும்... அந்தந்த நேரத்துக்கு ஏற்ற, அள்ள அள்ளக் குறையாத நடிப்பு. ஆனால் பிளாஷ்பேக்கில் கல்லூரி மாணவியாக... அந்தப் புஷ்டி உடம்பை... 'மனமே நீ ஏற்க மறுப்பது நியாயம் தான்!'

கல்லூரி கலாட்டாக்கள் புராதனப் பழசு. கற்பனைப் பஞ்சம்-நிற்க. சாருஹாசன் தேசிய அளவு சிறந்த நடிகர் என்கிற விஷயம் டைரக்டருக்கு மறந்து போய்விட்டதா என்ன? அநியாயம்! இவரைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளாதவர் எஸ். எஸ். சந்திரனை 'பால்' வசனங்களுடன் நம் மீது திணித்திருப்பது அநீதியுடன் இணைந்த கொடூரம்...

சிவகுமாருக்கு ரெடிமேட் பாத்திரம். தற்கொலை மாத்திரைகளை, தனி ஸ்டைலுடன் உருட்டிச் சாப்பிடுகிற ரஞ்சனி. இருவருக்கும் வாய்ப்பு நிறையவே இருந்தாலும், கடைசி நிமிஷத்தில் பந்தை கோலுக்குள் அடித்துப் பெயர் பெறுபவர் — ஜெய்சங்கர்! விசும்பும் மனைவியை அணைத்து, அவரின் பழைய காதலை வெகு சுலபமாக ஜீரணித்து, ஆறுதல் சொல்கிற இடத்தில் இவர் கேரக்டர் விஸ்வரூபம்!

சின்னச் சின்னக் குறைகள் ஏராளம்... ஆனாலும் படம் ஏதோ ஒரு மயிரிழையில் தப்பித்து விடுகிறது!

— சுந்தர்ஜி.

சிவகாமியின் சபதம்





பதினோராம் அத்தியாயம்

''பயங்கொள்ளிப் பல்லவன்''

சிவகாமி நிருத்தம் ஆடிய போது சுய உணர்வுடன் இருந்தவர் ஒருவர் நல்ல வேளையாக அங்கே இருந்தார். அவர் பிக்ஷு நாகநந்தி தான் என்று சொல்ல வேண்டியதில்லை.

''போதும், ஆயனரே! ஆட்டத்தை நிறுத்துங்கள். இனிமேல் ஆடினால் சிவகாமியும் தாங்க மாட்டாள். உலகமும் தாங்காது'' என்ற நாகநந்தியின் வார்த்தைகளைக் கேட்டு ஆயனர் சுயப் பிரக்ஞை அடைந்து தாளம் போடுவதை நிறுத்த, சிவகாமியும் ஆட்டத்தை நிறுத்தினாள்.

புத்த பிக்ஷு கூறினார்: ''ஆயனரே! நீர் எத்தகைய துரோகம் செய்து கொண்டிருக்கிறீர்? இப்படிப்பட்ட தெய்வீகமான கலையை இந்த நடுக்காட்டிலே ஒளித்து வைத்துக் கொண்டிருக்கலாமா? உலோபி ஒருவன் தனக்குக் கிடைத்த மதிப்பில்லாத இரத்தினத்தைப் பெட்டிக்குள்ளே பூட்டி வைத்திருப்பது போல அல்லவா இருக்கிறது நீர் செய்யும் காரியம்! தீபத்தை ஏற்றி நடுக்கூடத்தில் வைக்க வேண்டும். அப்படியின்றி மூலை முடுக்கிலே வைத்துத் துணியைப் போட்டு மூடினால், தீபம் அணைந்து போவதுடன், துணியும் அல்லவா எரிந்து போகும்? உலகம் பார்த்துப் பிரமிக்கும்படியான கலைச் செல்வம் உமது குமாரியிடம் இருக்கிறது. அதைப் பார்த்து ஆனந்திக்க உலகமும் காத்திருக்கிறது. நான் சொல்கிறதைச் சற்றுச் செவி கொடுத்துக் கேளுங்கள். என்னுடன் கிளம்பி வாருங்கள். தில்லைப் பதிக்குப் போவோம். அங்கே பரமசிவனுக்குப் போட்டியாகப் பார்வதி ஆடியது போல் சிவகாமியும் ஆடட்டும். ஆனால் பார்வதியைப் போல் சிவகாமி நடனப் போட்டியில் தோற்க மாட்டாள். எடுத்த எடுப்பிலேயே நடராஜா தோற்றுப் போவார். அவருடைய தூக்கிய திருவடியைப் பூமியின் மேல் வைத்து இளைப்பாறுவார். தில்லையிலிருந்து நாகைப்பட்டினத்துக்குப் போகலாம். நாகைப்பட்டினத்திலே புத்த பிக்ஷுக்களின் மகா சங்கம் கூடப் போகிறது. இந்தக் கூட்டத்துக்காகக் கன்யாகுப்ஜத்திலிருந்தும், காசியிலிருந்தும், கயையிலிருந்தும், கடல்களுக்கப்பாலுள்ள சாவகத் தீவிலிருந்தும், சீன தேசத்திலிருந்தும் பௌத்தர்கள் வருகிறார்கள். உலகத்தின் நாலாபக்கங்களிலிருந்தும், சிற்பக் கலைஞர்களும், இசை வல்லார்களும், நடன சாஸ்திர மேதைகளும் நாகைப்பட்டினத்தில் கூடுகிறார்கள். அந்த மகா சங்கத்திலே உங்கள் புதல்வி நடனம் ஆடட்டும்; அவளுடைய புகழும் அவளைப் பெற்ற உம்முடைய புகழும் உலகமெல்லாம் பரவட்டும்; நாகைப்பட்டினத்திலிருந்து உறையூருக்குப் போவோம். உறையூர்ச் சோழர்கள் இன்று தாழ்வடைந்து பல்லவர்களுக்குக் கப்பம் செலுத்தும் சிற்றரசர்களாக இருக்கிறார்கள். இருந்தாலும் பூர்வீகப் பெருமையுடையவர்கள். கலைகளில் அபாரப் பற்று உடையவர்கள். பார்த்திபன்

அமரர் கல்கி

என்னும் சோழ இராஜகுமாரன் அங்கே இருக்கிறான். சித்திரக் கலையில் தேர்ந்தவன். சிவகாமியின் நடனத்தைப் பார்த்தால் அவனுடைய ஆனந்தத்துக்கு அளவே இராது. பின்னர் அங்கிருந்து கிளம்புவோம். சித்தர் வாச மலையின் சித்திர விசித்திரங்களைச் சிவகாமிக்குக் காட்டிவிட்டு மதுரை மாநகருக்குச் செல்வோம். அங்கே மாரவர்ம பாண்டியன் சமீபத்திலேதான் காலமாகி, அவன் மகன் சடையவர்மன் பட்டத்துக்கு வந்திருக்கிறான். சடையவர்மன் மகா ரஸிகன். ஆஹா! சடையவர்ம பாண்டியன் மட்டும் சிவகாமியின் நடனத்தைப் பார்த்து விட்டால், உங்களை இந்த அரண்ய வீட்டிலே இப்படி நிர்க்கதியாக விட்டிருப்பானா? மதுரை நகரிலுள்ள மாடமாளிகைகளுக்குள்ளே மிக உன்னதமான மாளிகை எதுவோ, அதிலே அல்லவா உங்கள் இருவரையும் வைத்துப் போற்றுவான்...?''

இவ்விதமாக நாகநந்தி பேசி வருகையில் ஆயனரும் சிவகாமியும் பாம்பாட்டியின் மகுட வாத்தியத்தில் மயங்கிப் படமெடுத்தாடும் சர்ப்பத்தைப் போல், அவருடைய மொழிகளைக் கேட்டு வந்தார்கள்.

கடைசியில், ''என்ன சொல்கிறீர், ஆயனரே?'' என்று நாகநந்தி கூறி நிறுத்திய போது, ஆயனருக்கு உண்மையில் இன்னது சொல்வதென்றே தோன்றவில்லை. அவருடைய மனத்தில், ''சக்கரவர்த்தியின் கட்டளைக்கும் நாகநந்தியின் யோசனைக்கும் வெகு பொருத்தமாயிருக்கிறதே!'' என்ற எண்ணம் தோன்றிக் கொண்டிருந்தது. இருந்தாலும் காரணம் தெரியாத ஒருவிதத் தயக்கமும் உண்டாயிற்று. எனவே, ''நான் என்ன சொல்வது? சிவகாமியைத்தான் கேட்க வேண்டும்'' என்று சொல்லி, சிவகாமியை நோக்கினார்.

சிவகாமிக்கோ, சிதம்பரத்தையும் நாகைப்பட்டினத்தையும் உறையூரையும் மதுரையையும் பற்றிக் கேட்ட போது, அங்கெல்லாம் அவள் போவது போலவும், பல்லாயிரக்கணக்கான மக்களின் முன்னே ஆடுவது போலவும், அவர்களுடைய பாராட்டுதலைப் பெற்று மகிழ்வது போலவும் மனக்கண் முன்னால் தோன்றிக் கொண்டே வந்தது. ஆனால் அவள் மனத்திலும் ஒரு தடை. இன்னதென்று விளங்காத ஏதோ ஒரு சந்தேகம், குறுக்கிட்டுக் கொண்டேயிருந்தது.

எனவே, ஆயனர் மேற்கண்டவாறு கேட்டதும் சிவகாமி சற்று யோசித்து, ''எனக்கு என்ன தெரியும், அப்பா? உங்களுக்கு எது உசிதமாகத் தோன்றுகிறதோ, அப்படிச் செய்யுங்கள்'' என்றாள்.

அப்போது நாகநந்தி, ''ஆமாம் ஆயனரே, உம்முடைய காலம் எவ்விதம் போய்க் கொண்டிருக்கிறது? இங்கே புதிய நடனச் சிலை எதையும் காணோமே? நான் கடைசி முறையாக வந்து போன பிறகு, புதிதாக ஒரு சிலை கூட அமைக்கப்படவில்லையா?'' என்றார்.

ஆயனர் ஏக்கம் நிறைந்த குரலில், ''இல்லை; கல்லுளியைக் கையினால் தொட்டு வெகு காலமாயிற்று'' என்றார்.

''ஏன் அப்படி? சிற்பக் கலை என்ன பாவத்தைச் செய்தது? தென் தேசத்தின் ஒப்பற்ற மகா சிற்பி எதற்காகக் கல்லுளியைக் கையினால் தொடாமலிருக்க வேண்டும்?'' என்று பிக்ஷு கேட்டார்.

சிவகாமி அப்போது குறுக்கிட்டு, ''எல்லாம் உங்களால் வந்த வினைதான், அடிகளே! அஜந்தா வர்ண இரகசியத்தைக் கண்டுபிடிப்பதில் அப்பா முனைந்திருக்கிறார். தினம் தினம் விதவிதமான பச்சிலைகளைத் தேடிக் கொண்டு வருவதும் அரைப்பதும்தான் ஏழு மாதங்களாய் அப்பா செய்யும் வேலை'' என்றாள்.

''ஆகா! வீண் வேலை! நான்தான் எப்படியும் உங்களுக்கு அதை அறிந்து சொல்வதாக வாக்குக் கொடுத்திருக்கிறேனே?''

ஆயனர் சிறிது பரபரப்புடன், ''வாக்குக் கொடுத்தது உண்மைதான். ஆனால், அதை நிறைவேற்றுவதாகக் காணோமே? நீங்கள் ஓலை கொடுத்தனுப்பியதுதான் உபயோகப்படவில்லையே! அந்தப் பிள்ளையாண்டான் இப்போது சைனியத்தில் சேர்ந்து பெரிய தளபதியாகி விட்டான்; தெரியுமோ இல்லையோ?'' என்றார்.

''அப்படித்தான் நானும் கேள்விப்பட்டேன். நேற்றைக்குத்தான் அவன் காஞ்சிக்கு வந்தானாமே?''

''ஆம்! இன்று காலை அந்தப் பிள்ளையே இங்கே வந்திருந்தான். காஞ்சிக் கோட்டைக் காவலுக்காக அவனைச் சக்கரவர்த்தி அனுப்பி வைத்திருக்கிறாராம். அடேயப்பா! எட்டு மாதத்திற்குள் அவனிடம் எவ்வளவு வித்தியாசம்? அடக்க ஒடுக்கத்துடனும் நாணம் அச்சத்துடனும் அன்றைக்கு உங்களுடன் வந்தானே அந்தப் பரஞ்சோதி எங்கே? இன்று காலை காஞ்சித் தளபதியாக வந்த பரஞ்சோதி எங்கே? என்ன அகம்பாவம்? என்ன கர்வம்!''

''அப்பா, அவரிடம் அகம்பாவம் ஒன்றுமில்லையே! தங்களிடம் எவ்வளவோ பயபக்தியுடன்தானே நடந்து கொண்டார்?

சக்கரவர்த்தியின் கட்டளையைக் கூட எவ்வளவு தயக்கத்துடன் கூறினார்?'' என்று சிவகாமி குறுக்கிட்டுச் சொன்னாள்.

''ஆயனரே, சக்கரவர்த்தியின் கட்டளை என்ன? நான் தெரிந்து கொள்ளலாமா?'' என்று புத்த பிக்ஷு கேட்டார்.

''எங்களை இந்த வீட்டை விட்டுப் போகச் சொல்லிக் கட்டளை! எப்படியிருக்கிறது கதை? இந்த மகேந்திர பல்லவர் ஒரு காலத்தில் சிற்பக் கலையில் எவ்வளவு பற்று உடையவராயிருந்தார்? அவரைப் பற்றி நான் என்னவெல்லாம் எண்ணியிருந்தேன்?'' என்று ஆயனர் எதையோ பறிகொடுத்து விட்ட குரலில் கூறினார்.

''நானும் உங்கள் சக்கரவர்த்தியைப் பற்றி என்னவெல்லாமோ எண்ணியிருந்தேன். அவருடைய சாமர்த்தியம் இப்போதுதான் தெரிகிறது. உங்கள் சக்கரவர்த்தி எப்பேர்ப்பட்ட காரியத்தைச் சாதித்திருக்கிறார் தெரியுமா, ஆயனரே? பல்லவ சைனியத்தில் ஐம்பதாயிரம் வீரர்களுக்கு மேலே இருக்கமாட்டார்கள். இந்த அற்பச் சைனியத்தை வைத்துக் கொண்டு கடல் போன்ற வாதாபி சைனியத்தை எட்டு மாதத்துக்கு மேலே வடபெண்ணைக் கரையிலேயே நிறுத்தி வைத்திருந்தார்! மகேந்திர பல்லவர் வெகு கெட்டிக்காரர், ஆயனரே! வெகு கெட்டிக்காரர்! இருக்கட்டும்! பரஞ்சோதி தான் போன காரியத்தைப் பற்றி என்ன சொன்னான்? ஓலையை என்ன செய்தானாம்? அதைப் பற்றி நீங்கள் ஒன்றும் கேட்கவில்லையா?'' என்று புத்த பிக்ஷு வினவினார்.

''கேட்காமல் என்ன? பாவம், அந்தப் பிள்ளைக்கு வழியிலே பெரிய விபத்து நேர்ந்து விட்டதாம். சளுக்க வீரர்கள் அவனைப் பிடித்துக் கொண்டு விட்டார்களாம். எப்படியோ பையன் சளுக்க வீரர்களிடமிருந்து தப்பித்து வந்துவிட்டானாம். நல்லவேளையாகச் சிறைப் பிடிக்கப்பட்டதும் ஓலையை மலைப் பள்ளத்தாக்கில் ஓடிய அருவியிலே எறிந்துவிட்டானாம்! புத்திசாலிப் பையன்!''

''புத்திசாலி! அதோடு அதிர்ஷ்டசாலி. முதன் முதலில் சாலை ஓரத்தில் அவன் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்த போது பார்த்தவுடனேயே இவன் மிக அதிர்ஷ்டசாலியாவான் என்று எனக்குத் தெரிந்து போயிற்று. ஆனால், நான் அவனுக்கு எதிர்பார்த்த அதிர்ஷ்டம் வேறு! ஆஹா, என்ன தவறு செய்துவிட்டேன்!'' என்று நாகநந்தி கூறி இலேசாக ஒரு பெருமூச்சு விட்டார்.

''அடிகளே! பரஞ்சோதிக்கு இப்போது அதிர்ஷ்டம் ஒன்றும் குறைவாகப் போய் விடவில்லையே?''

''உங்களுக்குத் தெரியாது, ஆயனரே! இன்னும் எவ்வளவோ பெரிய அதிர்ஷ்டம் அவனுக்கு வருவதற்கிருந்தது. ஏதோ ஒரு கிரகம் வந்து குறுக்கிட்டிருக்கிறது...''

''நல்லவேளை; இவ்வளவு அதிர்ஷ்டத்தோடேயே நிற்கட்டும். இன்னும் அதிகமானால், பையனுக்குத் தலைகால் தெரியாமல் போய்விடும்'' என்றார் ஆயனர். அஜந்தா வர்ண இரகசியத்தை அறிந்து கொள்ளாமல் வந்ததில் பரஞ்சோதியின் மேல் அவருக்கு மிக்க வெறுப்பு உண்டாகியிருந்தது.

சிவகாமி குறுக்கிட்டு, ''அப்பா! அப்பா! ஒரு செய்தி கேட்டீர்களா? மகேந்திர சக்கரவர்த்தி ஒருவேளை பல்லவ இராஜ்யம் மாமல்லருக்கு இல்லையென்று சொல்லிவிட்டுப் பரஞ்சோதிக்குக் கொடுத்தாலும் கொடுத்து விடுவாராம். ஜனங்கள் அப்படிப் பேசிக் கொள்வதாகச் சாரதி கண்ணபிரான் சொன்னார்'' என்று கூறிவிட்டுக் கன்னங்கள் குழியக் 'கலகல'வென்று சிரித்தாள்.

''யார், கண்ணபிரானா! அவன் கிடக்கிறான் பைத்தியக்காரன்! இப்படித்தான் ஏதாவது உளறுவான்'' என்றார் ஆயனர்.

அப்போது நாகநந்தி, ''இல்லை, ஆயனரே, இல்லை! சாரதி கண்ணபிரான் சொன்னது அப்படி ஒன்றும் உளறல் இல்லை. அவன் சொன்னபடி நடந்தால், அதில் எனக்கு வியப்பு இராது. காஞ்சி சிங்காதனத்தில் பயங்கொள்ளிப் பல்லவனை வைத்துப் பட்டம் கட்டுவதைக் காட்டிலும் பரஞ்சோதிக்கு ராஜ்யத்தைக் கொடுப்பதே வீரமகேந்திர பல்லவருக்கு உகப்பாயிருக்கும்'' என்றார்.

பன்னிரண்டாம் அத்தியாயம்

உள்ளப் புயல்

எதிர்பாராத நேரத்தில் வானத்திலிருந்து ஒரு மின்னல் பாய்ந்து வந்து மண்டையைப் பிளந்து கொண்டு தேகத்துக்குள் பாய்வது போன்ற உணர்ச்சி 'பயங்கொள்ளிப் பல்லவன்' என்ற சொல்லைக் கேட்டதும் சிவகாமிக்கு ஏற்பட்டது.

ஆயனரும் திடுக்கிட்டவராய், ''அடிகளே! என்ன சொல்கிறீர்கள்? பயங்கொள்ளிப் பல்லவன் யார்?'' என்று கேட்டார்.

''பயங்கொள்ளிப் பல்லவனைப் பற்றி உலகமெல்லாம் அறியுமே? நாடு நகரமெல்லாம் பேச்சாயிருக்கிறதே? உங்களுக்குத் தெரி

யாதா? ஆனால், நீங்கள் காட்டுக்குள்ளே இருக்கிறீர்கள்! உங்களுக்குத் தெரியாது தான்'' என்றார் பிக்ஷு.

''என்ன தெரியாது? யாரைப் பற்றி உலகம் என்ன சொல்கிறது? மர்மமாயிருக்கிறதே!'' என்றார் ஆயனர்.

''ஒரு மர்மமும் இல்லை. உலகமெல்லாம் தெரிந்த விஷயத்தை உங்களுக்கு நான் சொன்னால்தான் என்ன? மாமல்லன் என்று பட்டப்பெயர் பெற்ற குமாரச் சக்கரவர்த்தி நரசிம்ம பல்லவனைப் பற்றித்தான் சொல்கிறேன். அவன் பெரிய கோழை, பயங்கொள்ளி என்பது உலகப் பிரசித்தமாயிற்றே? முதன் முதலில் வாதாபி சைனியம் படையெடுத்துவிட்டதுஎன்றுகேள்விப்பட்டதுமே மாமல்லனுக்கு உடம்பெல்லாம் நடுக்கமடைந்து மயங்கி விழுந்து விட்டானாம். அதுவும் அந்தச் சமயத்தில் அவன் அரண்மனை அந்தப்புரத்து மாதர்களுக்கு மத்தியில் இருந்தானாம். சக்கரவர்த்திக்கு மானமே போய் விட்டதாம். ஆயனரே! மாமல்லனை ஏன் சக்கரவர்த்தி யுத்தகளத்துக்கு அழைத்துப் போகவில்லை என்று நீர் கேள்விப்படவில்லையா? ஏன் காஞ்சிக் கோட்டைக்கு வெளியிலே மாமல்லன் வரக் கூடாது என்று திட்டம் செய்துவிட்டு மகேந்திர பல்லவர் போர்க்களம் போனார் என்று நீர் கேள்விப்படவில்லையா?''

''ஓ, பொல்லாத பிக்ஷுவே! எப்பேர்ப்பட்ட, அவதூறு சொல்கிறீர்? எம்மாதிரி அபசாரம் பேசுகிறீர்? பதினெட்டு வயதுக்குள் தென்னாட்டிலுள்ள பிரசித்த மல்லர்களையெல்லாம் வென்று 'மகா மல்லன்' என்று பட்டம் பெற்ற மகாவீரனைப் பற்றி இவ்விதம் சொல்ல உமது நாக்குக் கூசவில்லையா?'' என்று ஆயனர் சற்று ஆத்திரத்துடனேயே கேட்டார்.

''மகா சிற்பியே! தங்களுக்கு இந்த விஷயமெல்லாம் தெரியாதென்பது எனக்குத் தெரியாது. பெரிய இடத்துச் சமாசாரம். நமக்கு என்ன கவலை? ஆனாலும் என் வார்த்தையில் நீங்கள் அவநம்பிக்கை கொள்வதால் சொல்கிறேன். அந்த 'மகா மல்லன்' பட்டமெல்லாம் வெறுங்கதை! நரசிம்மவர்மனோடு போரிட்ட மல்லர்களுக்கெல்லாம் முன்னாலேயே கட்டளையிடப்பட்டிருந்தது. சீக்கிரத்தில் தோற்றுப் போய்விட வேண்டுமென்று. இப்படியெல்லாம் செய்தாலாவது பிள்ளைக்கு வீரமும் தைரியமும் வராதா என்று சக்கரவர்த்தி பார்த்தார். பாவம்! பலிக்கவில்லை! யுத்தம் என்று வந்ததும் நடுங்கிப் போய்விட்டான். சாக்ஷாத் உத்தர குமாரனுடைய



அவதாரந்தானாம் நரசிம்மவர்மன். ஊர் ஊராகப் பாரத மண்டபம் கட்டிப் பாரதம் படிக்க வேண்டுமென்று சக்கரவர்த்தி ஏற்பாடு செய்திருக்கிறாரே, எதற்காகத் தெரியுமா? முக்கியமாக, அவருடைய திருக்குமாரனை உத்தேசித்துத்தான்...!''

''அடிகளே! நிறுத்துங்கள்! குமாரச் சக்கரவர்த்தியைப் பற்றி இப்படியெல்லாம் கேட்க என் மனம் சகிக்கவில்லை'' என்றார் ஆயனர்.



''இன்னும் மிச்சமுள்ள உண்மையையும் கேட்டால் என்ன சொல்வீர்களோ, தெரியவில்லை. ஆனால், தங்கள் குமாரி இருக்கும் போது சொல்லக் கூடாது...'' என்று கூறி நாகநந்தி சிவகாமி இருந்த இடத்தை நோக்கினார்.

சிவகாமி ஏழெட்டு வயதுச் சிறுமியாயிருந்த போது ஒரு சமயம் ஒரு தேன் கூட்டில் கையை வைத்து விட்டாள். கையிலும் உடம்பிலும் தேனீக்கள் கொட்டிவிட்டன. ஒரு நாளெல்லாம் வேதனை அனுபவித்துக் கொண்டிருந்தாள். அதைக் காட்டிலும் ஆயிரம் மடங்கு வேதனையை நாகநந்தி நரசிம்மவர்மரைப் பற்றிச் சொல்லி வந்ததைக் கேட்டுக்கொண்டிருந்தபோது சிவகாமி அனுபவித்துக் கொண்டிருந்தாள். பிக்ஷுவின் வார்த்தை ஒவ்வொன்றும் பழுக்கக் காய்ச்சிய ஈயத்துளியைப் போல் அவள் காதில் விழுந்து கொண்டேயிருந்தது.

பிக்ஷு, ''உங்கள் குமாரி இருக்கும் போது சொல்லக் கூடாத விஷயங்கள்,'' என்று கூறியதும், இதுதான் சமயம் என்று சிவகாமி சட்டென்று எழுந்திருந்தாள். அவர்கள் பக்கமே பாராமல் நடந்து வீட்டின் இரண்டாங் கட்டுக்குள் பிரவேசித்தாள்.

சிவகாமியின் செம்பஞ்சு ஊட்டிய பாதங்களைக் கதவின் அடியில் இருந்த இடைவெளியிலே புத்த பிக்ஷு பார்த்துவிட்டு, கொஞ்சம் உரத்த குரலில் சொன்னார்:

''ஆயனரே! உமது குமாரி சிறந்த கலைவாணி மட்டுமல்ல; ரொம்பவும் இங்கிதம் தெரிந்தவள். எப்படிச் சட்டென்று எழுந்து போனாள் பாரும்...! நான் என்ன சொல்ல வந்தேன் என்றால், சக்கரவர்த்திக்குத் தம் புத்திரன் விஷயத்தில் இன்னொரு பெரிய கவலையாம். பல்லவ குலத்தில் இவ்வளவு இளம் வயதில் இவனைப் போல் ஸ்திரீலோலன் ஆனவனே கிடையாதாம். ஒரு சமயம் மாமல்ல பல்லவன் ஒரு பெண்ணுக்கு எழுதிய காமவிகாரம் ததும்பிய ஓலை சக்கரவர்த்தியிடம் அகப்பட்டு விட்டதாம். இதையெல்லாம் உத்தேசித்துத்தான், மாமல்லனைக் காஞ்சியிலேயே இருக்க வேண்டுமென்று சக்கரவர்த்தி திட்டம் செய்திருக்கிறாராம்....!''

இப்படி நாகநந்தி சொல்லிக் கொண்டிருந்த போது, கதவின் அடியில் தெரிந்த பாதங்கள் மறைந்தன. நாகநந்தியும் பிறகு தமது குரலைத் தாழ்த்திக் கொண்டு

பேசலானார்.

ஆயிரம் பேய்களினால் துரத்தப் பட்டவளைப் போல் சிவகாமி வீட்டின் பின்கட்டுகளைத் தாண்டிக் கொல்லைப் பக்கம் ஓடினாள். காட்டுக்குள்ளே எங்கே போகிறோம் என்ற உத்தேசமில்லாமல் ஓடினாள். ஓடி ஓடிக் களைத்துக் கடைசியில் ஒரு மரத்தடியில் வேரின் மீது உட்கார்ந்தாள்.

சிவகாமியைப் பின்தொடர்ந்து மானும் கிளியும் பின்னால் வந்து கொண்டிருந்தன. அவற்றை அவள் கவனிக்கவேயில்லை. மரத்தடியில் உட்கார்ந்த சிறிது நேரத்துக்குப் பிறகு ரதி அருகில் வந்து மெதுவாகத் தன் முகத்தை அவள் கரத்தின் மீது வைத்தது. சிவகாமி அதை ஒரு தள்ளுத் தள்ளி, "சீ தரித்திரமே! பீடை! ஒழிந்து போ!" என்று கத்தினாள்.

சந்தர்ப்பம் தெரியாத அசட்டுச் சுகரிஷி, "மாமல்லா! மாமல்லா!" என்றது. சிவகாமி கையை ஓங்கி, 'சனியனே! மூதேவி!' என்று அதை அடிக்கப் போனாள். கிளி இறகுகளை அடித்துக் கொண்டு அவளிடம் அகப்படாமல் தப்பிச் சென்றது.

திடீரென்று தாமரைக் குளக்கரையில் மகிழமரப் பொந்தில் இருந்த ஓலைகளின் நினைவு வந்தது. அந்த ஓலைகளை உடனே எடுத்து நெருப்பிலே போட்டு எரித்துச் சாம்பராக்கிவிட வேண்டுமென்று நினைத்துத் தாமரைக் குளத்தை நோக்கி ஓடினாள். அதி சீக்கிரத்தில் குளக்கரையை அடைந்து, உட்காரும் பலகையின் மீது காலை வைத்து ஏறி மரப் பொந்திலே கையை விட்டாள்.

ஐயோ! அந்தப் பொந்திலே ஏதாவது நாக சர்ப்பம் இருந்து அவள் கரத்தைத் தீண்டி விட்டதா என்ன? அவள் முகத்திலே ஏன் அவ்வளவு பயங்கரம்? கையை ஏன் அவ்வளவு அவசரமாய் வெளியில் எடுத்தாள்? இன்னும் கொஞ்சம் மேலே கிளம்பிப் பொந்திற்குள்ளே உற்றுப் பார்க்கிறாளே, ஏன்?

அந்தப் பொந்து வெறுமையாய், சூனியமாயிருந்ததுதான் காரணம்.

காலையில் அந்தப் பொந்தில் இருந்த ஓலைகள் எங்கே போயிருக்கும்?

சிவகாமி அந்த மகிழ மரத்தை ஓடி அடைந்த அதே சமயத்தில் தாமரைக் குளத்தின் எதிர்க் கரையில் இருந்த காட்டில் புத்த பிக்ஷு விரைந்து வந்து கொண்டிருந்தார். மரப்பொந்தில் அவள் கையை விட்டு வெறுங்கையை வெளியில் எடுத்ததை அவர் பார்த்தார். அப்போது சிவகாமியின் முகத்தில் தோன்றிய வியப்பும் பயமும், பிக்ஷுவுக்கும் எல்லையற்ற ஆச்சரியத்தை உண்டாக்கிற்று என்பது அவருடைய முகக்குறியினால் தெரிய வந்தது.

(தொடரும்)

[redacted]



நினைவிருக்கட்டும், ஊட்டச்சத்துகள் சமச்சீராக உள்ள உணவு இல்லாவிட்டால், உங்கள் குழந்தை எடை அதிகரிப்பதற்குத் தேவையான புரோட்டீனைப் பெறமுடியாது.
"ஆகவேதான் என் குழந்தைக்கு செரிலாக் தருகிறேன்."
உங்கள் டாக்டரைக் கேளுங்கள். அவர் இரண்டு உண்மைகளை உங்களுக்குத் தெரிவிப்பார். ஒன்று, குழந்தையின் தசை, திசு, ரத்தம் ஆகியவைவற்றைப்பேணி வளர்த்திட புரோட்டீன் உதவுகிறது. இரண்டு, சரியான புரோட்டீன்களைப் பெற, ஊட்டச்சத்துகள் சமச்சீராக உள்ள உணவு குழந்தைக்குத் தேவை. ஒவ்வொரு வேளையும் ஒவ்வொரு நாளும்.
வழக்கமான உணவுகள் மூலமாக இதைச் சமாளிப்பது பெரும்பாலான தாய்மார்களுக்கு எளிதல்ல.
இதற்குத் தீர்வு?
செரிலாக் காரணம், செரிலாக்கில் பால் மற்றும் கோதுமை உள்ளன. இவற்றில் புரோட்டீன் மிகுந்து இருக்கிறது. மேலும், செரிலாக்கில் கார்போஹைட்ரேட்கள், விட்டமின்கள், மினரல்கள், கொழுப்பு, இரும்பு மற்றும் கால்ஷியம் சத்துகள் சரியான விகிதத்தில் உள்ளன. நான்கு வயது முதல் குழந்தைக்கு வெறும் பால் உணவு மட்டும் போதாது. ஆகவே அப்போதிலிருந்து, கொடுக்கக்கூடியது, ஊட்டச்சத்துகள் சமச்சீராக உள்ள திட உணவு செரிலாக். இது மிகுந்த சுவை உள்ளதாக இருப்பதால், குழந்தைகள் மிகவும் விரும்புகிறார்கள்.
ஆகவே, ஊட்டச்சத்துகள் சமச்சீராக உள்ள செரிலாக்கின் அனைத்து அனுகூலங்களையும் உங்கள் குழந்தைக்கு அளியுங்கள். குழந்தைக்கு 6 மாதம் ஆனதும் விட்-ஆப்பிள், விட்-ஆரஞ்சு மற்றும் விட்-வெஜிடபிள் ஆகியவற்றின் கூடுதல் அனுகூலத்தையும் அளியுங்கள்.
பேக்கின் மீதுள்ள விதிமுறைகளைப் பின்பற்றுக.
இலவசம் செரிலாக் பேபி கேர் புத்தகம்
எழுதுங்கள்: செரிலாக், போஸ்ட் பேக் நம்பர் -57, புது தில்லி-110 055
நெஸ்லேயின் ஒரு தரமான தயாரிப்பு
Nestlé Cerelac instant milk cereal Wheat
Nestlé Cerelac instant milk cereal Wheat
உங்கள் குழந்தைக்கு அளியுங்கள் செரிலாக்.
Mudra:D:NES:0020:TAM

மாணவர்களுக்கான புகைப்படப் போட்டி - முடிவு



முதல் பரிசு ரூ. 50:

கடலும் தடையில்லை;
பாறையும் நிலையில்லை!

புகைப்படங்கள்:
எஸ். இஸபெல்லா வாட்சன்,
அஞ்சல் வழிக் கல்வி எம். எடி.,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்,
அண்ணாமலை நகர் — 608 002.





ஆறுதல் பரிசு:

சோற்றில்
கைவைக்கக்
காத்திருக்கும்
பிள்ளைகளுக்
காகச் சேற்றில்
கை வைத்திருக்கும்
தாய்மார்கள்.

புகைப்படம்:
கே. நைனாவதி,
பி. ஏ. இரண்டாம்
ஆண்டு (சைக்காலஜி),
அஞ்சல் வழிக் கல்வி,
சென்னைப்
பல்கலைக் கழகம்,
சென்னை — 5.

ஆறுதல் பரிசு:

''என்னமோ
சென்ஸஸ் எடுக்க
றீங்களாமே?
நம்ம வீட்டுக்
கெல்லாம் வர மாட்
டீங்களா?''

புகைப்படம்: எஸ். பி.
கார்த்திகேயன்,
11-ஆம் வகுப்பு A-1-8,
ஆசிரியர் கல்லூரி
மாதிரிப் பள்ளி,
சென்னை — 15.



பயங்கர (வாதப்) பயணம்!

"ஆமாம்.... கல்யாணம் ஆன அடுத்த வாரமே, ஹனிமூனுக்கு சோளிங்கபுரம் அழைச்சுண்டு போனவராச்சே நீங்க... உங்க கிட்ட போய் கேட்டேனே..." என்று கமலா மூக்கால் அழுது கொண்டே சொன்னாள்.

"இல்லை... கமலா..." என்று நான் ஆரம் பித்தேன் சமாதானப்படுத்தும் குரலில்.

"இல்லை கமலாவுமாச்சு... தொல்லை லகமலாவுமாச்சு... இல்லை... இல்லை.... இந்த பாட்டைத்தான் நான் எது கேட்டா லும் பாடுவீங்க... ஒவ்வொருத்தர் மாதிரி தீபாவளிக்குப் பட்டுப்புடைவை கேட்கி றேனா...? புதுசா அவங்க அவங்க... போட்டு மினுக்கறாங்களே காப்பிக் கொட்டை செயின், அது கேட்கிறேனா...? உம்.... நானும் கேட்கக் கூடாது... கேட்கக் கூடாது என்றுதான் வாயை மூடிண்டு இருக்கேன். புத்தி பிசகிப் போய்க் கேட்டுட்டேன்... ஸ்வாமிக்குக் கோபம் வந்துடுத்து... வேறு எது இல்லாவிட்டாலும் கோபம் சட்னு வந்துடறது. பரம்பரையிலே ஊறியிருக்கிற குணம்..." என்று கமலா எங்கள் பரம்ப ரைக்கே ஒரு 'காண்டக்ட் சர்ட்டிபிகேட்' கொடுத்தாள்!

"கமலா... ஒரே பயங்கரவாதம் தலைவிரித் தாடறது... இப்பப் போய்..."

"அலை ஓய்ஞ்சு சமுத்திர ஸ்நானம் செய்யற கதைதான்... ஏதோ ஒரு சாக்கு" என்றாள் கமலா. முகத்தை அஷ்டகோண லாக்கி உதட்டைப் பிதுக்கினாள். லேசாகக் கண் கலங்கினாள்.

விஷயம் இதுதான். காஷ்மீருக்கு ஒரு டூர் போகச் சிலர் ஏற்பாடு பண்ணியிருக்காங்க. அதில் போக வேண்டும் என்பது கமலா வின் ஆசை.

மூக்கால் அழுகை. உதடு பிதுக்கல், லேசான கண் கலங்கல்... அடுத்து என் னென்ன வரும் என்று எனக்குத் தெரியுமாத லால், நான் வருமுன் காப்போனாக மாறி னேன்.


"சரி... எவ்வளவு சார்ஜாம்...?"

"சார்ஜ்லே தள்ளுபடி கூடத் தர்றாங்க. ஏழு டிக்கெட் வாங்கினால்..." என்று கமலா சொன்னாள்.

"ஏழு டிக்கெட்டா...? நாம் இருக்கிறது இரண்டு பேர்தானே...?"

"நாம் இரண்டு பேர் மட்டும் போகிறதுக்கு இந்த வயசிலே ஹனிமூனா போறோம்...? தொச்சு, 'அங்கச்சி, பசங்களையும் அழைச் சுண்டு வர்றேன் அக்கா... துணையாகவும் இருக்கும் உங்களுக்கு' என்றான். தொச்சுவை நீங்கள் எவ்வளவு கரிச்சுக் கொட்டினாலும் அவனுக்கு நீங்க பத்திரமா போகணும் வர ணும்னு கரிசனம் இருக்கு... அவன் வேலையை விட்டுவிட்டு(?) துணையாக வர் றேன்னு சொன்னான்."

"தொச்சு வர்றானா...? சபாஷ்... கவலை இல்லாமல் போய் வரலாம். சரி... இரண்டு டிக்கெட்டுக்குப் பணம் கட்டிவிடு" என்றேன்.



அகஸ்தியன்



''ஏன் அவனைப் பிரிச்சுப் பேசறீங்க...? ஏழு டிக்கெட் வாங்கினால் என்ன...? அவன் பங்கைத் தந்துடறான்... உங்களுக்கு எல்லாத்துக்கும் கணக்கு... அதுவும் தொச்சு விஷயத்தில் மட்டும்... அதுவே உங்க அக்காவாக இருந்தால் அப்ப வேற கணக்கு... அது வராத கணக்கு... தொச்சு உங்கள் பாக்கியை எப்பவாவது நிறுத்தி வைச்சிருக்கானா?'' என்று காரமாகவும் அதிகாரமாகவும் கமலா கேட்டாள்.

''இல்லை, கமலா வந்து...'' என்று இழுத்தேன். (தொச்சு எனக்குத் தர வேண்டிய பாக்கிகளை நிறுத்தி வைத்ததே இல்லை. சோபா போட்டு உட்கார்த்தி வைத்திருக்கிறான் — பல வருஷங்களாக!)

''விடுங்கோ... காஷ்மீரும் வேண்டாம்; காஷ் இல்லாத மீரும் வேண்டாம்'' என்று சொல்லியபடியே சமையலறைக்குள் சென்று



விட்டாள். (கமலாவிற்குக் கோபம் அதிகம் ஆகிவிட்டால் இப்படிப் புதுப் புது வார்த்தைகளை உபயோகிப்பாள்!)

தொச்சு பட்டாளத்திற்கும் சேர்த்து எட்டு டிக்கெட் வாங்கி டில்லி வந்து சேர்ந்து, காஷ்மீருக்குச் செல்ல பஸ்ஸில் ஏறி உட்கார்ந்தாயிற்று. பஸ் புறப்பட்ட போது இரவு பதினொரு மணி. பஸ் டில்லியின் பல பேட்டைகளுக்குள் புகுந்து பலரைப் பிக்கப் செய்து கொண்டு புறப்பட்டது. (டில்லிக்குள்ளேயே சுமார் 4 மணி நேரம் சுற்றியிருப்போம்!)

கடைசியாகப் பஸ் அதிபரின் வீட்டிற்குச் சென்று சொல்லிவிட்டு, பெட்ரோல் பங்கில் டீசலை நிரப்பிக் கொண்டு, இரண்டு பெரிய ஜெர்ரிகேனில் டீசலை வாங்கிக் கொண்டு பஸ் புறப்பட்ட போது பஸ்ஸில் எல்லோரும் தூங்கி வழிந்தார்கள். தொச்சு பஸ் உறுமலையும் மிஞ்சும்படி குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்தான். கவலையில்லாத மனிதன்!

'டமார்' என்று எதிலோ ஏறி இறங்கி பஸ் நின்றது. தூங்கி வழிந்தவர்கள் திடுக்கிட்டு எழுந்தார்கள். தொச்சு சாவதானமாக... ''எங்கே வந்திருக்கிறோம்'' என்று கொட்டாவிகளுக்கிடையே கேட்டான். கண்டக்டர் இந்தியில், ''காஷ்மீர் கேட் வந்திருக்கிறோம்'' என்றார். (டில்லியில் ஒரு பேட்டையின் பெயர் காஷ்மீர் கேட் என்பது பின்னால் தெரிந்தது). தொச்சு வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்து, ''அடியே, அங்கச்சி... காஷ்மீர் கேட் வந்துடுத்து.'' என்று பரபரப்பாகச் சொல்லி இறங்கப் பார்த்தான்.

கண்டக்டர், ''என்னய்யா தேளு கொட்டிட்ட மாதிரி துள்ளறே...? எங்கே இறங்கறே?'' என்று கேட்டதை ஒருவாறாகப் புரிந்து கொண்டு, ''காஷ்மீர் வந்துவிட்டது இல்லையா...?'' என்று தொச்சு கேட்டான்.

''இன்னும் டில்லியை விட்டே வெளியில வரலை... இப்படியா தூங்கி வழிவாங்க...



போய் உட்காருய்யா...'' என்று கோபமாகச் சொன்னார். (அது கண்டக்டரின் கோபத்திற்கு ஒரு சின்ன ட்ரெய்லர் என்பது பின்னால் அவர் காரணத்தோடும், காரணமில்லாமலும், டிரைவர் மீதும், கிளீனர் மீதும், 'சைட்' கொடுக்காத பஸ் டிரைவர் மீதும், பயணிகள் மீதும் பாய்ந்த போது தெரிந்தது!)

பொழுது விடிந்த சமயம் ஏதோ ஒரு கிராமத்தில் ஆற்றை ஒட்டிய பாதையில் நிற்க, எல்லோரும் இறங்கினோம்.

சலசலவென்று ஆற்று நீரில் குளித்தோம். ''என்னமாய்த் தண்ணீர் ஓடறது'' என்று சொல்லி அங்கச்சி துணிகளைத் துவைக்க ஆரம்பித்தாள்!

ராத்திரி பஸ் ஏறி இருக்கிறோம். பொழுது விடிவதற்குள் இத்தனை அழுக்குத் துணிகள் எப்படி வந்தன அங்கச்சியிடம் என்பது என் வாழ்க்கையில் பதில் கிடைக்காத பல ஆயிரம் கேள்விகளில் ஒன்று!

ஒரு மாதிரியாக பஸ் மீண்டும் கிளம்பியது. யாரோ ஒருவர், (அவர் தலையில் ஆயிரம் இடிகள் விழ!) ''சும்மா ஏன் போகணும்? யாராவது பாடுங்களேன். பிரயாணம் போர் அடிக்காமல் இருக்கும்'' என்று சொல்ல, 50 அடைபட்ட ரசிகர்கள் கிடைக்கிறார்கள் என்று வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டாள் அங்கச்சி.

அவள், ''அக்கா... கொஞ்சம் சுருதி எடுத்துக் கொடுங்க...'' என்று கமலாவிடம் சொல்ல, அவளும் 'ஸ, ப, ஸ' என்று ஆரம்பித்துச் சுருதியை எடுத்துக் கொடுத்தாள். அங்கச்சி அதைக் கெடுத்தாள்!

''கமலா... கொஞ்சம் அங்கச்சியைப் பாடினது போதும் என்று சொல்லேன். ராத்திரி சரியாகத் தூங்கலை... தூக்கம் வர்றது'' என்றேன்.

''உங்களுக்குத் தூக்கம் வரும். என்னோடு டூர் போகணும்னா தூக்கம் வரும்... அவள் பாட்டுக்குப் பாடிக் கொண்டு இருக்கட்டும்... பாருங்க, எல்லோரும் எப்படி ரசிக்கிறாங்க?'' என்றாள் கமலா.

நல்ல காலம். அங்கச்சிக்கு மொத்தம் மூன்று கீர்த்தனைகளே தெரியும். அதைப் பாடியதும் அவளே நிறுத்திக் கொண்டாள்.

ஜம்முவிலிருந்து காஷ்மீர் செல்லும் பாதையில் சுமார் பத்து மணி நேரம் பயணம் என்றார்கள். அடாடா, அந்தப் பள்ளத்தாக்கின் அழகே அழகு... பார்த்துக் கொண்டே இருக்கலாம்.

''அங்கச்சி... அதோ பாரு... அந்தச் செடியிலே மஞ்சள் பூ... என்னமா அழகா இருக்குது'' என்று தொச்சு கத்தினான். கிடுகிடு பள்ளத்தாக்கில் ஏதோ ஒரு செடியைச் சுட்டிக் காட்டியபடியே.

''எந்தச் செடி...? எந்த மஞ்சள்? எந்த பூ?'' என்று அங்கச்சி கேட்டாள்.

''சரியான குருடாச்சே... கண் எதிரே காக்கா கொத்தினாலும் தெரியாதே... உம்... உன்னையெல்லாம் காஷ்மீருக்கு அழைச்சுண்டு வர்றவன் சரியான முட்டாள்'' என்று கத்தினான்.

"தொச்சு... ஏன்பா கத்தறே...? தெரியலைன்றதாலே அப்படிச் சொல்றான்" என்று சமாதானப்படுத்த முயன்றேன்.

"எப்படித் தெரியாமல் போய்டும்...? அசமஞ்சமாக இருந்தால் ஒரு மண்ணும் தெரியாது அத்திம்பேரே... நீங்களே சொல்லுங்க... பூ பனிச்சுனு அழகாத் தெரியலை...?" என்று கேட்டான்.

"ஆமாம்... அடாடா" என்றேன் நான். ('ஹைய்யா... நான் ஓர் அசமஞ்சம் இல்லை!)

திடீரென்று பஸ் நின்றது. "எல்லாரும் இறங்குங்க... இங்கே சாப்பாடு தயார் பண்ணப் போறோம்... ரொட்டி, சப்ஜி... ஒரு மணியிலே ரெடியாயிடும்..." என்றார் டூர் காண்ட்ராக்டர்.

"அம்மா... எனக்கு ரொட்டி வேணாம். இட்லிதான் வேணும்" என்றது அங்கச்சியின் 'வம்சாவளி' ஒன்று!

"நாலு அறை விழும்... எல்லாருக்கும் தர்றதைத்தான் உனக்கும் கொடுப்பாங்க" என்றாள் அங்கச்சி.

அடுத்த கணம் அந்த இமயமலைப் பள்ளத்தாக்கில் ஒரு பயங்கர அழுகைக் குரல் தாக்கி இங்குமங்குமாக எதிரொலித்துக் கொண்டிருந்தது! தொச்சுவின் வாரிசு திருப்பரங்குன்றத்தில் அழுதால் திருத்தணியில் எதிரொலிக்கும்!

"போச்சு... போச்சு... எல்லாம் சர்வநாசம்... எவன்யா சாமானை வெச்சது...?" என்றும், இன்னும் பல புரியாத வசனங்களாலும், சில எழுதக்கூடாத வார்த்தைகளாலும் டூர் காண்ட்ராக்டரும் பஸ் கண்டக்டரும் ஒரு 'குழாயடியை' இமயமலைச் சரிவில் உண்டாக்கிக் கொண்டிருந்தார்கள்.

"என்னவாம் தொச்சு?" என்று நான் கேட்க,

"அவனை ஏன் கேட்கிறீங்க... நீங்க போய்ப் பாருங்களேன். இந்தியிலே பிராத்மிக் பாஸ் பண்ணியிருக்கீங்கன்னு உங்கம்மா வாய்க்கு வாய் பெருமையாச் சொல்வாளே" என்றாள் கமலா.

இறங்கிப் போய்க் கேட்டேன். சின்னதாக 440 வோல்ட் மின்சாரம் பாய்ந்தது.

மேலே கோதுமை மாவு மூட்டையை வைத்திருக்கிறார்கள். அதன் பக்கத்தில் கண்டக்டர் டீசல் ஜெர்ரி கேன்களை வைத்திருக்கிறார். வண்டி குலுங்கலில் டீசல் எப்படியோ வெளியே தெறித்து, கோதுமை மாவைத் தண்ணீர் போட்டுப் பிசைய வேண்டிய அவசியமில்லாதபடி நன்றாக ஈரமாக்கி விட்டது. டீசல் மணம் கமழும் ரொட்டியை பஸ் கூட சாப்பிடாது!

சரியான அத்துவானம். பயங்கரப் பசியோடு 50 வயிறுகள்.

"வேறு வழியில்லை. ஒரே மூச்சிலே ஸ்ரீநகர் போய் நல்ல ஓட்டலில் சாப்பாடு சாப்பிடலாம். அதுவரை அவங்க அவங்க கையிலே கொண்டு வந்திருக்கிற பிஸ்கட், பழம் சாப்பிடுங்க" என்றார் டூர் ஆசாமி.

"அதெல்லாம் ஜம்மு வர்றதுக்கு முந்தியே தீர்ந்து போச்சே" என்று பலர் ஏக்கமாகச் சொன்னார்கள்.

பஸ் உறுமிக் கொண்டே புறப்பட்டது.

இந்தச் சமயம் அத்துடன் 50 காலி வயிறுகளும் உறுமின.

பஸ்ஸில் உள்ள ஸீட் மெத்தைகளை ஸ்பஞ்சில் செய்திருக்க வேண்டும். அவ்வளவு கடினம். ஸீட்களுக்கிடையே இடைவெளியின் அளவை அங்குலத்திலோ சென்டிமீட்டரிலோ சொல்ல முடியாது. மயிரிழைகணக்கில்தான் சொல்ல வேண்டும். இதன் பலன் முழங்கால், கால் எல்லாம் மனிதனுக்குத் தேவைதானா என்ற விரக்தியே ஏற்பட்டது — அங்கச்சி பாடிக் கொண்டிருந்த சமயம் நீங்கலாக!

'ஷேர் — ஈ — காஷ்மீர்' என்ற அந்த ஓட்டலில் எங்களை அடைத்தார்கள். ஆம் 'காஷ்மீர் சிங்கம்' என்று பெயரை வைத்ததாலோ, என்னவோ ஹோட்டல் அறைகள் எல்லாம் குகை மாதிரி இருந்தன. (காஷ்மீர் ஹோட்டல் அறையில் ஜன்னல் வைக்கக்கூடாது என்று சட்டமா என்பதை விசாரிக்க வேண்டும்!)

சோன்மார்க்கிற்கு மறுநாள் புறப்பட்டோம். சுமார் ஏழெட்டு மணி பயணம். சோன்மார்க் மலைகளிலே ஐஸ் உறைந்து இருப்பதாகவும் பார்க்கப் பிரமாதமாக இருக்கும் என்று சொன்னார்கள்.

"அம்மா... எனக்குக் குச்சி ஐஸ் வேண்டும்" என்று தொச்சுவின் செல்லம் கேட்க,

"குச்சி என்னடா... மலையே ஐஸ்தான். வயிறு பிடிக்கிற அளவு சாப்பிடு... காசா பணமா?" என்றான் தொச்சு.

"ஐஸ் இருக்கிற இடத்திற்கு மலையிலே அரை மணி ஏறணும்... பசங்களை எல்லாம் அழைச்சுண்டு போகறது நல்லதில்லை" என்று யாரோ ஒரு பெரியவர் கூற —

"அதெல்லாம் முடியாது. நான் வருவேன்" என்று அது பிடிவாதமாகக் கூற—

தொச்சு ஓர் அறை கொடுக்க, தேமதுரத் தமிழ் அழுகைக் குரலோசை இமயமெல்லாம் பரவியது!

சோன்மார்க்கில் பஸ் நின்றதும், சுமார் நூறு கோவேறு கழுதைகள் சூழ்ந்து கொண்டன. "மலை மேலே கழுதை மேல் தான் போக முடியும்" என்றார்கள். கழுதைகளின் சொந்தக்காரர்கள் தூரத்தில் உட்கார்ந்து பீடி பிடித்துக் கொண்டிருந்தார்கள். ஒரே சமயத்தில் மூன்று பஸ்கள் வந்துவிடவே, அவர்களுக்கு — அதாவது கழுதைகளுக்கு டிமாண்ட் — என்று தெரியும்.

"மேலே போய் வர 50 ரூபாய்" என்றார் ஒரு கழுதைக்காரர்.

"ஐம்பது ரூபாயா?" கழுதை விலையே ஐம்பது ரூபாய் இருக்காதே" என்றேன் நான்.

"விலையைப் பற்றி என்ன பேச்சு... கழுதை வாங்கவா வந்திருக்கிறோம்... ஏன்டாப்பா... கழுதைவாலா...? உனக்கும் வேண்டாம்... எனக்கும் வேண்டாம்... 25 ரூபாய் தர்றோம்" என்று கமலா தமிழில் சொன்னதை நான் மொழி பெயர்த்துக் கூற அவன் என் முழியைப் பெயர்த்து விடுகிற மாதிரி ஏதோ இந்தியில் திட்டினான். பிறகு அவன் சொன்னது புரிந்தது.

"25 ரூபாய்க்கு ஒரு ட்ரிப்... மேலே போய்

விட்டுடறேன். திரும்பி வர வேண்டாமா?'' என்று கேட்டான்.

''என்னடா இது அபசகுனம் மாதிரி கேட்கிறான்... சரி... அவன் கேட்கிறதை அழுதுடுவோம்'' என்றான் தொச்சு. (தொச்சு இலக்கண மேதை. அழுதுவிடுகிறேன் என்று சொல்லவில்லை என்பதைக் கவனியுங்கள்!)

மட்டக்குதிரை மேல் ஏறி உட்காருவது ஒரு கலை என்றால் அது ஆடி அசைந்து ஏறி இறங்கிப் போகும் போது அதன் மேலிருந்து விழாமல் உட்கார்ந்து போவதும் ஒரு கலை!

''ஏன்னா... பாருங்களேன்... என் குதிரை எங்கேயோ போறது... சனியன்'' என்று கமலா பரிதாபமாகக் கத்தினாள் (கழுதையாக இருந்தது. அவள் ஏறி உட்கார்ந்ததும் குதிரையாகி விட்டது!)

அந்தச் சமயத்தில் தொச்சு ஏறி உட்கார்ந்த பஞ்சகல்யாணிக்கு என்ன கோபமோ. (தொச்சு மேல் அல்ல; என் மேல்தான் 'அதற்குக் கோபம் இருந்திருக்க வேண்டும் என்பது பின்னால் நடந்தவை எனக்கு நிரூபித்தன!) அது நாலு கால் பாய்ச்சலில் ஓட ஆரம்பித்தது. தன் கழுதை ஓடியே பார்த்திராத கழுதைக்காரர் வியப்பால் உறைந்து விட்டார்.

''அய்யோ... கழுதை யாராவது பிடியுங்களேன்...'' என்று அங்கச்சி தமிழில் அலறினாள். (தமிழ் புரியாதவர்களும் அவள் அலறலிலிருந்து விஷயத்தைப் புரிந்து கொள்ள முடியும்)

கழுதைக்காரர்கள் நாலைந்து பேர், அதைப் பிடிக்க ஓடினார்கள். கழுதைக்குக் குஷி பிறந்து விட்டது. அது ஆட்டம் காட்டியது. எங்கெங்கோ ஓடியது. காச், மூச் சென்று காஷ்மீரி மொழியில் கத்திக் கொண்டு கழுதைக்காரர்கள் ஓட, ''செத்தேன் — தொலைந்தேன்'' என்று தமிழில் தொச்சு கத்த, கழுதை உற்சாகமாகக் காள் காள் என்று கத்தி ஹாப், ஸ்டெப் ஜம்ப், லாங் ஜம்ப், ஹை ஜம்ப் ஆகியவற்றை மாறி மாறிச் செய்து கொண்டே ஓட —

சினிமா கிளைமாக்ஸ் காட்சிக்கு ரிகர்சல் போலிருக்கிறது என்று பலர் கண்களை விரித்துப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

துரதிர்ஷ்டம், கிளைமாக்ஸுக்குப் பிறகு எல்லாம் சுலபமாக முடியும். இங்கு அப்படி இல்லை.

தொச்சுவின் அலறலில் கழுதை மேலும் பயந்து ஓட, ஏதோ ஒரு பள்ளத்திலே அதன் கால் இடற, மேலே இருந்த தொச்சு ஒரு மூட்டை மாதிரி தூக்கி எறியப்பட்டான் — ஒரு சரிவில்.

தொச்சுவுக்கு நாலைந்து இடத்தில் எலும்பு முறிவு. பல இடத்தில் சிராய்ப்பு, காயம்!

தொச்சுவை சோன்மார்க்கிலிருந்து ஸ்ரீநகருக்கு ஆம்புலன்ஸில் அழைத்து வந்தது, எக்ஸ்ரேக்கள் எடுத்தது, செலவைப் பார்க்காமல் ''விமானத்தில் எல்லாரையும் அழைத்து வந்தது போன்ற விவரங்களை எல்லாம் எழுதினால் எனக்குப் பைத்தியம் பிடித்துவிடும். என்னைச் 'சனி' பிடித்தது போதும். பைத்தியமும் பிடிக்க வேண்டாம்!

அண்ணா இந்த மாதிரி பிடிவாதமாய் இருப்பான் என்று நாங்கள் முதலில் நினைக்கவில்லை. அழுத்தமாய் இருந்து தான் விரும்பியதைச் சாதித்து விட்டான்.

ரேவதியின் கழுத்தில் அவன் மூன்று முடிச்சிட்ட போது, பின்னால் நின்று மூவரும் அழுதோம். அம்மாவும் அழுதாள்.

'பாவம்... செத்துப் போன அப்பாவை நினைச்சுக்கிட்டு அழுகிறாங்க...' என்றார் யாரோ.

இல்லை. அதற்காக இல்லை. இருபத்திரண்டு வயசான என்னையும், இரண்டிரண்டு வருட இடைவெளியில் பிறந்த என் இரு தங்கைகளையும் இவன் கரையேற்றுவான் என்று அம்மா நம்பியது வீண்தானோ?

தங்கைக்குக் கல்யாணம் செய்வான் என்று நம்பிய நேரத்தில், தனக்கொரு கல்யாணம் செய்து கொண்டு விட்டானே...!

சுற்றிலும் உறவினர் கூட்டம். எதிரே ஜ்வாலையுடன் ஹோமம்... அரக்குக் கூரைப் புடைவையில் மன்னி... எனக்குள்ளும் தீ பரவியது.

ஒரே வாரம். அண்ணா, ரேவதியுடன் கிளம்பிப் போக... எங்களது போர்ஷனில்... காரை பெயர்ந்த சுவர்... கல்யாணத்தை முன்னிட்டு அவசரமாய்ச் செய்த வெள்ளையடிப்பு... தரையில் பெயர்ந்த பள்ளங்களில் அவசர நிரவல். போனால் போகிறதென்று கல்யாணத்தினால் எங்களுக்குக் கிடைத்த புதுத் துணிகள்... பழைய கிழிசல்களுக்கு நடுவே பளிச்சிட்டு...

''இனிமேல் என்னம்மா பண்றது...?''



அழுத்தக்காரி

ரிஷபன்

என்றேன் கவலையுடன்.

''கணேசன் பணம் அனுப்பறேன்னு சொன்னான்...'' என்றாள் வெள்ளையாய்.

''நீ நம்பறியா...?''

''ஏன்...? இதுவரைக்கும் அனுப்பலையா?''

புவனாவும், சாருவும் எந்தக் கவலையும் இன்றி... ஒருத்தி மாத நாவலிலும் இன்னொருத்தி ரேடியோவிலுமாக மூழ்கிப் போனார்கள்.

மனம் அலுத்து, கிழிந்து போன என் பாவாடையை எடுத்துத் தைக்க ஆரம்பித்தேன்.

கடிதம் வந்தது. கணேசனிடம் இருந்துதான்.

''ரேவதி வருகிறாள்... வருகிற பதினாலாம் தேதி. ஒரு வாரம் தங்குவாள். பொங்கலுக்கு அங்கு வரும்போது என்னுடன் திரும்புவாள்...''

ஸ்டேஷனில் போய்க் கூட்டி வந்தோம்.

அளந்துதான் பேசினாள். கணேசனைப் போலவே அழுத்தக்காரியோ...? ரொம்ப இயல்பாய் வெறுப்பு வந்தது.

அம்மாவை நமஸ்காரம் செய்தாள். எப்போதும் போல அம்மாவுக்குக் குளிர்ந்து விட்டது. நாட்டுப் பெண்ணைப் பற்றிப் பெருமிதம் முகத்தில் அப்பிக் கொண்டது.

'அடச்சீ...' என்றாச்சு எனக்குள்.

சின்னவள் சாருவுடன் கலகலமாய் ஒட்டிக் கொண்டாள். கையில் மெஹந்தி இட்டதும் புவனா பூரித்துப் போனாள். எங்கள் நடும்



பத்தில் தப்பிப் பிறந்த வெளுப்புக்காரி. வெளியில் போனால் கூட இரண்டடி தள்ளி நடந்து வருகிற நாசூக்குக்காரி.

''வஸ·...'' என்றாள் என்னிடம்.

''பெயரைச் சுருக்கினால் எனக்குப் பிடிக்காது...'' என்றேன்.

''ஓ... ஸாரி... இனிமேல் வஸந்தின்னே கூப்பிடறேன்...'' என்றாள் சிரிப்பு மாறாமல்.

இதுதான்...இந்தச்சிரிப்புதான்...எல்லோரும் சகிக் கொள்கிறார்கள். ஏதோ வேலையாகப் போவது போல் அவசரமாய் விலகினேன்.

ஹாலில் அவர்கள் படுத்துக் கொள்ள, நானும் அம்மாவும் வழக்கம் போல் சமையலறையில் படுத்துக் கொண்டோம். மின் விசிறி காற்றைத் தலையில் அடித்தது. கல்யாணத்தில் வந்த சீர். கணேசனால் நிராகரிக்கப்பட்டு, எங்களுக்கு இப்போது உதவுகிறது.

''நான் கூட என்னமோ நினைச்சேன். ரொம்ப நல்ல பொண்ணுடி...'' என்றாள் அம்மா.

''எவ...?''

''உன் மன்னிதான்.''

''என்னவாம்...?'' என்றேன் எரிச்சலுடன்.



''உனக்குக் கல்யாணம் ஆகிற வரைக்கும் குழந்தை வேண்டாம்னு முடிவு பண்ணி யிருக்காளாம். பொண்ணு பார்த்துட்டு வந்த பிறகு, இவன் ஒரு நாள் அவங்க வீட்டுக்குப் போயிருக்கான்... பளிச்சுன்னு சொல்லிட் டானாம். இந்தக் கண்டிஷனுக்குச் சம்மதிச் சாத்தான் கல்யாணம்னு...

''எ... என்ன...?''

''இவன் கூட கேட்டானாம்... எனக்கு இல்லாத அக்கறை... என் தங்கச்சி மேல்... உனக்கு எதுக்குன்னு.''

''ம்.'' என்றேன் முனகலாய்.

''என்னைத் தவிர வேற யார் அக்கறைப் படணும்னு கேட்டாளாம்.''

''ப்ச்.

''இப்பவே ஊருக்கு எதுக்குப் போக ணும்னு கேட்டானாம்... இல்லே... போய்த் தான் தீருவேன்னு பிடிவாதமா வந்திருக்கா. ஒரு வாரத்துல எல்லாம் திரும்பி வர முடி யாது... எனக்கு மனசுல படற வரை அங்கே. தான் இருப்பேன்னாளாம்...''

அம்மா மறுகிப் போனாள். அதனால் தான் வந்ததில் இருந்து கணேசனுக்குக் கடிதம் கூடப் போடவில்லையாம். முழு மனசும் இங்கேதானாம்.

எப்போது தூங்கிப் போனேனோ...?

கறிகாய் மார்க்கெட்டுக்கு மன்னியும் சாருவுமாய்ப் போய் விட்டுத் திரும்பி னார்கள்.

''சேப்பங்கிழங்கு வாங்கியிருக்கா. மன்னி...'' என்றாள் சாரு.

கணேசனுக்கு ரொம்பப் பிடிக்கும்.

இன்றைக்கு வருகிறானே...!

இன்றைக்கு இரவே கிளம்பணும்னு எழுதியிருந்தானே? நீ உன் துணிமணிகளை எடுத்து வைச்சுக்கலையா...?'' என்றாள் அம்மா.

எப்போதும் போல், தணிவாய்ச் சிரித் தாள். 'வைத்துக் கொள்கிறேன்' அல்லது 'இல்லை' எந்த அர்த்தமும் புலப்படாத ஒரு சாந்தச் சிரிப்பு.

''என்னடி... கிளம்பறியோன்னோ...?''

''எம்மா... நான் இங்கே இருக்கக் கூடாதா...?'' என்றாள் மெதுவாய்.

''சிச்சி... எவ்வளவு நாள் வேணும்னா லும் இரு... ஆனா... அவனை... அவன் எப்படித் தனியா அங்கே இருப்பான்...?''

''எல்லாம் இருப்பார்... என்றாள்.

எனக்குப் புரிந்தது. மன்னி அழுத்தக் காரிதான். நிச்சயம் நினைத்ததைச் சாதிப் பாள். எவர் மனமும் புண்படாத மாதிரி இந்த அழுத்தம் ரசிக்கக் கூடியது... நல்லது செய்யக் கூடியது.

எனக்கு மன்னியை உடனே நமஸ்கரிக்க வேண்டும் போலிருந்தது. கண்களில் நீர் கட்டிக் கொண்டது.

ஏதோ வேலையாய்ப் போவது போல் இப்போதும் விலகிப் போனேன்.

ஆனால் என் மனம் மட்டும் மாறி யிருந்தது.



* நீண்ட மடிந்த காதுகள், நீண்ட வால், கீழ் நோக்கிச் சரியும் மார்பு — ராஜபாளைய நாய்

இந்த நாயிடம் வாலாட்ட முடியாது!

'ராஜபாளையம் நாய்' அச்சம் கலந்த மரியாதையை உருவாக்கும் சொற்கள். அப்படி அஞ்சுவதில் அர்த்தமில்லாமலும் போக வில்லை. மிகச்சிறந்த காவல் நாயாகக் கருதப்படுவது ராஜபாளையம் நாய்.

சுமார் ஐந்நூறு வருடங்களுக்கு முன்னால், நாயக்க மன்னர்கள் ஆட்சிக் காலத்தில், ஆந்திராவிலிருந்து தமிழகம் வந்த ராஜு"க்கள் (போர் வீரர்கள்) ஆங்காங்கே பாளையங்கள் அமைத்தனர். அவர்கள் தங்கியிருந்த பகுதி ராஜபாளையம் ஆகியது. வேட்டைக்கும் காவலுக்கும் அவர்கள் தங்களோடு அழைத்து வந்த நாய்கள் தான்ராஜபாளையநாய்கள்.

ராஜ பரம்பரையினரால் வளர்க்கப்பட்ட இவ்வின நாய்களிடம் இன்றும் கம்பீர குணங்களே காணப்படுகின்றன. வேட்டையில் வேங்கைப் புலியைக் கூட எதிர்க்கும். குறுகிய இடத்தில் கட்டிப் போட்டால் இதற்குப் பிடிக்காது: அழைத்தால் உடனே திரும்பிப் பாராமல் அலட்சியமாய் இருந்து விட்டு, மீண்டும் மீண்டும் கூப்பிட்டால் சாவகாசமாகத் திரும்பி 'என்ன?' என்று ஓர் உயர் அதிகாரி வினவுவது போன்ற கம்பீர தோரணையில் நம்மை நோக்கும்! மற்ற நாய்களைப் போல் இதைச் சுலபத்தில் வேலை வாங்க முடியாது!

* பதினைந்து நாய்களின் உரிமையாளர் குருசாமி.



இந்தக்குணங்கள் காரணமாகவே ராஜபாளையம் நாய்களுக்கு நல்ல கிராக்கி இருக்கிறது. இவ்வினத்தைக் காப்பாற்றி, தரமான குட்டிகளை ஈன்றெடுக்கச் செய்து, அவற்றை விரும்புவோருக்குக் கொடுத்து உதவும் பணியில் ஈடுபட்டுள்ளது ராஜபாளையம் நாய் வளர்ப்போர் சங்கம்.

சங்கத்தின் கௌரவச் செயலராய் விளங்கும் கால் நடை மருத்துவர் டாக்டர் வெ. ஞா. ஜெயராஜ், சங்கத்தின் பணிகளை விளக்கினார்:

''அறிவியல் முறையில் இனப் பெருக்கம் செய்து, ராஜபாளையம் நாய்கள் இனத்தின் தூய்மையைப் பாதுகாத்து மேம்படுத்துவது இச்சங்கத்தின் நோக்கம். இந்த முறையில் பெறப்படும் தரமான குட்டிகளை முறையாகப் பதிவு செய்து, விற்பனைக்கு ஏற்பாடு செய்வதுடன், குட்டிகளை எடுத்து வளர்ப்போருக்குத் தேவையான அறிவுரைகளையும் வழங்கி வழிகாட்டுகிறோம். வேறு சில உயர் ஜாதி நாய்களை வளர்த்து விருத்தி செய்யவும் ஊக்கமளித்து வருகிறோம். பொதுவாக நாய் வளர்ப்பதில் ஆர்வத்தையும் நாய் பராமரிப்பு பற்றிய அறிவையும் பரவலாக்குவது சங்கத்தின் நோக்கங்கள்.

''இச் சங்கம் தொடங்குவதற்கு முன்பு ராஜபாளையத்தில் சுமார் எழுபது வீடுகளில் நாய்கள் வளர்க்கப்பட்டு வந்தன. இப்போது சுமார் நூறு வீடுகளில் வளர்க்கிறார்கள்.

''ராஜபாளையம் நாய்களிலேயே A, B, C என்று மூன்று தரத்தவை உண்டு. இவற்றுள் கண் பார்வை

* டாக்டர் ஜெயராஜ்



நூறு சதவிகிதம் சரியாக உள்ள நாய்களையும்வாலின் தரம் உயர்வாக உள்ள நாய்களையும் இணையவிட்டால் உன்னதமான குட்டிகளைப்பெறலாம். இன்னும் மூன்று ஆண்டுகளுக்குள் அனேகமாக ராஜபாளையம் நாய்கள் எல்லாமே ஒரே சீரான தரத்தை எய்தி விடும்.

''கேழ்வரகு, கம்பு மாவுகள், அரிசி குறுணை, இறைச்சி, பால்போன்றவை நாய்களுக்குத் தரப்பட வேண்டிய உணவுகள். தக்க நேரத்தில் தடுப்பூசிகள் போடப்பட வேண்டும். நல்ல போஷாக்குடன் பராமரித்து வந்தால் பெண் நாய்கள் வருடத்தில் இரு முறை குட்டிகள் போடும். ஒவ்வொரு முறையும் ஐந்து முதல் எட்டு குட்டிகள் வரை பிறக்கும். ஆண் குட்டிகள் எண்ணூறு ரூபாய்க்குப் பெண் குட்டிகள் நானூறு ரூபாய்க்கும்விலைபோகும். ஒரு குழு (ஒரு ஆண், மூன்று பெண் நாய்கள்) வளர்ப்போர் ஆண்டொன்றுக்கு ஏழாயிரம் ரூபாய் நிகர லாபம்சம்பாதிக்கமுடியும்..''

சொன்னதோடு நில்லாமல் நிரூபணமாகக் கணக்கு விவரம் காட்டினார் ஜெயராஜ்.

இது நிச்சயமாய் நாய்ப் பிழைப்பு அல்லதானே!

— கோ. மா. கோதண்டம்.

வாசகர் யோசனை
நெல்லைக் குரலோன்,
பொட்டல்புதூர்

அருள் வாக்கு



பகவானை சௌந்தர்யமும், கருணையும் ஞானமும் உள்ள மூர்த்தியாக வைத்துக் கொண்டு பக்தி செலுத்துவோம். பிறகு அவரே அவருடைய வாஸ்தவ ஸ்வரூபத்தைக் காட்டிவிட்டுப் போகிறார். அவருடைய வாஸ்தவ ஸ்வரூபத்தை அவரே தான் காட்ட முடியும். நாம் செய்யக் கூடியது, நம் மனசுக்கு அந்த ஸ்வரூபம் எப்படி வந்தால் ஆனந்தமாக இருக்கிறதோ, அப்படி நினைத்துப் பக்தி செலுத்துவதுதான். அதைச் செய்ய ஆரம்பிப்போம்.

பகவானே கீதையில் இப்படித்தான் சொல்லியிருக்கிறார்.

பக்த்யா மாம் அபிஜானாதி யாவான்
யச்சாஸ்மி தத்வத:
ததோ மாம் தத்வதோ ஜ்ஞாத்வா
விசதே தத் அனந்தரம்॥

''ஒருத்தன் என்னிடம் பக்தி செலுத்திக் கொண்டேயிருந்தால், நான் யார், எப்படிப் பட்டவன் என்று உள்ளபடி தெரிந்து கொள்கிறான். அம்மாதிரி என்னை உள்ளபடி தெரிந்து கொண்டபின், எனக்கு வேறாக இல்லாமல் என்னுள்ளேயே புகுந்து விடுகிறான்,'' என்கிறார்.

அவருக்கு வெளியிலே நாம் இருக்கிற மட்டும்தான் அவரைப் பார்த்துப் பக்தி பண்ணலாம். உள்ளேயே புகுந்து விட்டால் அப்போது அவர் வேறு, 'நாம் வேறு இல்லை. ஒன்றாக — அத்வைதமாக ஆகிவிடுவோம். ஆனால் இப்படி ஆவது எப்போது சாத்யம் என்றால், 'என்னிடம் பக்தி செய்து, உள்ளபடி என்னைத் தெரிந்து கொண்ட பின்தான்' என்கிறார். 'ததோ மாம்' என்பதில் உள்ள 'ததோ' 'தத:' என்பதற்குப் 'பின்னால்,' 'அப்புறம்' என்று அர்த்தம். இப்போது பண்ணக் கூடியது பக்தி; அப்புறம் நடக்க வேண்டியது அந்தச் சமயத்தில் நடக்கட்டும்! பக்தி பண்ணிக் கொண்டேயிரு. அப்புறம் நான் உள்ளபடி எப்படியிருக்கிறேன் என்பதை நானே காட்டி, உன்னை அத்வைதமாகக் கரைத்துக் கொள்கிறேன்'' என்கிறார்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

வட்டமேஜை

'வைட்டமின்'னான ஓவியம்!

○ திரைப்பட விழாக் கதையான 'அப்பா' படித்த போது அப்பப்பா! எப்படித்தான் இது போன்ற கதைகளைப் படைக்கிறார்களோ என்ற பிரமிப்பு ஏற்பட்டது! முடிவு எவருமே சற்றும் எதிர்பாராதது.

புவனகிரி. ச. அருட்செல்வன்.

○ 'மெல்ல மெல்லச் செவிடாக்கும் இரைச்சல்கள்' அதிசயக் கட்டுரை! வியப்பான கேள்விகளை டாக்டர்களிடம் கேட்டு அதை விட வியப்பான தகவல்களை அவர்களிடம் பெற்றுத் தந்திருந்தது பயனுள்ளதாக இருந்தது. அத்துடன் நில்லாமல், இரைச்சலைக் கட்டுப்படுத்துவதில் போலீஸ் துறையின் பங்கு என்ன என்பதையும் காவல் துறை ஆணையரிடம் கேட்டிருந்தது பாராட்டும்படி இருந்தது.

அரூர். மு. மதிவாணன்.

○ ''தனுஷ்கோடி பாலம்'' ஒரு சரித்திரச் சின்னம் அல்லவா! பழமைகளைப் போற்றிக் காக்க வேண்டும். இதை அரசாங்கம்தான் உணர வேண்டும்.

சென்னை — 44. எஸ். குருசாமி.

○ தனுஷ்கோடி பாலம் இடித்தாலும் தனம் கோடி லாபம் என்பதை நல்ல விளக்கம் தந்து காட்டியிருக்கிறீர்கள். ஊர் உலகத்திற்கு மறைமுகமாகத் தெரிந்த இவ் விஷயம் இப்போது கல்கி மூலம் வெட்ட வெளிச்சமாகி உள்ளது.

இலால்குடி. எம். இராஜேந்திரன்.

○ பாக்கியம் ராமசாமியின், 'அப்புசாமி — சீதாப் பாட்டி கதைகள்' வரவிருக்கும் 10.3.91 கல்கி இதழை எங்கள் குடும்பமே ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது.

வேலூர் — 9. மு. ஜெயலக்ஷ்மி.

○ காஜா நஜிமுதீனின் அற்புதமான கண்டு பிடிப்பை வெளி உலகத்திற்கு அடையாளம் காட்டிய கல்கியைப் பாராட்டுகிறேன். இது போல் கண்டுபிடிப்பாளர்களை இனங்கண்டு ஊக்கப்படுத்தினால்தான் நம் நாடும் மேல்நாடுகள் போல் தொழில் நுட்பத்தில் முன்னேறும்.

தக்கோலம். அ. அஹமத் பாஷா.

○ தமயந்தி அவர்கள் எழுதிய 'வதந்தி' சிறுகதை பார்த்தேன். படித்தேன். இரசித்தேன். சிறுகதைக்கான ஓவியம் மிக மிக அருமை. கதைக்கு மேலும் வலுவூட்டிய வைட்டமினாக ஓவியம் அமைந்திருந்தது.

வேலூர் — 9. ச. மணிவண்ணன்.

○ கலைஞர் தம் பேட்டியில் கூறிய கருத்துக்கள் அத்தனையும், அவரின் வாதத் திறமைகளுக்குச் சான்றாக அமைந்தது மட்டுமல்லாமல் அவரின் தன்னம்பிக்கை, துணிவு, அச்சமின்மை போன்ற குணங்களையும் பிரதிபலித்தன. இதை நிரூபிக்கும் வகையில் உணர்ச்சிகள் பொங்கி வழியும் அவரின் படத்தைக் கல்கியின் அட்டையில் போட்டது மிகப் பொருத்தம்!

மதுரை — 6. எம். பி. துரைஸ்வாமி.

○ கழகத்தின் கட்டுக்கோப்பைக் காத்திடும் காவலனாய்க் கலைஞரும், காவலனின் ஏவலர்களாய்த் துவளாத தொண்டர்களின் பலமும் இருக்கும் வரை தி. மு. க. ஒரு பீனிக்ஸ் பறவைதான் என்பதை உறுதிப்படுத்தியுள்ளது கலைஞரின் பேட்டி.

காட்டூர். எஸ். அருள்மொழி.

○ தி. மு. க. வின் எதிர்காலமென்பது, தேர்தலை வைத்து நிர்ணயிக்கப்படுவதல்ல. அதனால் அது எப்போதுமே நன்றாகத்தானிருக்கும் என்று கலைஞர் அளித்த பதிலில் உறுதியும், தன்னம்பிக்கையும், தெரிவதோடு, கடுகு சிறுத்தாலும் காரம் போகாது என்பதையும் உணர்த்தியது!

கும்பகோணம். எஸ். கே. மூர்த்தி.

○ இ. பி. ஆர். எல். எஃப். தலைவர் பத்மநாபா கொலை பற்றிக் கலைஞர் கூறியுள்ள கருத்துக்கள் மழுப்பல்களே. பத்மநாபாவைப் பட்டப்பகலில் கொலை செய்து விட்டு ஓடியவர்களைக் கடைசி வரை கண்டுபிடிக்க முடியவில்லை. இனி தி. மு. க. வுக்கு மக்கள் ஆதரவு தேவையெனில், புலிகள் மற்றும் தி. க. போன்ற கட்சிகளுடன் உள்ள உறவைத் தவிர்க்க வேண்டும்.

சென்னை — 5. எஸ்வியார்.

○ பெட்ரோல் கடத்தல் பற்றிய தங்கள் கேள்விக்குக் கலைஞரின் பதில் ஏற்கத்தக்கதல்ல. தங்கம் கடத்தப்படுதலும் பெட்ரோல் கடத்தப்படுதலும் ஒன்றாகி விடாது. அதிலும் இப்போது பெட்ரோல் மசூலுக்குத் தட்டுப்பாடு அதிகம் என்பதும் விடுதலைப் புலிகளின் போராட்டத்துக்குப் பெட்ரோல், டீசல் இன்றியமையாதது என்பதும் கவனத்தில் கொள்ளத்தக்கது.

கருப்பம்புலம். கே. எஸ். பாலாஜி.

○ கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாய், சத்தியமூர்த்தி பவனில், கொடி கட்டிப் பறந்த தமிழக காங்கிரஸ், போயஸ் கார்டன் வாசலுக்குக் குடி போன சோகத்தை, தலையங்கத்தில் மிக அற்புதமாக விவரித்திருந்தீர்கள்!

வேலாயுதம்பாளையம். சம்பத்.

○ கல்கியின் இவ்வாரத் தலையங்கம் ஒவ்வொரு தமிழக காங்கிரஸ் தொண்டர் இதயத்திலும் குமுறிக் கொண்டிருக்கும் எண்ணங்களை வெளிப்படுத்தும் வண்ணம் இருந்தது!

குடியாத்தம். இ. எஸ். லலிதா.

○ தமிழகத்தில், என்றைக்குத் திராவிடக் கட்சிகள் தோன்றினவோ அன்றைக்கே, காங்கிரஸ் முதுகெலும்பு இழந்து தொடுந்து விட்டது. அது, தமிழகத்தில் கொஞ்சமாவது நிமிர்ந்து நிற்க வேண்டுமானால், செல்வாக்குள்ள ஒரு கட்சியைக் கைத்தடியாக உபயோகித்தே தீர வேண்டும் என்பது தங்களுக்குத் தெரியாதா...?

புதுவண்டிப்பாளையம். கடலூரர் த. ரவீந்திரன்.

○ சட்டமன்றத்தில் ஒரு பெண் அவமானப் படுத்தப்பட்டதைக் கண்டிக்காதவரை, ஜனநாயக வழியில் கருப்புக் கொடி காட்டிய நபரை செருப்பால் அடித்தவரைக் கண்டிக்காத வரை, தி. மு. க. வுக்கு நிச்சயம் தமிழக மக்கள் தண்டனை வழங்கி, தாங்கள் முதுகு எலும்பு உள்ளவர்கள் தான் என்பதை நிரூபிக்கத்தான் போகிறார்கள்!

கோவில்பத்து. பூவை கிருட்டிணன்.

குறிஞ்சிகளுக்கிடையே ஒரு கள்ளிச்செடி

"ஆனா ஒன்னு மொதலாளி. கொஞ்சம் வித்தியாசமாத்தான் எடுத்துருக்காங்க போல... ரெண்டே பாட்டு. அதுவும் ரொம்பக் கச்சிதமான சிச்சுவேஷன்லியாம்.. எனக்கென்னவோ...."

கையமர்த்தினார் முதலாளி... இந்த வர்த்தகத்தில் தமது பெயரைத் தலைமுறைகள் தாண்டி நிறுத்தி வைத்துள்ளவர். இவருடன் கடை விரித்தவர்கள் அனைவரும் இந்த மாயச் சூதாட்டத்தில், அதன் வெம்மை தாளாமல், முதலீட்டைக் காப்பாற்றும் எண்ணத்தில், வேறு ரூபங்களில் அதனை மாற்றி விட்டனர். இன்னும் பழம் பெருச்சாளி இவர் ஒருவர்தான்...

"ஏன்பா... இன்னும் முடிஞ்சமாதிரி தெரியலே... அதுக்குள்ள நீயும் பயந்துக்கிட்டு என்னையும் பயமுறுத்தறியே... ஷூட்டிங் முடியணும். லேப்புக்குப் போவணும். சென்஼ஸார், பிசினஸ்; எவ்வளவோ இருக்கு நடுவுல.." முதலாளி மெத்தனமாகக் கூறினார்.

"இல்லீங்க முதலாளி. நீங்க நினைக்கறாப்பல சுளுவாப்படலே... இது ரொம்ப லோ பட்ஜெட்டு. ஆளுக்குப் பத்தாயிரம்னு ஒரு சின்ன சர்க்கிள்ள வசூல் பண்ணி எடுக்கிறாங்க. சில பெரிய கைங்களோட சப்போர்ட் இருக்குன்னு வேறு கேள்வி. எல்லாருமே புதுசு. நம்ம போறாத நேரம், க்ளிக் ஆயிடுச்சுன்னா அவ்ளோதான்..." சூரனிலேயே எல்லாம் முடிந்து போனதைக் குறிப்பிட்டார் மருதுசாமி. அவர் முதலாளியின் நெடுநாளைய நண்பர்... அவர் படங்களின் தென் ஜில்லாக்களுக்கு நிரந்தர விநியோகஸ்தருங் கூட....

முதலாளி பைப்பைப் பற்றவைத்துப் புகை மண்டலத்தை உருவாக்கினார். இப்போது அவர் யோசிப்பதாகப் பட்டது மருதுசாமிக்கு... துல்லியமான ஓசை கூட கேட்கும் நிசப்த சங்கீதம் அந்த அறைக்குள் புகையுடன் தவழ்ந்தது..

சமீபகாலமாக முதலாளியின் தயாரிப்புக்கள் அனைத்தும் பட்டி தொட்டியெங்கும் பேசப்படுவதற்கு பதில் விசுவாசமான ஊழியர்கள் போல அவரிடமே திரும்பி வளைய வந்தன. சூப்பர் ஸ்டார்களை வைத்து எடுத்த படங்கள், முழுக்க முழுக்கப் பக்தியைப் பிழியும் கதைகள், முன்னணி இசையமைப்பாளரின் கான மழையில் நனைந்த படம் ஒன்று, என்று என்னென்னவோ... ஒன்றும் காசு பார்க்க வில்லை.

முதலாளி சலித்துக் கொண்டார். புற்றீசல் போல் எவ்வளவோ கம்பெனிகள், சம்பந்தமில்லாதவர்கள் எல்லாம் சினாரியோ உருவாக்குகிறார்கள். போதாக்குறைக்கு, சினிமாக் கல்லூரி ஆட்கள் வேறு. நகரில் இப்போது வெற்றிகரமாக ஓடும் சினிமாக்கள் 'ஜாம்பவான்களின்' முயற்சியில் வந்தவை அல்ல. வெற்றிப் படத்துக்கு உண்டான சட்டத்தை, அலங்காரத்தைப் பற்றி அவர்கள் கணக்கில் கொள்வதே இல்லை. நிலைமை நீடித்தால் தன் ஸ்டுடியோவையும் காம்ப்ளக்ஸாகவோ, அரிசி கொள்முதல் நிலையமாகவோ மாற்ற வேண்டியதுதான். ஆனால் படம் என்பது முதலாளியின் ஆகிவந்த தொழில். இத்தனை நாட்களுக்குப் பின்பு புதிய வணிகம் என்பது அவருக்குச் சரிப்படாத ஒன்று.

நகம் கடித்தார்.

இப்போது அடுத்த படம் முடியும் நேரம். தமிழ் சினிமாவின் சிரஞ்சீவித்துவம் பெற்ற, காதல் கதை. மீசை அரும்பாத இளசு ஒன்றும், போன படம் வரை மழலை நட்சத்திரமாய் இருந்த பெண் ஒன்றும் ஜோடி சேர்கிறது. ரீலுக்கு ஒரு பாடல் வெவ்வேறு லொகேஷன்களில், வடக்கில் நொடித்துப் போன கம்பெனிக்கு உயிரூட்டியதே இது போன்ற காதல் கதைதான். அந்தச் சூத்திரத்தைத்தான் முதலாளி கையாண்டிருக்கிறார்.

இப்போது மருதுசாமி அவருக்குக் 'கிலி' கொடுக்க வந்து விட்டார். அவர் சொன்னதை அப்படியே தள்ளி விட முடியாது. ஏனெனில் அது வித்தியாசமான சிவப்புச் சிந்தனைப் படம். வர்க்கப் போராட்டம் பற்றியது. தமிழ் சினிமாவின் வெற்றி ஓரளவு அது வெளிவரும் நேரத்தைச் சார்ந்தது. நம் படத்தோடு இது வெளியானால் மக்களின் கவனம் இதன் பக்கம் திரும்ப நிறையவே வாய்ப்பிருக்கிறது. காதல் கதைதானே என்னும் அலட்சியம் வந்து விட்டால் அது தன்னைப் பாதிக்கும்.

"சரி, மருது. நீங்க ரெண்டு மூணு பேரு

சுப்ரமணியன் ரவிச்சந்திரன்

போங்க. அந்த ஆளுங்களை என்னோட பேச ஏற்பாடு பண்ணுங்க. ஏதாவது பண்ணித்தான் ஆகோணும்?''

ப்ரிவியூவில் நிறைய ஆட்கள் வந்தனர். என்னதான் வேகம் உள்ளவர்களாயினும் முதலாளியைக் காணும்போது அவர்களுக்குள் ஒரு பயம் கவ்வவே செய்தது. தொழிலின் முன்னோடி. அனுபவஸ்தர். அவருடன் அமர்வதே பெரிய சாதனை போல் இருந்தது.

படம் ஓடியது. பைப் பிடித்தபடி கண் கொட்டாமல் முதலாளி பார்த்தார். மில் தொழிலாளிகள் பற்றிய படம். வன்முறையோ, சண்டைக் காட்சிகளோ, இல்லாமல் ரொம்பவும் யதார்த்தமாக இருந்தது. இது எப்போதும் போல, வந்த சுவடு தெரியாமல் போய் விடும் பத்தோடு பதினொன்றாக அமையலாம். அல்லது பிய்த்துக் கொண்டு ஓடிக் கொட்டு கொட்டு என்று காசைக் கொட்டலாம். இடைப்பட்ட வெற்றி நிச்சயம் கிடையாது. அப்படி ஓடுமாயின் தனது நாற்காலி கக்கல் கக்கலாய்த் தெறித்து விடும். இவர்கள் பாணியில் தன்னால் படமெடுக்கவும் முடியாது. தனது ரத்தம் பொழுது போக்கு அம்சம் ஊறிய ரத்தம். கலைச் சேவை, யதார்த்தம் என்பதெல்லாம் ஊம்பக். போட்ட முதலீட்டை அரிக்கும் கரையான்கள்.

இவர்கள் அணுகுமுறை புதிய பாணி. ஆண்டாண்டு காலமாய்த்தானும், தன்னைப் போன்ற பிதாமகர்களும் உருவாக்கிய வியாபார மரபுகளை ஏளனம் செய்வது போன்ற உத்தி. இத்தனை வருடங்கள் செலவழித்து பேனர் என்ற ஒரு பிரும்மாண்டத்தை ஸ்தாபித்திருக்கிறோம். அதைக் குறுகிய காலத்தில், எந்தவித சிரமமுமின்றி இவர்கள் தகர்ப்பதா?

முதலாளிக்கு வயிறு எரிந்தது. ஆனால் அதை வெளிக்காட்ட வில்லை. வெளிக் காட்டினால் அது பலவீனம். தனது பலவீனம் வெளிப்பட்டால் இவர்களுக்குக் கொண்டாட்டமாகி விடும். அந்தக் கொண்டாட்டம் இவர்களுக்கு வெற்றியை உறுதி செய்யும். இந்தக் கூட்டத்தில் குசும்பு பிடித்த பத்திரிகைக்காரர்கள் வேறு இருக்கிறார்கள்.



The following particulars regarding the ownership of 'KALKI' the Tamil weekly newspaper, are published as called for by Rule 8 of the Registration of Newspapers (Central) Rules 1956.

FORM IV

1. Place of Publication : Madras
2. Periodicity of Publication : Weekly
3. Name of Printer : V. Murali
   Nationality : Indian
   Address : AA-117, Shanthi Colony,
   Anna Nagar, Madras - 600 040
4. Name of Publisher : V. Vaidyanathan
   Nationality : Indian
   Address : 6A, Warren Road,
   Mylapore, Madras - 600 004
5. Name of Editor : K. Rajendran
   Nationality : Indian
   Address : 1, Fifth Street, Lake Area,
   Nungambakkam,
   Madras - 600 034
6. Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one per cent of the total capital : Bharathan Publications Private Limited, 84/1-C, Race Course Road, Guindy, Madras - 600 032

I hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

V. Vaidyanathan
1.3.1991 Publisher

'என்னைச் சீண்டுவார்கள். என்னைச் சீண்டச் சீண்ட அவ்வளவும் அவர்களுக்கு வியாபாரம். இதற்கு இடம் கொடுக்கவே கூடாது.'

“எப்படி சார்?” — படம் முடிந்து வெளிச்சத்தில் ஆவலாய்க் கேட்டனர்.

“க்ளாஸ் மூவி. அப்ரோச் ரொம்ப ஜோரா இருக்கு. ஃபெஸ்டிவலுக்குத் தாராளமா அனுப்பலாம். டைரக்டர் யாரு?”

டைரக்டர் நடுத்தர வயதில் இருந்தார். காக்கி பேண்ட் காக்கி சட்டையுடன். ரயில்வேயில் பணிபுரிபவராம்.

எறத்தாழ யூனிட்டே அப்படித்தான் இருந்தது. ஒருவர் மோட்டார் கம்பெனி உத்தியோகம். ஒருவர் பால்வாடி ஊழியர். இன்னும் மின்சார வாரியம், வருமானவரி, கோர்ட் என்று பல துறை ஆட்கள். கதை எழுதியவர் ரிக்ஷா ஓட்டுபவராம். அவரவர் வயலை விட்டு அந்நிய நிலத்தில் சாகுபடி செய்ய வந்திருக்கிறார்கள்.

பெரியவர் அனைவரையும் உற்சாகமாகக் கைகுலுக்கி ஊக்கமூட்டினார். ஒவ்வொருவரையும் விரிவாக விசாரித்தார். ஊன்றிக் கேட்டார். நிறைய விவாதித்தார். கடைசியாக விடை பெறும் முன் விருந்துக்கு அழைத்தார். எல்லோரும் சந்தோஷமாய் ஆடினர்.

'ஆடட்டும். இறுதியில் ஆட்டம் காட்டுகிறேன்.' முதலாளி கைகூப்பி விடை பெற்றார்.

முதலாளியின் தோட்டத்தில் விழாக் கோலம். விருந்து மேஜைகளில் புதியவர்கள்.

“நீங்க நல்ல படம் எடுத்துட்டீங்க. ஆனா வெற்றிப்படமா அதை மாத்த வேண்டாமா? அப்போத்தானே அது பூரணமா இருக்கும்..” முதலாளி ஆரம்பித்தார்.

“ஏன். இது ஹிட்டுதான். சந்தேகம் என்ன?” டைரக்டர் படபடவென்றார். உற்சாகமான ரத்தம்.

“ஹிட்டுதான். ஆனா இந்த ஸ்டேஜில இல்ல. எல்லாம் சரி. ஆனா பிரபலம்னு ஒரு வார்த்தை இருக்கு. பிரம்மாண்டமா ஜனங்க எதிர்பார்ப்பாங்க. ரிச்னஸ். அது தேவை இல்லியா...?”

“கனவுக் காட்சி சேக்கணுங்கறீங்களா. அதையெல்லாம் ஒடைக்கத்தான் இதுவே! இது நிஜமான கலை. இதுக்கு அலங்காரம் பண்றது வீண்” — சூடாய்ச் சொன்ன அந்த இளைஞன். தாடி வைத்துக் கொண்டு பவர் கிளாஸ் போட்டிருந்தான்.

முதலாளி ஒரு வினாடி தாக்குண்டார். இருப்பினும் சுதாரித்துக் கொண்டார்.

“நான் இல்லேங்கல. ரிசல்ட் நல்லா வரணும்னா சில சமாசாரங்கள் செய்ய வேண்டியிருக்கே. ஒண்ணு பண்ணலாம். இந்த ஸ்கிரிப்டைக் கொஞ்சம் கூட மாத்த வேண்டாம். அப்படியே இருக்கட்டும். பெரிய ஆட்களைப் போட்டு ஒரு வரி கூட மீறாம அப்படியே எடுத்தா சூப்பர் ஹிட்டா இருக்கும். திருப்பியும் ஷூட் பண்ணலாம். நான் செலவு பண்றேன். இவ்வளவு பாடுபட்டு ஜனங்களுக்குப் பிடிக்கலேன்னா, இல்ல படம் விழுந்துச்சுன்னா யாருக்கும் புண்ணியமில்லாமப் போகும். ஜனங்க ரசனையைக் கொஞ்சம் கொஞ்சமாத்தான் கொண்டு வரணும். குறைப் பிரசவமா போறதைக் கண்டு எனக்குக் கஷ்டமா இருக்கு. நானும் ஒரு படைப்பாளிதான். எனக்கு அந்தச் சிரமம், தோல்வியோட வலி எல்லாம் தெரியும். பின்னாடி வர்றவங்களுக்கு நம்மாலான உபகாரத்தைச் செய்யறதுதான் இத்தனை நாளு நான் தொழில் செஞ்சதுக்கு உண்டான மரியாதை.”

களுக்கென்று ஒரு மூலையில் சிரிப்பு வெடித்தது.

முதலாளி அதைக் கவனித்ததாகவே காட்டிக் கொள்ளவில்லை. யாரோ தன்னையும், தன் தொழிலையும் குறித்து விமர்சனம் செய்து அதனால் சிரிக்கிறார்கள். இப்போது அதற்கு முக்கியத்துவம் கொடுக்கக் கூடாது.

“யூனிட்ல யாரையும் மாத்தலே. அவங்க ஐடியாவை அப்படியே யூஸ் பண்ணலாம்.

வியாபாரத்துக்கு மட்டும் பிரபலமான ஆளுங்க பேரு... ஒங்களோட முக்கியத்துவம் கெடாமைக்கு நான் உத்தரவாதம். போதுமா?''

ஒருவர் முகத்தைஒருவர் பார்த்துக்கொண்டனர். பிறகு கிசுகிசுத்தனர். கிசுகிசுப்பு மெல்ல உரத்த குரல்களானது. பொதுக் கூச்சம் போனது. கையை ஆட்டி ஆட்டி விவாதித்தனர். அவரவர் இருக்கையை விட்டு எழுந்து குழுமினர். முதலாளி உட்கார்ந்த இடத்திலேயே பைப் பிடித்துக் கொண்டிருந்தார்.

தான் சுண்டி விட்ட ஒரு கல்லானது வட்ட வட்டமான அலைகளைத் தோற்றுவித்திருக்கிறது. இன்னும் குழம்பும். குழம்பக் குழம்ப மீன் பிடிக்கப் போகும் தருணம் நெருங்குகிறது என்று அர்த்தம்.

கொதித்த பால் தணிவது போல அவர்கள் உரையாடல் முற்றுப் பெற்றது. அவரை நோக்கி வந்தனர். முடிவுக்கு வந்து விட்டனர்.

''சார். இது எங்க முதல் முயற்சி. லாப நஷ்டமெல்லாம் அப்புறம்தான். ஜனங்களுக்கு நாங்க நாங்களாவே அறிமுகமாகணும்.''

குழுவின் தலைவர் கையைக் குறுக்கே கட்டிக் கொண்டு கூறினார்.

முதலாளி பிரமித்தார். இருப்பினும் அவர் முகம் அதை வெளிக்காட்டவில்லை. அவரது வியாபாரத்திற்கு, உள்ளேயுள்ள முகம் சரிப்படாது.

''நல்லா யோசிங்க. நீங்க நல்லா வரணும்னு நான் விருப்பப்படறேன். இது பெரிய பெரிய ஆளுங்க கை வச்சுச் சுட்டுக்கிட்ட தீம்....''

''பூவே புதுப் பூவேன்னு நீங்க எடுத்தீங்க. எல்லாரும் டாப்தான். என்ன ஆச்சு?... படுத்துடலையா? பிரபலம்கறது மாயைதான்.'' —கோர்ட் குமாஸ்தா இடம் பார்த்து அடித்தார். வாயைத் துடைப்பது போல் ஆங்காங்கே சிரித்துக் கொண்டனர்.

''வாஸ்தவம். அது விழுந்ததுக்கு வேற ரீஸன். பட் இந்த சப்ஜெக்ட்டுக்கு ரிச்சா பண்ணலாம்.''

''வேண்டாம் சார், படம் நல்லாயிருக்குன்னு நீங்க சொன்னதே திருப்தியான விஷயம். அப்படியே ரிலீஸ் பண்ணலாம்னு பார்க்கிறோம்.''

''சரி. ஒங்க இஷ்டம். ஏதோ அனுபவஸ்தன்கற முறைல சொன்னேன். ஒங்களுக்கு ஏதாவது பண்ணனும் போல இருக்கு. நானே டிஸ்ட்ரிப்யூட் பண்ணலாம்னு இருக்கேன். அதையாவது செய்யலாமா. புது முயற்சிக்கு என்னால் ஆனது!''

குரலில் நெகிழ்ச்சியை வரவழைத்துக் கொண்டார்.

அவர்கள் முகத்தில் மலர்ச்சியும், பிரகாசமும் ஒன்று சேர, உற்சாகம் தென்பட்டது.

விநியோகம் என்பது பெண்ணிற்கு மாப்பிள்ளை போல. இந்த மாப்பிள்ளை அமையாமல் எத்தனையோ கன்னிகள் வீட்டோடு இருக்கிறார்கள்.

முதலாளியை அனைவரும் பெருமிதம் கலந்த நன்றியுடன் பார்த்தனர். எவ்வளவு பெரிய விஷயம். முதலாளி பெரிய மனிதன்தான். அவருடைய காருண்ய சிந்தையால்தான் அவர் இன்னும் தொழிலிலிருந்து புறக்கணிக்கப் படாமல் இருக்கிறார்.

அனைவரும் கை தட்டி வரவேற்றனர். பெரிய பாரம் ஒன்று அவர்கள் தோள்களிலிருந்து விடுவிக்கப்பட்ட ஆசுவாசம் தெரிந்தது.

ரேடியோ, பத்திரிகை விளம்பரங்களை முதலாளியே கவனித்துக் கொண்டார். அவருடைய சொந்தப் படத்திற்குப் போட்டிகள், தொலைக்காட்சி விளம்பரங்கள், கேசட் வெளியீடு என்று ஏற்பாடுகள் செய்தார். அது தனி, இது தனி...

தன் படத்துக்கு மௌண்ட் ரோடு தியேட்டர்களையும், இந்தப் படத்துக்கு ஒதுக்குப்புறமான அரங்குகளையும் தேடிப் பிடித்து வெளியிட்டார். தமிழகம் முழுவதும் பாடாவதி அரங்கங்களாய்ப் பொறுக்கி எடுத்து, அதில் விநியோகம் பெற்ற படத்தைக் கொடுத்து விட்டுக் காத்திருந்தார்.

படைப்பாளிகள் இந்தச் சூதைக் காலம் கடந்தே உணர்ந்தனர். ஆனாலும் ஒன்றும் செய்ய முடியாத, கையை விட்டுப் போன விபரீதம்.

முதலாளி தன் படத்தின் வெற்றி விழாவுக்கான ஏற்பாடுகளில் மும்முரமாயிருந்தார்..!

வேலூர் மிஷன் ஆஸ்பத்திரி நிறுவனர் டாக்டர் இடா ஸ்கட்டர் அம்மையாருக்கு நகரத்தின் நடுவில் ஒரு வெண்கலச் சிலை நிறுவக் கருதி, பொது மக்களிடம் பணம் வசூலித்து, அனுமதிக்காக அவரை அணுகிய போது அவர், ''கழிவுள்ள திறந்தவெளிச் சாக்கடைகள் உங்கள் கண்களை உறுத்தவில்லையா? நாற்றம் நாசியைத் துளைக்கவில்லையா? அவற்றைமூடுங்கள். அதுவே நீங்கள் எனக்கு நிறுவும் நினைவுச் சின்னமாக இருக்கும்'' என்றார். அவ்வாறே செய்து அதன் மீது ஒரு சாலை அமைத்து அதற்கு 'இடா ஸ்கட்டர் சாலை' என்று பெயரிட்டார்கள்.

— அ. ஷண்முகசுந்தரம்.



"நீ தண்டவாளத்தில் படுத்து உயிர் துறக்கத் துணிஞ்சப்புறம்தானே உன் காதலி மனம் மாறி உன்னைக் கல்யாணம் செஞ்சுக்கிட்டா...? இப்போ விவாகரத்துக் கேக்குறான்னு சொல்றியே...! ஏன்... ஏதாவது தகராறா?"

"இல்லேப்பா... நான் தண்டவாளத்துல படுத்த அன்னிக்கு பத்தங்கிற விஷயத்தை அவகிட்ட யாரோ போட்டு உடைச்சிட்டாங்க..."

— எல். ஆர். ராஜபாஸ்கர், சென்னை — 88.

●

● கல்லூரிக்கு மாணவர்களும், மாணவிகளும் கூட்டமாக நடந்து சென்று கொண்டிருந்த போது குண்டாக இருந்த மாணவி, 'என்னால் இந்தக் கையில் வாட்ச் கூடக் கட்ட முடியவில்லை' என்று சத்தமாகக் கூறி வருத்தப்பட்டாள்.

அருகில் வந்த ஒரு குறும்புக்கார மாணவன், 'வாட்ச் கட்டுகிற கையா இது? வால்கிளாக் அல்லவா கட்ட வேண்டும்!' என்று கூறியவுடன் அம்மாணவி உள்பட அனைவரும், 'குபீர்'!

— ஆர். சாந்தி, பொறையாறு.

●

டீசல்
விலை
உயர்வினால்
பால்
விலை
ஏறுவது
ஏன்?

50

சிரிக்க வையுங்கள்;
சிங்கப்பூர் செல்லுங்கள்!



ஜெயிலர்: போன தடவை ஜெயிலிலே எழுதப் படிக்கக் கத்துக்கிட்டவன் நீதானே? இந்த முறை எதற்கு வந்திருக்கே?

கைதி: ஹி! ஹி! கள்ளக் கையெழுத்துப் போட்டேன்!

— எல். ஸ்ரீராம், கோவில்பட்டி.

●

● நல்ல பசியுடன், நண்பர்களும் நானும் டிபன் சாப்பிட ஒரு ஹோட்டலுக்குச் சென்றோம். இஷ்டப்பட்ட அயிட்டத்தை ஆர்டர் செய்தோம். மேலும் மேலும் எங்கள் ஆர்டர் தொடரவே, இதற்கிடையில் நண்பராகிவிட்ட சர்வர் கூறினார்:

"யாகாவா ராயினும் நாகாக்க; காவாக்கால்
ஏறுமே பில்லின் தொகை!"
நினைத்தால் இன்னும் சிரிப்பு வருகிறது.

— ஆர். ராமரத்தினம், சாயபுரம்.

●

மனைவி: ஏங்க அப்படி என்னங்க வாழ்க்கை வெறுத்துப் போச்சு, காட்டுக்குப் போறேங்கறீங்க?





கணவன்: நீ வேற எரிச்சல் கிளப்பாதடி. கேஸ், கெரசின் எதுவுமே கிடைக்க மாட்டேங்குது. அதான், காட்டுக்குப் போய் விறகு வெட்டிட்டு வரலாம்னு கிளம்புறேன்!

— வி. பாலாஜி, சென்னை – 11.

●

● எங்கள் கல்லூரி தேசிய நெடுஞ்சாலைக்கு அருகில் இருந்ததால் எந்தப் போராட்டமென்றாலும் சாலை மறியல் செய்ய வசதியாக இருந்தது. ஒருமுறை ஐந்து கோரிக்கைகளை முன் வைத்துச் சாலை மறியல் நடந்து கொண்டிருந்தது. எஸ்.பி. எங்களிடம் பேசிக் கலைய வேண்டுவதற்காக வருகிறார் என்று போலீஸார் கூறினர். ஜீப் வந்தது. இன்ப அதிர்ச்சி! ஐ.பி.எஸ். அதிகாரியான அழகிய இளம் பெண்மணி ஒருவர் வந்து மைக் எடுத்து ஐந்து நிமிடம் பேசினார். மாணவர்கள் அனைவரும் சொக்கிப் போய்க் கலைந்து சென்றனர்.

அடுத்த மாதம் மீண்டும் சாலை மறியல் செய்த போது ஆறாவதாக ஒரு கோரிக்கை இருந்தது... 'எங்களைச் சமாதானம் செய்ய மீண்டும் அதே போலீஸ் அதிகாரி வர வேண்டும்!'

— எம். அருண், ஹைதராபாத்.

●



ஒருவர்: என்ன இது? மண்டைல அடிபட்டு இரத்தம் வடிஞ்சுகிட்டிருக்கிற பேஷண்ட்கிட்டே, டாக்டர் ஒரு நாவலைக் கொடுத்துப் படிக்கச் சொல்கிறாரே?''

நர்ஸ்: அது 'ரத்தத்தை உறைய வைக்கும்' பயங்கர மர்ம நாவல்; அதான்.

— ஆ. நல்லமுத்து, திருநெல்வேலி – 7.

●

பெண்: டீசல் விலை ஏறினதால பால் விலையை ஏத்திட்டேன்னு சொல்றியே. எப்படிப்பா நியாயம்?


பால்காரர்: லாரியில கொண்டு வந்து விக்கற தண்ணியதாம்மா நான் வாங்கறேன். அவங்க தண்ணி விலையை ஏத்திட்டாங்களே!

— இரா. பரஞ்சோதி, சென்னை – 74.



சிகரங்களை நோக்கி...

20



அந்த மிச்சப்பகல் அச்சமூட்டுவதாகவே இருந்தது.

பகல் ஏதோ ஒரு சிலுவை சுமந்து சென்றிருக்க வேண்டும்; மெல்லவே கழிந்தது.

இருவரும் மௌனம் என்னும் ஒரே வார்த்தையை உச்சரித்துக் கிடந்தார்கள். வார்த்தைகளை நாவில் கட்டிப் போட்டு விட்டது யார்?

குழப்பத்தில் குழைத்துக் குழைத்து இந்த மௌனச் சுவர் எழுப்பியது எது?

பகலிலேயே இருட்டாகிப் போனவர்கள் இரவில் இன்னும் இருண்டார்கள்.

அன்றுதான் —

ராத்திரியின் நிறம் கறுப்பு என்பது அவன் கவனத்தில் உறுத்தியது.

ஓ!

நிறங்களுக்குப் பெயர் வைப்பது மனசுதான்.

•

"பேசு ஒவியா!

சில நேரங்களில் சப்தம்தான் கவசம்; நிசப்தம் சிலுவை."

தன்னையும் தன் மனசையும் சுவரில் சாத்தி வைத்திருந்தவள் சற்றே நிமிர்ந்தாள்.

"எதைப் பேசுவது?

என் கனவுகள் மீது பாறாங்கல் விழுந்ததையா? சோரம் போன அறிவுக்குச் சொந்தக்காரர் மகள் நான் என்ற சோகத்தையா?

இந்த பூமியில் ஒவ்வொரு மனிதனும் பூரணம் பெற வேண்டும் என்று நான் புறப்படுகையில் என் தந்தை என்ற ஒரு ராட்சசன் இந்த பூமியின் உயிர்க் குலத்தையே துடைத்தெடுக்கப் புறப்பட்ட துயரத்தையா?"

"உடைந்து விடாதே ஒவியா!

உன் தந்தையைத் திருத்த முடியும் என்ற நம்பிக்கை இன்னும் எனக்கு இருக்கிறது."

"இல்லை!

மழை மேல்நோக்கிப் பெய்து ஆகாய நீலத்தை அழித்தாலும் அழிக்கலாம்; என் தந்தையை ஆக்கிரமித்திருக்கும் மிருகத்தை அழிக்க முடியாது!

இத்தனை கால இடைவெளிக்குப் பிறகு என்னைப் பார்த்த போதும் அவர் கண்கள் என்னைத் தேடாமல் எப்போது பொன்னைத் தேடினவோ அப்போதே அறிந்து கொண்டேன் — அவர் இதயம் பாசப்பசை அற்றுப் போய்ப் பாலைவனம் ஆனதென்று.

இனிமேல் நீங்களும் நானும் சிந்தும் கண்ணீர்த் துளிகளால் அந்தப் பாலைவனத்தில் ஜீவநதிகளை சிருஷ்டிக்க முடியாது."



வில்லில் புறப்பட்ட அம்பாய் அவன் சொல்லில் புறப்பட்ட ஜுவாலையின் வெப்பம் சுட்டது அவனை.

''நாளை காலை அந்த மஞ்சள் மழைச் சூத்திரத்தை உன் தந்தை வெளிநாட்டாருக்கு விற்பது உறுதி என்கிறாயா?''

''உறுதி!
நாளை உதிப்பதற்குச் சூரியன் திசை தெரியாமல் திகைத்தாலும் திகைக்கலாம்;

வைரமுத்து

ஆனால் என் தந்தை இந்த உலகை அழிக்கும் உண்மையை விற்பது உறுதி.''

''ஒன்று கேட்பேன் உன்னை!''

''என்ன?''

''பாம்பு கடித்துப் பிழைத்தவனும் உண்டு;
செருப்புக் கடித்துச் செத்தவனும் உண்டு;

இப்படி ஒரு சூத்திரத்தை உன் தந்தை விற்காவிடினும் அது எவனோ ஒருவனின் அறிவுக்கு எட்டத்தானே போகிறது!''

''தப்பு!
என்றைக் கிருந்தாலும் சாகத்தானே போகிறது என்பதற்காகக் குழந்தையைத் தாய் கொன்று விடுவதில்லை!
இன்னொன்று சொல்வேன் திருஞானம்.''

''என்ன?''

''இந்த உலகைச் சுடுகாடாக்கும் ஓர் ஊழித் தீயின் பொறி இந்த மண்ணிலிருந்து உற்பத்தியாகிப் போவதில் எனக்கு உடன்பாடில்லை.

• கி. மு. மூவாயிரத்துக்கு முன்பே — உலக நாகரிகம் பறக்கத் தெரியாமல் பையத் பையத் தவழ்ந்தபோதே அதற்குச் சிறகுதானம் செய்த பூமி இந்த பூமி.
இங்கிருந்து ஓர் அநாகரிகமா?

• உலகப் பண்பாட்டு வரலாற்றில் முதன் முதலில் விலங்குகளுக்கு மருத்துவமனை வைத்த சமணம் பிறந்த பூமி இந்த பூமி.
இங்கிருந்து ஒரு கொலை ஆயுதமா?

• போர்க்களத்து ரத்தத்தையும் புண்களின் சீழையும் கண்ணீர்க் களிம்பிட்டுக் காயவைத்த அன்பான புத்தர் அவதரித்த பூமி இது.

இங்கிருந்து பூமியைப் பிணமாக்கும் ஒரு போர்ப் பிரகடனமா?

• வரலாறு வசப்படாத காலத்திலிருந்தே எகிப்துக்குப் பூச்சூட்டி, சால்டியாவைத் தாலாட்டி, கிரேக்க உரோம அரசுகளோடு கிளித்தட்டு விளையாடிய பூமி இந்த பூமி.
இந்த பூமியிலிருந்து ஒரு ரத்தச் சிந்தனையா?

• வாழ்வின் பூரணத்துக்குள் மனிதனைச் செலுத்திய திருவள்ளுவர், இளங்கோ, கம்பர், திருமூலர் போன்ற மகாகவிகள் மலர்ந்த பூமி இந்த பூமி.
இங்கிருந்து ஓர் இரங்கல் பாட்டா?

• பல மேலைநாடுகள் பதினைந்தாம் நூற்றாண்டின் சாயங்காலத்தில் மட்டுமே தரித்திருந்த பட்டுப் பீதாம்பரங்களைப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தன் கைக் குட்டையாய் வைத்திருந்த பூமி இந்த பூமி.
இங்கிருந்து இப்படி ஒரு கந்தல் சிந்தனையா?

• இருநூறு ஆண்டு காலமாய் காலனி ஆதிக்கத்தின் காலணியின் கீழ் நசுக்குண்டாலும் அகிம்சை என்னும் ஜீவ உறுப்பைச் சிதைய விட்டுவிடாத பூமி இந்த பூமி.

இங்கிருந்து உலகத்தின் காதுக்கு ஒரு சாவு மணியா?

கூடாது திருஞானம்!
கூடவே கூடாது.
மானுடத்தின் கண்ணில் எய்யப்படும் ஓர் அம்பு தயாரிக்க இந்த மண்ணில் ஒரு சாதாரண மரம் கூடச் சம்மதிக்காது.

இதை அனுமதிக்க மாட்டேன்.

என்னுயிர்தந்தேனும்மண்ணுயிர்காப்போம்.
நான் ஒரு முடிவுக்கு வந்து விட்டேன்.''

காற்று கடந்து போன பிறகும் கிளைகள் ஆடிக் கொண்டிருப்பது மாதிரி, சொற்கள் முடிந்து போன பின்பும் அவள் உதடுகள் துடித்துக் கொண்டிருந்தன.

•

விழித்தாள்.
அப்போதுதான் தெரிந்தது அவன் உறங்கியிருக்கிறான் என்று.

விளக்கு ஒரு கண்ணால் உறங்கிக் கொண்டிருந்ததில் அறையில் பாதி வெளிச்சமே பரவியிருந்தது.

கடலின் ஆழத்தை ஒலியால் அளப்பது மாதிரி இரவின் நீளத்தை மௌனத்தால் அளக்கலாம்.

பூச்சிகள் கூடப் புலன் அடங்கி விட்டன; எனவே இரவு, பாதிக்கு மேலே பயணப்பட்டிருக்க வேண்டும்.

முன்னும் பின்னும் பக்கவாட்டிலும் ஒரு சிங்கப் பார்வை பார்த்தாள்.

தூரத்துப் படுக்கையில் திருஞானம், தன் கட்டிலுக்கும் குளிரக் கூடாதென்று கம்பளி கவித்திருந்தான்.

எழுந்தாள்!
சப்தங்களை நசுக்கி விட்டு எழுந்தாள்.
தூக்கத்தில் நடப்பவளாய்ப் படுக்கை அறை போனாள்.
தலையணையின் கீழே தற்காப்புக்கு வைத்திருந்த கத்தி எடுத்தாள்.
அதை இடுப்பில் செருகி மறைத்தாள்.
இமைகளைத் திறப்பது மாதிரி ஓசையில்லாமல் நிலவறை திறந்தாள்.
பாதம் பதித்தும் பதியாமலும் செல்லும் காற்றாய் மரப்படிகளில் இறங்கினாள்.

•

உள் அறையை ஒரு மெல்லிய வெளிச்சம்

அறிஞர் அண்ணா, தாம் ரசித்த பொன்மொழிகள், குட்டிக் கதைகளை டைரியில் எழுதி வைப்பது வழக்கம். சென்னை மெரீனாவில் திறக்கப்பட்டுள்ள அண்ணா அருங்காட்சியகத்தில் அண்ணாவின் கையெழுத்தில் இடம்பெற்றுள்ள ஒரு துணுக்கைத்தான் 10 ஆம் பக்கத்தில் படித்தீர்கள்!

— அ. சண்முகசுந்தரம்

மெழுகிக் கொண்டிருந்தது.

தரை தொட்டவனின் பாதங்களை ஏதோ தடுத்தது; உற்றுப் பார்த்தான்.
உருண்டு கிடந்தது ஒரு மைக்ரோஸ்கோப்.
பார்வையை அறையெங்கும் பரப்பினான்.
உடைந்து கிடந்தன குடுவைகள்.
இறைந்து கிடந்தன பிப்பெட்டுகள்.
நொறுங்கிக்கிடந்தனசோதனைக்குழாய்கள்.

ஒருபுட்டியில் சிந்தியபின்னும் மிச்சமிருந்தது சிறிது அமிலம்.

முறிக்கப்பட்ட பறவையின் சிறகுகளாய்க் கழன்று கிடந்தன கையுறைகள்.

அங்கங்கே உலர்பனிக்கட்டிகள் உடைந்து கிடந்தன.

ஆராய்ச்சியில் வெற்றிபெற்ற ஆனந்தக் களிப்பில் விஞ்ஞானக் கூடத்தையே வெறிகொண்டு அழித்து விட்டாரா விஞ்ஞானி.

அவன் கண்கள் மட்டும்
திசைகளைத் துழாவித் துடைத்தன.

அந்தக் கூடத்து வெளிச்சம் முடிந்த இடத்தில் இன்னோர் அறை ஆரம்பமானது.

இடுப்பிலிருக்கும் கத்தியைத் தொட்டுப் பார்த்து விட்டு எட்டு வைத்தான்.

''நில் ஒவியா!
உன் எண்ணம் நிறைவேறாது.''

கால்களில் தைக்கவேண்டிய கண்ணாடித் துண்டுகள் காதுகளில் தைத்ததாய் நின்றான்.

இது என்ன அசரீரி...?
இருட்டுக்குத் தமிழ் தெரியுமா?


இல்லை! இல்லை!
இது தெரிந்த குரல்; திருஞானத்தின் குரல்.

அங்கிருந்த குளிர்பதனப் பேழையின் முதுகுக்குப் பின்னால் அவன் முகம்காட்டினான்.

அவள் இடுப்பில் செருகியிருந்த கத்தியை அவள் மார்பைப் போலவே அவளால் மறைக்க முடியவில்லை.

''நீயா ஒவியா... நீயா...? சமாதானப் புறாவா சமருக்கு வருவது?

குளத்தாமரை மொட்டுக்குள் குத்துக் கத்தியா? எதிர்பார்த்தேன்;
இப்படி எதிர்பாராதது நடக்குமென்று எதிர்பார்த்தேன்.
உன் வார்த்தைக்கும் வாழ்க்கைக்கும்



சம்பந்தமில்லையே ஒவியா.''

''இல்லை;
சம்பந்தமில்லாமலில்லை.
சீழ்வைத்தபுண் அறுக்காமல் ஆறாது;
மிருகம் தன் தோலை உரிக்காமல் தாராது;
பயிர்க் கொலை செய்யும் பூச்சிக்கு மருந்து தெளிப்பது உயிர்க்கொலை ஆகாது.''

''அது தேவையில்லை.
உன் தந்தையோடு எனக்கு உடன்பாடு நடந்து ஒரு மணி நேரமாகிறது.''

ஒவியாவின் கண்களில் மின்னல் கோடுகளாய் ஆச்சரியக் குறிகள்.

''என்ன... என்ன உடன்பாடு?''

''பேச்சு வார்த்தை முற்றுப் பெற்றது.''

''என்ன பேச்சு வார்த்தை...?

''உங்கள் மனசு மாற வேண்டும்'' என்றேன்.
''சூரியனை மேற்கில் உதிக்கச் சொல்'' என்றார்.

''உங்கள் மகள் அழுகிறாள்'' என்றேன்.
''கண்ணீர் வாழ்க்கையின் வடிகால்'' என்றார்.

''நீங்கள் செய்வது இந்திய வரலாற்றுக்கே இழுக்கு'' என்றேன்.

''இந்தியர் அல்லாதாரின் அரசுகள் எழுந்ததும் விழுந்ததும்தான் இந்தியாவின் வரலாறு'' என்றார்.

''உலகுக்கு அன்பு போதித்த புத்தன் பிறந்த பூமியல்லவா'' என்றேன்.
''அதனால்தான் அவரை இங்கு வைத்துக் கொள்ளாமல் ஏற்றுமதி செய்து விட்டோம்'' என்றார்.

''மனிதகுலத்தின் மீது உங்களுக்கு அன்பில்லையா'' என்றேன்.
''மனிதகுலத்துக்கு என் மீது அன்பிருக்கிறதா'' என்றார்.

''மானுடத்தைக் கொல்லும் இந்த மஞ்சள் மழைச் சூத்திரத்தை விற்கவிட மாட்டோம்'' என்றேன்.
''உன்னை இந்த மண்ணில் நிற்க விட மாட்டேன்'' என்றார்.

''என்னையும் ஒவியாவையும் தாண்டி நீங்கள் எட்டு வைக்க முடியாது'' என்றேன்.
''தடுத்தால் — உங்கள் பிணங்களிரண்டும் என் கடைசிப் படிக்கட்டுகள்'' என்றார்.

திரௌபதியின் சேலையாய் எங்கள் வார்த்தைகள் வளர்ந்தன.
கடைசியில் —
அந்த மஞ்சள் மழைச் சூத்திரம் (Formula of yellow rain)
அடங்கிய கோப்புகளைக் குறிவைத்துக் குதித்தோடினேன்.

உன்னை அழித்து விடுகிறேன் என்று அமிலக்குடுவையோடு
ஓடி வந்தார்.

அதற்குப் பிறகு எங்கள் பேச்சுவார்த்தை

முற்றுப் பெற்றது.''

அவன் பேசப்பேச உணர்ச்சியின் உச்சத்திற்கு ஏறிக் கொண்டேயிருந்த ஓவியா அவன் மௌனமானதும் —
''எங்கே... எங்கே என் தந்தை...?'' என்று கத்தினாள்.

''அவசரப்படாதே ஓவியா. உன் தந்தை பத்திரமான இடத்தில் பாதுகாப்பாக இருக்கிறார்.
இதோ பார்!
இது குளிர்பதனப் பேழை
சாதாரணக் குளிர்பதனப் பெட்டி — மைனஸ் 20 டிகிரி.
இது குளிர்பதனப் பேழை — மைனஸ் 50 டிகிரி.
கிருமிகளைப் பாதுகாப்பதற்கு இந்த சீதோஷ்ணமே ஏற்றது.
இதற்குள்தான் உலகத்தின் பெரிய கிருமி ஒன்றைப் பாதுகாத்திருக்கிறேன்.
இதோ பார்.''
அவன் பேழை திறந்தான்.
குருதி உறைந்து குளிரில் விறைத்த விஞ்ஞானியின் பிணம் வெளியே விழுந்தது.

பார்த்தாள்.
பார்த்தவிழி பார்த்தபடி பார்த்துக் கொண்டேயிருந்தாள்.
உயிர்வாங்க வந்தவள் உயிர்உறைந்து நின்றாள்.

அவள் லட்சியம் வென்றதென்று அவள் ரத்தம் சத்தமிட்டுக் கைதட்ட, ஆனால் ஒரே ஒரு பாசநரம்பு மட்டும் உள்ளுக்குள் துடிதுடிக்க அவள் நின்றது நின்றபடி நின்றாள்.

''உன் எண்ணத்தை விட்டுவிடு ஓவியா. உன்னால் பிணத்தைக் கொலை செய்ய முடியாது.''

அவள் பேசவில்லை.

''சொல்.
உதடு திறந்து ஒரு வார்த்தை சொல்.
இது பிழையா?
நான் செய்தது கொலையா?''

அவள் உடல் அசையாமல் உதடு மட்டும் அசைத்தாள்.

''இல்லை.
பயிர்க் கொலை செய்யும் பூச்சிக்கு மருந்து தெளிப்பது உயிர்க்கொலை ஆகாது.''

''போதும்; இது போதும்.
இந்த உத்தமசீலி சொல்லும் ஒரு வார்த்தை போதும்.
இந்த சத்தியவதி சொல்லும் சாட்சி ஒன்று போதும்.

சட்டமே!
எனக்கொரு விலங்கு கொடு.

தர்மமே!
எனக்கொரு விருது கொடு.

விலங்கின் எடையை விடவும் விருதின் எடை அதிகம்.

வாழ்வின் மர்மம்தேடி இந்த மலைவாசல் வந்தேன்.
இதோ! மரணத்தின் மர்மம் தேடிப் போகிறேன்.
என் மரணம் கூட மானுடத்தை நேசிக்கும் இன்னொரு வடிவம்தான்.

இதோ!
உயிர்குடிக்கும் இந்தச் சோதனைச் சாலையை உடைத்து விட்டேன்.

மனிதகுலத்துக்குக் கொள்ளிவைக்கும் கோப்புகளை எரித்து விட்டேன்.

ஏ! மனிதாபிமானம் மறந்த விஞ்ஞானமே! மாறி விடு.

அகிலத்தைச் சிதைக்க வந்த ஆறாம் அறிவே! அன்பு கொள்.

பூமி உருண்டையை உடைக்கவந்த சோதனைக் குடுவையே!
உடைந்து போ.

இக மண்டலத்தை ஆளும் எங்கள் பிதாக்களே! புதிய வீடுகளே மனிதத் தேவை; புதிய சுடுகாடுகள் அல்ல.

நானும் பார்க்கிறேன்.
நாணயங்கள் செல்லாது என்று அறிவிக்கிற எந்த அரசாவது ஆயுதங்கள் செல்லாது என்று அறிவிக்காதா?

எந்த கிரகத்திலும் காற்றில்லை.
இருப்பது ஒரே பூமி.
இருப்பதை அழித்து விட்டு எங்கே குடியேறப் போகிறீர்கள்?

இதோ!
மானுடம் காக்க நான் மரிக்கிறேன்.
என் பிணக்குழியிலாவது பூக்கள் வெள்ளையாய்ப் பூக்கட்டும்.

சட்டம் என்னைக் கொன்று விடும்;
பரவாயில்லை.
ஆனால், தர்மம் — தன் தேசியக் கொடி கொண்டு என் தேகம் போர்த்தும்.

ஓவியா!
என் கனவுகளைக் கலைத்தவளே!

கனவுகளில் கன்னிமுலைப்பால் பருகிக் கொண்டிருந்தவனை எதார்த்தத்தின் உப்புத் தண்ணீரில் இறக்கி விட்டவளே!

இப்போது சொல்.
நான் மனிதனாக வளர்ந்திருக்கிறேனா?''
சிறிது நேர மௌனம் கடந்து அவள் அசரீரி மாதிரி பேசினாள்:

''இப்போதுதான் — இந்த நிமிஷம்தான் — என் மனசின் உயரம்தாண்டி வளர்ந்திருக்கிறீர்கள்'' அவன் திருப்தியாய்ச் சிரித்தான்.
வெளியே —
வெளுக்கப் பார்த்தது கிழக்கு.
வழியில் புதுவிடியல் வந்து கொண்டிருந்தது.
தன் மேற்பரப்பில் அப்படி ஒரு சம்பவம் நடந்ததை அறியாமலேயே பூமி சுற்றிக் கொண்டே இருந்தது.

(நிறைந்தது)


பா. ரா.

அடிக்கடி மாறும் ஆளுநர்கள்!

தமிழ் நாட்டுக்கு வருகிற ஆளுனர்களில் பெரும்பாலோருக்கு ஓர் ஆசை ஏற்படுகிறது. தமிழ் கற்றுக் கொண்டு தமிழில் சில வார்த்தைகளாவது பேசி விட வேண்டும் என்பதுதான் அந்த ஆசை. அவர்கள் தமிழாசிரியரை அமர்த்தித் தமிழ் கற்றுக் கொள்ள முயன்றிருக்கிறார்கள்.

துரதிருஷ்டம் என்னவென்றால் பாதி டியூஷனிலேயே கவர்னர்களுக்குப் பதவி போய் விடுகிறது. அல்லது வேறு மாநிலத்துக்கு மாற்றப்பட்டு விடுகிறார்கள்.

'தமிழ் மக்களாகிய உங்களுக்கு வணக்கம்' என்ற நாலு வார்த்தைகளைக் கற்றுக் கொண்டு ஒரு பொதுக் கூட்டத்தில் சொல்லி மகிழ்வதற்குள் இன்னொரு மாநிலத்துக்கு மாற்றப்பட்டு, 'இன்ன மாநில மக்களாகிய உங்களுக்கு வணக்கம்' என்ற வார்த்தைகளை அம்மாநில மொழியில்



மீண்டும் கற்க வேண்டிய பரிதாப நிலைக்கு உள்ளாகிறார்கள். இது, கவர்னர்களின் (பாவம், அனேகமாக எல்லோரும் வயசான பேர்வழிகள்தான்) மூளையை எவ்வளவு தூரம் பாதிக்கும் என்று மத்திய அரசு அனுதாபத்துடன் சிந்தித்துப் பார்ப்பதே இல்லை!

தமிழ்நாட்டு மக்களை விரும்பிய கவர்னரின் மனநிலை எப்படி இருக்கும்? தமிழை ஆர்வமாகக் கற்க விரும்பின அவரது ஆவலுக்கு எத்தனை பெரிய அடி? போதாக்குறைக்கு அந்தத் தமிழ் டியூஷன் வாத்தியார் வேறு 'போச்சே ஒரு நல்ல கிராக்கி' என்று வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொள்ள வேண்டிய துர்ப்பாக்கியத்துக்கு உள்ளாகிறார். அடுத்து வரும் கவர்னரும் தமிழ் கற்கவிருக்கலாம் என்றாலும் இவரே டியூஷன் வாத்தியாராக நியமிக்கப்படுவார் என்பது நிச்சயமில்லையே!

'ஆளுனர்களை அடிக்கடி மாற்ற அவர்கள் என்ன பிரஷர் குக்கர் காஸ்கட்டுகளா?' என்று என் மனைவி சமையற்கட்டிலிருந்து கண்டனக் குரல் எழுப்புகிறாள்.

இல்லை! இல்லவே இல்லை! அந்த உவமை தப்பு'' என்று நான் உடனே மறுக்கிறேன். ''காஸ்கட் ஒத்துழைக்கவில்லையென்றால் சாப்பாடு வேகாது. பட்டினிதான்! ஆனால் கவர்னர்கள் ஒத்துழைக்காவிட்டால் மத்திய அரசின் பருப்பு வேகாது

என்று சொல்ல முடியாது! பிரதமரின் அதிகாரம் செல்லுபடி ஆகும். மத்திய அரசு, 'உனக்கு அதிகாரம் ஒன்றுமில்லை. உன்னைக் கேட்காமலே மாநில அரசை நாங்கள் கவிழ்க்கலாமாக்கும்!' என்ற விதிமுறையை அரசியல் சட்டத்தில் வைத்துக் கொண்டிருக்கிறது!''

மத்திய அரசு மாநில ஆளுனரை அவமதிப்பது கிடக்கட்டும்; கவர்னர்களுக்கு ராஜ்பவனத்திலேயே கிடைக்கிற அவமரியாதையைக் கற்பனை செய்து பார்த்தால் மனசு நெகிழ்ந்து போகிறது.

உதாரணமாகப் புதிதாக வந்த கவர்னர், ராஜபவனத்திலுள்ள ஒரு தோட்டக்காரரைக் கூப்பிடுகிறார். ''அந்தப் பூந்தொட்டி உருண்டு கிடக்கறது பார். நிமிர்த்தி வை'' என்று ஒரு வார்த்தை சொல்கிறார் என்று வையுங்கள்.

தோட்டக்காரன், ''சரிதான் போ சார். நீயே உருண்டுடப் போகிறே. பூந் தொட்டி உருண்டு கிடந்தா என்ன? போன கெவுனரு கூட இப்படித்தான் எதுனா சொல்லிகினு இருப்பாரு. அவரை ஏரைக் கட்டி அனுப்பிட்டாங்க... நீ எத்தினி நாளு?'' என்பது போல இளக்காரமாகப் பேசக்கூடும்.

காரியதரிசியை கவர்னர் கூப்பிட்டு, ''தமிழ் கற்றுக் கொள்ள ஆசையாயிருக்கிறது. யாராவது நல்ல தமிழ்ப் பேராசிரியரை அழைத்து வாருங்கள்,'' என்கிறார்.

காரியதரிசி அலட்சியப் புன்னகையுடன், ''ரெண்டு மாசம், மூணு மாசத்துக்கெல்லாம் எந்தப் பேராசிரியர் டியூஷனுக்கு வரச் சம்மதிப்பாங்க. நான் வேணும்னா அ.. அ.. கற்றுத் தர்றேன்'' என்பார்.

இதை விட ராஜபவன் சமையல் இலாகாவுக்குத்தான் அதிகப் பிரச்னை!

மாற்றலாகி வரும் புதிய கவர்னருக்குப் பிடித்த உணவுப் பழக்கம் என்ன என்பதைத் தெரிந்து கொண்டு, அதன்படி ஓரளவு சமைத்துப் பழக ராஜபவன் சமையல் இலாகாவுக்கு இரண்டு மாசமாவது பிடிக்கும்.

கொஞ்சம் கொஞ்சமாகச் சமையல்காரர்களிடம் ''இது இன்னும் இப்படி இருக்க வேண்டும், ''மசாலா இதற்குப் போட வேண்டியதில்லை'' என்பது போல் ஆளுனர் திருத்திக் கொண்டு வந்து, ஒருவழியாக அவர் ருசிக்கேற்ற நல்ல சமையல் அவர் தட்டில் வந்து விழுவதற்குள் நாற்காலியைப் பறித்து விடுகிறார்கள்!

அடுத்து வரும் கவர்னரோ — முந்தின கவர்னருக்கு நேர் எதிர். முந்தியவரின் சாப்பாட்டு அயிட்டம் ஒன்று கூட இவருக்குப் பிடிக்காது. 'வற்றல் குழம்புதான் என் உயிர்' என்று தம் உயிர் மைய ரகசியத்தை வெளியிடுவார். ராஜ்பவன்காரர்கள் முந்தைய கவர்னருக்காகக் கற்றுக் கொண்ட சமையல் அயிட்டங்களைக் கஷ்டப்பட்டு மறக்க வேண்டும். வற்றல் குழம்பு செய்ய முயற்சி எடுக்க வேண்டும்.

அந்தந்த கவர்னரும் தமது சமையல்காரரைப் பின்னோடு அழைத்து வரலாமென்றாலோ, 'மூணு மாசம் ஆறு மாசத்துக்கெல்லாம் ஊரை விட்டு ஊர் நான் வர மாட்டேன்' என்று சமையல்காரர் மறுத்து விடலாம்.

எல்லாம் கிடக்க கவர்னர்களுக்கு இன்னொரு வகையிலும் அவப் பெயர் ஏற்பட வாய்ப்புள்ளது.

ஐந்து வருடங்களாவது தமிழ் நாட்டில் ஒரு கவர்னர் இருந்தால்தான் தமிழகத்தில் எந்த இடம் எங்கே இருக்கிறது என்று நன்கு தெரிந்து கொள்ளலாம். இல்லாவிட்டால், ''மலைக் கோட்டையா? ஆமாம். ஆமாம். நாம் கூடப் போனோமே. கோயமுத்தூரில் மீனாட்சி அம்மன் கோவில் அந்த மலைக் கோட்டை மேலதானே இருக்கிறது'' என்று எங்காவது உளறி வைப்பார். இது அவரது பொது அறிவுக்கு எத்தனை இழுக்கு!

அப்புறம் கிரானைட் கற்கள் விவகாரம். எல்லோருக்கும் தெரியும். கிரானைட் கற்கள் மிக அதிகமான விலை விற்கிறது. புதிதாக வந்த கவர்னர் அடிக்கல் நாட்டப் போகிறார் என்று கல்லில் பெயரைச் செதுக்கி வைத்து விட்டு, கல்லை லாரியில் ஏற்றுவதற்கு நாலு நாள் முன்னதாகவே கவர்னருக்கு மாற்றல் ஆகியிருக்கும். ஆகவே அவரைக் கொண்டு அடிக்கல் நாட்டு விழா செய்ய முடியாமல் போய் விடும். அவர் பெயர் செதுக்கிய கிரானைட் கல் வேஸ்ட்!

இதற்காக என்ன செய்யலாமென்றால்— கல்லில் கவர்னரின் பெயரைக் குறிப்பிடாமல் 'மேதகு தமிழக ஆளுனரால் நாட்டப்பட்டது' என்று பொதுவாகச் செதுக்கி விட வேண்டும். அப்போது எவ்வளவு சீக்கிரம் கவர்னர்கள் மாறினாலும் கவலைப்பட வேண்டாம்!

அடுத்த இதழில்...



வண்ண மலர்களில் வளமான வியாபாரம்



* திண்டாடுகிறார்!

நீங்கள் கேட்டவை — தராசு

சதாம் ஹுசேன்–ஜார்ஜ் புஷ்: யார் திறமைசாலி?



* அல்லாடுகிறார்!

o **சி.த. க., மருதூர் தெற்கு.**

? **இராமஜென்மபூமி, பப்ரி மஸ்ஜித் பிரச்னை எந்த அளவில் உள்ளது?**

! நீறு பூத்த நெருப்பு.

o **பாலா. சித்தார்த்தன், தாம்பரம் மேற்கு.**

? **'தி வீக்' ஆங்கில இதழில் வெளியாகியுள்ள கலைஞரின் வண்ணப்படத்தைக் கவனித்தீர்களா? அவர் முன் மேஜையில் கிடக்கும் இரு நூல்களில் ஒன்று பகவத் கீதை, மற்றொன்று ராஜாஜி வாழ்க்கைவரலாறு....**

! புகைப்படத்துக்காக வைக்கப்பட்டவை எனில் பரிதாபம். படிப்பதற்காக வைக்கப் பட்டவை எனில் மகிழ்ச்சி. அவற்றின்படி நடந்து கொள்வதற்காகப் படிக்கப்படுகின்றவை எனில் மரியாதை!

o **எஸ். நாராயணன், தஞ்சை.**

? **திருமதி கலீஷாபீ மஹபூப் என்ற முகம்மதியப் பெண்மணி தியாகராஜர் உற்சவத்தில் நாதஸ்வரம் வாசித்தது பற்றி...?**

! இவருக்கு முன்பே ஷேக் சின்ன மௌலானா பற்றி நாம் அறிவோம். கலை என்பது ஜாதி மதங்களுக்கு அப்பாற்பட்டது. மெய்யான இறையுணர்வும் அப்படியே.

o **எஸ். எஸ். பூங்கதிர், திருவெண்ணெய் நல்லூர்.**

? **சதாம் ஹுசேன், ஜார்ஜ் புஷ் — யார் திறமைசாலி?**

! அவர் குவெய்த்தை ஆக்கிரமித்துவிட்டு அல்லாடுகிறார். இவர் குவெய்த்தை விடுவிக்கப் புகுந்துவிட்டுத் திண்டாடுகிறார். இருவரையும் விடத் தாம்தான் திறமைசாலி என்று சமாதானத்துக்கு உழைத்து வரும் கோர்பச்சேவ் நிரூபித்து வருகிறார்.

o **நல்லாலம் காசிதாசன், கீழ்கொவளவேடு.**

? **ராமராஜன் ஐம்பது லட்சம் கொடுத்து மீண்டும் அ. தி. மு. க. வில் சேர்ந்து விட்டாராமே?**

! ஐம்பது லட்சம் கொடுத்தாரோ இல்லையோ, நிச்சயம் சுயகௌரவத்தை விட்டுக் கொடுத்துத்தான் அவ்விடத்தில் சேர வேண்டியிருக்கும்.

o **குரும்பல் பாலாமணி,**

? **கிரிக்கெட் விளையாட்டுக் களம் போர்க்களமாக மாறி வருவது பற்றி...?**

! ராமன் லம்பாவைத் தாக்கப் போன ரஷீத் பட்டேல் விவகாரம்தானே...! வெட்கக்கேடு. கனவான்களின் ஆட்டம் என்பதைக் கிரிக்கெட் வீரர்கள் மறக்கும் போது கண்ட்ரோல் போர்டு கடுமையான நடவடிக்கை எடுக்கத்தான் வேண்டும்.

o **பி. கே. மூர்த்தி, மதுரை.**


? **'யாரோ இவர் யாரோ' என்ற பாடல் அருணாசலக் கவிராயரின் ராமநாடகக் கீர்த்தனையல்லவா? சென்னைத் தொலைக்காட்சி பாபநாசம் சிவன் என்று அறிவிப்புச் செய்ததே?**

! நாட்டின் குழப்பமான நிலைமை தொலைக் காட்சியையும் பாதிக்கத்தானே செய்யும்... அதுசரி, எதிரொலிக்கு எழுத வேண்டியதைத் தராசுக்கு அனுப்புகிறீர்களே... குழப்பமா?

* ராஜதந்திரம்!



* மீண்டும் அ. தி. மு. க.?





* சென்ற தேர்தலில்...



* 'ஜம்'மென்று...

O கே. இந்து குமரப்பன், விழுப்புரம்.

? அமிதாப்பச்சன் என்ன செய்து கொண்டிருக்கிறார்?

! 'ஹம்' வெற்றியில் 'ஜம்'மென்று திளைத்துக் கொண்டிருக்கிறார்.

O அ. கயல்விழி, விருத்தாசலம்.

? ஜோசியர்கள், சாமியார்கள் — இன்றைய அரசியல் ஹீரோக்கள் யார்?

! ஜோசியம் சொல்லும் சாமியார்கள்!

O என். சம்பத், திருச்சி *

? மூப்பனார் எடுத்த முடிவினால்தான் சென்ற தேர்தலில் காங்கிரஸ் பல இடங்களில் தோல்வியைத் தழுவியதாகக் கூறப்படுகிறதே?

! தமிழக காங்கிரஸ் சுய கௌரவத்தை இழந்து தனக்கு ஒதுக்கப்பட்ட எல்லா இடங்களிலும் வெற்றி பெறுவதை விட, சுய கௌரவத்தைக் காப்பாற்றிக் கொண்டு குறைந்த இடங்களை வென்று சக்தி வாய்ந்த எதிர்க்கட்சியாகச் செயல்படுவது மேல் என்பதே என் கருத்து. போகப் போகச் சுய பலம் பெருகும். இல்லையெனில் நிரந்தர சனம் தான்.

O மங்களம், மதுரை.

? முன்பு எம். ஜி. ஆர். ஆட்சியை இந்திரா காந்தி உதவியுடன் கலைஞர் எவ்விதக் காரணமும் இல்லாமல் கலைத்தாரே? இப்போது ஜனநாயகம் செத்து விட்டது என்கிறாரே?

! கலைஞரும் இந்திராவும் சேர்ந்து முன்பு செய்த ஒரு தவறைக் காரணம் காட்டி, இன்று ஜெயும் சந்திரசேகரும் சேர்ந்து ராஜீவ் ஆசியுடன் மறுபடி தவறு செய்யக் கூடாது. முன்பு ஒருவர் செய்த தவறு இன்று வேறு ஒருவர் தவறு செய்ய லைசென்ஸ் வழங்கியதாக ஆகிவிடாது. தவறுகள் படிப்பினையாக விளங்க வேண்டுமே தவிர, முன்னுதாரணங்கள் ஆகக் கூடாது.

O நூர், மதுரை.

? மலிவு விலை மது, விலைவாசி உயர்வு, ரௌடியிஸம், இலவசத் திட்டங்கள் அறிமுகம் — வாபஸ் குழப்பம், போன்ற எத்தனையோ பல முக்கிய கேள்விகளை விடுத்து, கலைஞருக்குச் சாதகமான பிரச்னைகளை மட்டுமே விவாதித்ததை உங்கள் அறியாமை என்பதா? அனுதாபம் என்பதா? விளக்குங்களேன், ப்ளீஸ்?

! கலைஞர் பேட்டி அவர் ஆட்சிக் கவிழ்ப்புத் தொடர்பான அம்சங்களுக்கு மட்டுமே முக்கியத்துவம் தந்தது. அந்தப் பேட்டி அவர் ஆட்சி பற்றிய விமர்சன விவாதம் அல்ல. அவர் ஆட்சியில் நாம் கண்ட குறைகள் குறித்து அவ்வப்போது நாம் விலாவாரியாகக் கண்டித்து எழுதி வந்திருக்கிறோம். இதைக் கலைஞரே உணர்ந்து பேட்டியின் போதும் கிண்டலாக எதிர்த்திருக்கிறார். எனவே இதில் அறியாமையோ அனுதாபமோ ஏதும் இல்லை. கலைஞர் ஆட்சியில் இருந்த சில பல குறைகள் அவர் ஆட்சி டிஸ்மிஸ் செய்யப்படப் போதிய காரணங்கள் அல்ல; ஜனநாயக மரபுகளும், அரசியல் சாசனச் சட்டமும் புறக்கணிக்கப்பட்டுள்ளன என்பதே நம் கருத்து.

O எஸ். வாணி சங்கர், சென்னை — 5.

? கருணாநிதி செய்தால் ராஜதந்திரம், ஜெயலலிதா செய்தால் ஆணவமா? இந்திரா காந்தி வெற்றிகரமாக இயங்கிய நேரத்தில் தி. மு. க. வோடு செய்து கொண்ட ஒப்பந்தப்படி சட்டமன்றத்தில் ஒரு இடம் கூட இல்லாமல் காங்கிரஸ் முற்றாகத் துறந்ததை விடவா இன்றையத் தேர்தல் கூட்டணி ஒப்பந்தம் மோசம்?

! கருணாநிதியின் ஆணவம், ஜெயலலிதாவின் ராஜதந்திரம் என்றே வைத்துக் கொள்வதானாலும் பிரச்னை அதுவல்ல. மத்தியில் பிரதமராக வர ஆசைப்படுகிறவர்களின் சுயநலம் காரணமாகத் தமிழக காங்கிரஸ் காவு கொடுக்கப்படுகிறது என்பதே கவனத்துக்குரியது. பலி கொடுப்பது என்று வந்துவிட்டபின் ஒரே வெட்டாக வெட்டினால் என்ன, பட்டினி போட்டுக் கொன்றால் என்ன?

* ரூ. 20 பரிசு பெறுபவர்:

என். சம்பத்,
35, சின்னக் கடை வீதி,
திருச்சி — 620 002.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன். இணை ஆசிரியர்: சீதா ரவி.
முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: நிர்வாகக் காரியாலயம்: 431543, 434157; 434190. ஆசிரியர் குழு அலுவலகம்: 434145.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 130/-; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 300/-; விமானத் தபால் ரூ. 700/-.
ஆறு மாதச் சந்தா — உள்நாடு: ரூ. 65/-; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 150/-; விமானத் தபால் ரூ. 350/-.

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka



Gx/247.90 TmR